கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 28 செவ்வாய்க்கிழமை (12.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 047

## ஜனாதிபதி மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

# வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல்; பாதுகாப்பு வலயம் படிப்படியாக நீக்கம்

## புலிச் சந்தேக நபர்கள் ஒரு வருடத்தில் பெற்றோரிடம்



கொழும்பு, ஜனவரி. 12

★ பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையை இயங்க வைத்தல் - வடக்கு மாகாண சபையை - இயங்க வைத்தல்.

★ வடக்கில் தற்போது நிலவும் பாதுகாப்பான நிலைமைகளைக் கருத்தில் எடுத்து அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுத்தல்.

★ தற்போது காவலில் உள்ள விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்களை அடுத்த ஒரு வருட காலத்திற்குள் விடுவிப்பது.

"மஹிந்த சிந்தனை - தொலைநோக்கு" என்ற மகுடத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்கண்ட அம்சங்களும் அடங்குகின்றன.

கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து மொத்தம் 14 தலைப்புக்கள் கொண்ட தமது விஞ்ஞாபனத்தை ஜனாதிபதி வெளியிட்டார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விளம்பரங்கள்: நாளைக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜன. 12

தேர்தல் தொடர்பாக சட்டவிரோதமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் 'கட் - அவுட்'களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க பொலிஸ்மா அதிபரை வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான தேர்தல் விளம்பரங்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத்துக்கு ஆதரவான சில குழுக்கள் ஈழப் போராட்டத்துக்கு வழி அமைக்க எத்தனம்

## தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து ஜனாதிபதி உரை

கொழும்பு, ஜனவரி 12

பயங்கரவாதத்திற்குத் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்துவரும் சில குழுக்கள், மீண்டுமொரு ஈழப் போராட்டத்திற்கு வழி அமைத்துக் கொடுக்க முயற்சி செய்கின்றன என்று எச்சரித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த எத்தனத்தைத் தடுக்க இந்நாட்டு மக்கள் அனைவரும் தயாராக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நேற்று அவர் தமது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உரையாற்றியபோதே இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அந்த நிகழ்வில் உரை நிகழ்த்துகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2005 இல் நான் நாட்டைப் பாரமெடுக்கும்போது இந்நாடு பாரிய பயங்கரவாதப் பிரச்சினையை எதிர்கொண்டிருந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்று இங்கிருந்து நாட்டை அழித்துக்கொண்டிருந்தது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## திஸநாயகத்துக்கு பிணை அனுமதி



கொழும்பு, ஜன. 12

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச்சட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு, கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் இருபது வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர் திஸநாயகம், அவருக்கு எதிரான குற்றத் தீர்ப்பு விவகாரம் குறித்து மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையில் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் அவரை ஐம்பதாயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல நேற்று அனுமதி அளித்தது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனைப் பல்கலை. மாணவியான தமிழ் யுவதியை விடுதலை செய்க!

### அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம் வற்புறுத்து

கொழும்பு, ஜன. 12

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பேராதனைப் பல்கலைக்கழக மாணவி துவாரகாவை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என அனைத்துப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் போராட்டம் தொடர்கின்றது

கொழும்பு, ஜன. 12

தங்கள் விடுதலை கோரி சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்றும் தமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இந்தப் போராட்டத்தில் 24 பேர் பங்குபற்றினர். அவர்களுள் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மீண்டும் சிறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யாழ்ப்பாணத்தில் கட்டடம் தேவை

★ உடனடியாக கொள்முதல் செய்யப்படும்.
காணியும் கட்டடமும் உடனடி கொள்முதலுக்கு தேவை.
வர்த்தகத் தேவைகளுக்காக ஏறத்தாழ 20-30பேர்ச்சேஸ் கட்டடத்துடன் பிரதான முகப்பு நகரை நோக்கியதாக 6-10 வாகனங்கள் நிறுத்தக் கூடிய வசதியுடன்.

★ நீண்ட கால குத்தகைக்கு.
ஹோட்டல் விடுதி நடத்துவதற்கு 4-8 அறைகள் கொண்ட வீடு தேவை.
நட்சத்திர தரத்திற்கு நாம் திருத்தி அமைப்போம். யாழ்ப்பாணத்தில் வசதியான - பிரத்தியேகமான பகுதியில் இருத்தல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தும் வசதி மற்றும் கவர்ச்சியான பூங்காவுடன் விரும்பத்தக்கது.

16-17ஆம் திகதிகளில் நாம் யாழ்ப்பாணம் வருகையில் இடங்கள் பார்வையிடப்படும்.
தயவு செய்து தொடர்பு கொள்க: றஞ்சித் பெர்னாண்டோ.
(93734) T.P 0112682187, 0777557971.

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் முன்னணி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

★ உதவிக் கணக்காளர் (கணனி).
★ தகவல்தொழில்நுட்ப உதவியாளர்.
★ காசாளர் (கணனி).
★ விற்பனை பிரதிநிதி (முன் அனுபவமுள்ளவர்கள்).

தகமை:- க.பொ.தா (சா/த) கணிதம் - ஆங்கிலம்
கணக்கு அனுபவம், கணனி அறிவு அவசியம்.

தொடர்பு:- விளம்பர இலக்கம் 3970
மே/பா: உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/564060)

## IMMEDIATE VACANCIES

Applications are invited from suitable persons to fill the following vacancies immediately.

01. Technical Officers.
02. Supervisors.
03. Store Keeper.
04. Data entry Officers.

Applications with Bio data and support documents should be forwarded to the following address on or before 20.01.2010.

Manager, Human Resources,
Euroville Engineers and Constructors (Pvt) Ltd,
866, Point Pedro Road,
Nallur, Jaffna.
(CS 64057)


## மரண அறிவித்தல்

### ஸ்ரீவத்ஸ தியாகராஜ ஐயர் கணேச சிவசண்முகசர்மா



கொழும்புத்துறையைச் சேர்ந்த ஸ்ரீவத்ஸ தியாகராஜ ஐயர் கணேச சிவசண்முகசர்மா (முன்னாள் பிரதம காசாளர், ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம், முன்னாள் அர்ச்சகர், நல்லூர் சிவன் கோவில்) அவர்கள் நேற்று (11.01.2010) திங்கட்கிழமை தமது 76ஆவது வயதில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் தியாகராஜ ஐயர், அமரர் இராஜேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமரர் இரத்தினசபாபதிக்குருக்கள்-அமரர் புவனேஸ்வரி அம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் சௌந்தராதேவியின் பாசமிகு கணவரும் சண்முகானந்தசர்மா, சிவகுமாரசர்மா, சியாமளாதேவி, பாலசுப்பிரமணியக் குருக்கள், ராமேஸ்வரசர்மா(அமரர்), ரமாராணி, சங்கரராஜக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாதேவி, பிறேமாவதி, சரவணபவசர்மா, நாகேஸ்வரி, சாந்தி, உமாபதி சர்மா(அமரர்), சுகுமாரி, சரஸ்வதி அம்மா (அமரர்) - சாம்பசிவ ஐயர் (அமரர்), பாலாம்பிகை அம்மா (அமரர்)- சிவராஜ ஐயர் (அமரர்), சுப்பிரமணியக்குருக்கள் (அமரர்)- அமிர்தகுணவல்லி அம்மா, தங்கசாமி சர்மா (அமரர்)- அன்னபூரணி (அமரர்), சணேசசர்மா (அமரர்)- இராஜலஷ்மி, ஜெகதீஸ்வரி - வரதராஜசர்மா, குமாரசாமிக்குருக்கள் - பரமேஸ்வரி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருஷ்ணராஜா (முகாமையாளர், ஏசியன் பெயின்ற்ஸ் (லங்கா) லிமிட்டற் யாழ்.விநியோக நிலையம், யாழ்ப்பாண இரும்பகம்), சசிகலாதேவி, மனோரஞ்சிதம், பாலசரஸ்வதி, அனுராதா, மீனலோஜினி, இராஜேஸ்வரி (ஆசிரியை, சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி (ஆசிரியை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), ஸ்ரீதரசர்மா (ஓய்வூதியர், இலங்கை வங்கி), முத்துச்சாமிக்குருக்கள் (பிரதம குரு, உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானம்), இராமச்சந்திரசர்மா (அமரர்), முரளிதரக்குருக்கள் (பிரதமகுரு, அரியாலை சித்திவிநாயகர் தேவஸ்தானம்), சுந்தரேஸ்வரசர்மா (பிரதமகுரு,மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், முன்னாள் உத்தியோகத்தர், இ.போ.ச. காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கி.யாதவராஜன் (மாணவன், பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக் கழகம்), கி.பார்க்கவன் (மாணவன் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), ஸ்ரீ.கலாதரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கூ.அ.உ.ஆணையாளர் அலுவலகம்) - க.பிரவீனா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், நல்லூர்), ஸ்ரீ.ரிஷிகேசன் (முகாமைத்துவ உதவியாளர், யாழ்.மாவட்டச் செயலகம்)- ரி.சிந்துஜா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேசசபை, மானிப்பாய்), ச.காயத்திரி (முகாமைத்துவ உதவியாளர், மீள்குடியேற்ற அலுவல்கள் அமைச்சு, கொழும்பு)- வா.சக்திதரன் (உதவி முகாமையாளர், யூனியன் வங்கி, கொழும்பு), மு.சிவகோசரன் (கணனிப்பொறியியலாளர், ஸீ லாப் நிறுவனம், வெள்ளவத்தை)-சி.ஸ்ரீபத்மப்பிரியா (பயிலுநர் ஆசிரியை, மஹரகம), மு.இரகுநாதன் (உத்தியோகத்தர், ஏசியன் பெயின்ற்ஸ்(லங்கா) லிமிட்டற் யாழ்.விநியோக நிலையம், யாழ்ப்பாணம் இரும்பகம்), மு.ஜெகநாதன் (அர்ச்சகர், உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்), இ.வைஷ்ணவி ( மாணவி, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இ.பார்த்திபன் (மாணவன் யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), மு.ஸ்ரீவித்தியா (மாணவி, யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம்), மு.ஸ்ரீபிரணவரூபன் (மாணவன், யா/பரி.யோவான் கல்லூரி), சு.பூர்வஜா (மாணவி, யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் க.பூஜிதா, ச.அக்ஷரன், ச.அக்ஷிகா, சி.சுபேஷனன், சி.சாருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.01.2010) திங்கட்கிழமை இல.27/4, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(93767)

## திருவாசக முற்றோதல்

சுழிபுரம், ஜன.12

பண்ணாகம் ஆலடி வைரவப்பெருமான் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி முதல் திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்வு நடைபெறும்.

(ஒ-20)

## மாணிக்க கங்கையில் மூழ்கி இளைஞர் பலி

கொழும்பு, ஜன.12

கதிர்காமத்தில் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமம் புதியபாலத்தின் கீழ் நீராடிக்கொண்டிருந்தபோது மரணமான இந்த 28 வயது இளைஞர் தலவத்துகொட றுகுணுபுர பிரதேசவாசியெனத் தெரிய வருகின்றது.

கங்கையில் மூழ்கிய இளைஞர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம் இடைவழியில் மரணமாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


## கடை வாடகைக்கு

பலாலி வீதி, கந்தர்மடத்தில் 24' X 14' அளவுடைய கடை வாடகைக்குண்டு.
T.P. 0778296957

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கருகில் இரு கடைத் தொகுதிகளுடன் களஞ்சிய அறை, வாகன தரிப்பிட வசதி, நான்கு பக்கமும் சுற்று மதிலுடன் 1¼ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 0718229630 (சி/564063)

## காணி - வீடு தேவை

20 -30 பேர்ச் (Perches)அளவுள்ள காணி வீட்டுடன் தேவை. அத்தகைய காணி வீடு உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். யாழ்.மாநகர சபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.
15ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்
விளம்பர இல:- 3971
மே/பா உதயன்
அல்லது
MMS Lanka @ G mail.Com
(3971)

## வீடு விற்பனைக்கு

யாழ்.பெரிய கோவிலுக்கு சமீபமாக இல.10A , கதீற்றல் வீதியில், அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்கு.
தொடர்பு :- 021- 222 5687 (சி/564064)

## காணி விற்பனைக்குண்டு

கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் பலாலி வீதியில் தனிக் கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (சிவறஞ்சனம் ofset printers இற்கு முன்னால்)
தொடர்பு- 0770569974, 0774140088


## மரண அறிவித்தல்

### திருமதி
### பூலோகநாதன் பவளம்மா

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூலோகநாதன் பவளம்மா நேற்று (11.01.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூலோகநாதனின் அன்பு மனைவியும் சந்திரகுமார், சந்திரவதனி, சந்திரகாந்தன், சந்திரபாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, செல்வநேசன், தவமலர், பிருந்தாபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுனேயா, பிரதாபன் (அமெரிக்கா), பிரதீபா, ஆரணன் (பிரான்ஸ்), பிரதீப்குமார், கவிதாஞ்ஜி, நந்தலாலன், நிருபன், நிருபா, நிருஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2010) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
(93771)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



### யோகராஜா கஜேந்திரன்
(லக்ஸ்ஷன்)

தோற்றம் - 19.09.1984
மறைவு - 22.12.2005

முகம் மறைந்து போய் நான்கு
ஆண்டுகள் ஆனபோதும்
அகம் விட்டு அகலாத
நினைவுகளில் அழுகின்றோம்
அன்பான அரவணைப்பும்
அழகான புன்சிரிப்பும்
அகிலம் உள்ள காலம் வரை
அகலாது எம் மனதில்

19, உப்புக்குளம் வீதி,
கொழும்புத்துறை.

தகவல் :
அப்பா,அம்மா,
அக்கா,தம்பி

(சி-564065)

## கண்ணீர் அஞ்சலி



காலமிது காலமிது கலங்காதே
அன்ரனண்ணா!
காலனுக்கு கணக்குவைக்க கணனியிலும்
இடமில்லை நூறாண்டு வாழ்ந்து விட்டு
நொடியினிலே பிரிந்தாலும் கல்லறைக்குள்
கண் வளரும் பாசமான பேரனார்
கர்த்தருள்அடக்கம் என்று கவலை விடு.

ஜோயல்,பவன்ராஜ்

10.01.2010 அன்று பரலோக தேவனுடைய பரிசுத்த ஆவியுடன் இரண்டறக்கலந்த

### சந்தியாப்பிள்ளை இராசையா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும்,நண்பர்களும்
Dial Luck Phone Shop
No 22,Grand Bazzar Road, Jaffna. .

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. பா.முருகதாஸ்
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் க.ஆறுமுகம்

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அ்ன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை,
மானிப்பாய்.
(93755)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| உதிப்பு | மறைவு |
|---|---|
| 1959 - 11 - 23 | 2008 - 12 - 24 |

### அமரர் கிருஷ்ணர் வேல்முருகு

திதி 2010.01.12

அன்புத் தெய்வமே நீங்கள்
இந்த மண்ணை விட்டுச் சென்று
ஓராண்டு என்ன நூறாண்டு
சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் உள்ளத்தை விட்டு
ஒரு கணமேனும் மறவாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நீலியம்பனை,
மல்லாகம்.
(சி-564059)
அன்பு மனைவி,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நிறைவேறாமல் போன எதிர்பார்ப்பு

இலங்கையில் அமைதியும், சமாதானமும், சமரசமும், இணக்க நிலையும் நிலவவேண்டுமானால் -

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் -

இனக் குரோதமும், பேரினவாதமும் ஒழிந்து, இன சௌஜன்யமும், நல்லிணக்கமும், புரிந்துணர்வும் மலரவேண்டும்.

சிறுபான்மையினரை ஆயுத முனையில் வெற்றிகண்டு, அந்த வெற்றியைப் பெரும்பான்மையினர் மத்தியில் பெரும் சாதனையாகக் காட்டுவதற்கான முறையில் முரசறைவதன் மூலம் இனவாதத்தை இன்னும் தூண்டலாமேயொழிய, இணக்கத் தீர்வை உருவாக்கி விட முடியாது.

யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு, அவமானப்பட்டுப் போயிருக்கிறோம் என்ற அவலத்தில் வாழும் மக்கள் கூட்டத்தை நோக்கி அரவணைப்புடன் கூடிய தாராண்மையைக் காட்ட வேண்டுமேயொழிய அதிகார அகங்காரம் அவர்களின் மனதை நெருடும் வகையில் நடக்கக் கூடாது.

பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரை அரவணைக்கும் தனது பெருமிதப் பண்பை, பெரும்பான்மையினர் முன்நிறுத்தி, அதைப் பெரும்பான்மையினரும் பார்த்துப் பின்பற்றும் வகையில் சாதக விடயமாக்க வேண்டுமே தவிர, அவர்களின் மனதில் ஆழ ஊறி, உறைந்து கிடக்கும் பேரினவாதத்தைத் தட்டியெழுப்பி, அதில் குளிர் காய்ந்து, அரசியல் லாபம் தேட முயற்சிக்கக் கூடாது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சமயம், தமது நெருக்கடிகள் மற்றும் சுமைகள், அழுத்தங்கள் போன்றவற்றுக்கு நிவாரணமளிக்கும் பல புதிய அறிவிப்புகளை - தமிழர் திசை நோக்கிய தனது அரசின் தாராண்மையைக் காட்டும் பிரகடனங்களை - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுப்பார் என்று தமிழர்கள் குறிப்பாகக் குடாநாட்டுத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால் எல்லாம் புஸ்வாணமாகிவிட்டன.

பொதுவாக விடயங்களைக் கூறிவிட்டு ஜனாதிபதி புறப்பட்டு விட்டார்.

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல் அல்லது சுருக்குதல், தடுப்புக் காவலில் வாழும் பல்லாயிரம் தமிழர்களை விடுவித்தல், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்கள் போன்றவை குறித்தெல்லாம் ஜனாதிபதி அறிவிப்பார் என்ற பலத்த நம்பிக்கை நிலவியது. ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை.

இத்தகைய எதிர்பார்ப்பு உருவாவதற்கான நம்பிக்கையை ஊட்டியவரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகரும், அவரது சகோதரரும், எம்.பியுமான பஸில் ராஜபக்ஷதான்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் என்ற சிக்கல் குறித்து முக்கிய முடிவை ஜனாதிபதி விரைவில் விடுப்பார் எனும் தகவலை ஐந்து நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வைத்து பஸில் ராஜபக்ஷதான் வெளியிட்டிருந்தார்.

ஆனாலும், அத்தகைய அறிவிப்பு எதையும் தமது இந்த யாழ். விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிடாமல் போனமைக்கான காரணத்தை ஓரளவு புரிந்து கொள்ள முடிகின்றது. அந்தக் காரணத்துக்குள் புதையுண்டு கிடக்கும் விடயம்தான் தமிழர் தரப்பின் மனதை அரிக்கும் விவகாரமாகும்.

யாழ். பாதுகாப்பு வலயத்தை ஒட்டிய முக்கிய அறிவிப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் வெளியிடுவார் என்ற சாரப்பட பஸில் ராஜபக்ஷ தகவல் வெளியிட்ட போதே தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்யும் வகையில் படையினரின் ஆக்கிரமிப்பில் நீடிக்கும் அந்தப் பிரதேசத்தைச் சுருக்கிக் கொள்ளும் உத்தரவை விடுக்கின்ற எண்ணம் ஜனாதிபதிக்கு இருந்திருக்கும் என்றே நம்பப்பட்டது. இன்றும் கூட அந்த நிலைப்பாடே அவரிடம் இருக்கக் கூடும்.

ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு எதிரான - எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான - ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என்ற தீர்மானத்தைத் தமிழர்கள் மத்தியில் அதிக செல்வாக்குச் செலுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக எடுத்தபின்னர், இத்தகைய உயர் பாதுகாப்பு வலயத்தைச் சுருக்குதல் அல்லது நீக்குதல் என்ற தமது பிரகடனம் மூலம் தமிழர் தரப்பிலிருந்து தமக்குப் புதிதாகப் பெரும் வாக்குவங்கி அதிகளவில் திரும்பிவிடாது என்ற யதார்த்தத்தை ஜனாதிபதி எண்ணிப்பார்த்திருக்கக் கூடும். அத்தகைய நிலையில், வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தைச் சுருக்குகின்ற அல்லது நீக்குகின்ற அறிவிப்பை விடுத்ததன் மூலம் வடபகுதித் தமிழர்களுக்கு அதிக சகாயம் செய்வதற்கு ஜனாதிபதி இணங்கி விட்டார் என்ற கருத்தைத் தென்னிலங்கையில் ஏற்படுத்தி, அதனால் தெற்கிலும் தமக்குக் கிடைக்கக் கூடிய வாக்குகளையும் இழக்க ஜனாதிபதி தயார் இல்லை. அதனால்தான் இவ்விடயத்தில் வாயே திறக்காமல் அவர் யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டார் என்று கருதப்படுகின்றது.

அதுதான் காரணம் என்றால் இந்தத் தேர்தல் சமயத்தில் - ஜனாதிபதி அப்படி நடந்து கொண்டமை குறித்து யாரும் அதிகம் குறை கூறமுடியாதுதான்.

ஆனால் இதிலும் ஒரு விடயம் இடிக்கின்றதே.....! தமிழர்களுக்கு நீதி, நியாயம் செய்தால் தெற்கில் தனது வாக்கு வங்கியில் சரிவு, தொய்வு ஏற்பட்டு விடும் என்ற தனது மாற்ற முடியாத சிந்தனையில் தொடர்ந்தும் சிக்கி, உழல்கின்ற ஒரு தலைவர், எப்படித் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் நீதி செய்வார் என்று நம்பமுடியும்? நாளைக்கு மீண்டும் இவரே ஜனாதிபதியானால், அதன் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றிவிட்டுத் தாமே தொடர்ந்தும் நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தில் நீடிக்க வேண்டும் என்ற நப்பாசையில் காரியங்களை நகர்த்த முற்படும் அவர், அப்போதும் கூடத் தமது அரசியல் செல்வாக்குக்காகத் தென்னிலங்கையின் வாக்கு வங்கியைத் தமது கையை விட்டுப் போகாமல் பார்ப்பாரே தவிர - அந்த வாக்காளர்களைத் திருப்திப்படுத்த முயல்வாரே தவிர - தமிழர்களுக்கு நீதி, நியாயம் செய்யமாட்டார் என்று கொள்வதில் தப்பு உண்டா- இவரை எப் படித் தமிழர்கள் எப்படி இனியும் நம்ப முடியும்.......?



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்னர் பூகோள உருண்டை வடிவத்தின் மீது தீபமேற்றியபோது...

## மேலும் நான்கு கைதிகள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகளில் நேற்றுத் திங்கட்கிழமை மேலும் நான்கு பேர் உடல்நலம் பாதிப்படைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தி.தினேசானந், ஜெ.பேரின்பராஜ், தே.ஜதீஸ்வரன், ஐ.யோகேஸ்வரன் ஆகிய நான்கு கைதிகளே மயக்கமுற்ற நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தம்மை விடுவிக்குமாறு கோரி இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் உண்ணாவிரதமிருந்துவரும் அரசியல் கைதிகள் நேற்று எட்டாவது நாளாகவும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு உணணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை தற்போது 674 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-14-78)

# தமிழரின் வாக்குகள் ஜனாதிபதிக்கு எதிராக விழலாம்; புலிகளின் செல்வாக்கு இன்னமும் உண்டு என்கிறார் சித்தார்த்தன்

கொழும்பு, ஜன.12

விடுதலைப் புலி களை ஒடுக்குவதற் கான அரசியல் தீர் மானத்தை எடுத் தவர் தற்போதைய ஜனாதிபதியே எனப் பெரும்பாலான தமிழ் மக்கள் கருதுவதால், அவருக்கு எதிராகத் தமிழ் மக்கள் வாக் களிக்கலாம் என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஏ.எவ்.பி. செய்திச்சேவைக்குத் தெரிவித் திருக்கின்றார்.

மேலும் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பவர்களாக யுத்தத்தினால் காயப்பட்டுள்ள தமிழர்களே விளங்குவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ள ஏ.எவ்.பி. செய்திச்சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பல தசாப்த காலமாக சுதந்திர இன ரீதியிலான தனிநாடொன்றிற்காக இலங்கையின் விடுதலைப் புலிகள் போரிட்டனர். அவர்கள் மே மாதத்தில் தோற்கடிக்கப்பட்டனர்.

எனினும், இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப் பதில் தமிழ் வாக்காளர்களே தீர்க்கரமான சக்தியாக விளங்கப் போகின்றனர் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

பெரும்பான்மை சிங்களவர்களின் வாக்கு மஹிந்த ராஜபக்ஷவிற்கும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இடையில் பிளவுபட் டுள்ள நிலையில் மிகக் கடுமையான போட்டி எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக யுத்தக் காயங்களை அனுபவித்துள்ள சுமார் இருபத்தியைந்து லட்சம் தமிழர்களே ஜனவரி 26 ஆம் திகதி தேர்தலில் யார் வெல்வார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றனர்.

ராஜபக்ஷவும், பொன்சேகாவும் வட பகுதியில் தமிழர்களின் இதய பூமியான யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு வருட காலத்திற்கு முன் இது நினைத்துப் பார்க்கமுடியாத விடயமாகக் காணப்பட்டது.

முன்னர் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் - மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவர் எனவும் - உறுதியளித்துள்ளதன் மூலம் இரு வேட்பாளர்களும் தமிழர்களின் ஆதரவைப் பெற முயல் கின்றனர்.

### சிங்கள வாக்காளரிடையே பிளவு

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட வெற்றிக்களிப்பில் சிங்களச் சமூகம் இன்னமும் உள்ளதாக சுட்டிக் காட்டும் 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன், எனினும் இரு பிரதான வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்பதில் அவர்கள் பிளவுபட்டுள்ளனர் என்கிறார்.

கடந்த 37 வருட காலத்தில் முதற் தடவையாக விடுதலைப் புலிகளின் பிரசன்னம் இல்லாத நிலையில் தமிழ்ச் சிறுபான்மை சமூகம் வாக்களிக்கவுள்ளது என மேலும் தெரிவித்த அவர் அடுத்த ஜனாதிபதியைத் தமி ழர்களே தீர்மானிக்கலாம் என்றார்.

எனினும், தமிழர்களில் எவ்வளவு பேர் இம்முறை வாக்களிப்பதற்கான உரிமையைப் பெறுவர் என்ற முக்கிய கேள்வி காணப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் பெருமளவு மக்கள் இன்ன மும் இடம்பெயர்ந்துள்ளனர். அவர் களில் மிகக் குறைந்த எண்ணிக்கை யானவர்களே வாக்களிப்பர் என ஜனநாயகத்திற்கான இயக்கத்தைச் சேர்ந்த நிமல்கா பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.



### விடுதலைப் புலிகளின் செல்வாக்கு இன்னமும் உண்டு

எவ்வாறாயினும், தமிழ்மக்களின் வாக்குகளே தீர்க்கரமானவையாக அமையும் என்றார் அவர்.

தமிழ்மக்களே அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கலாம் எனத் தெரிவித்த புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், விடுதலைப் புலிகள் இல்லாதபோதி லும் அவர்களது செல்வாக்கு இன்ன மும் காணப்படுகின்றது.

இதன் காரணமாக விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான அரசியல் தீர்மானத்தை எடுத்தவர் எனத் தாம் கருதும் மஹிந்த ராஜபக்ஷ விற்கு எதிராகப் பெரும்பாலான தமி ழர்கள் வாக்களிக்கலாம்- என்றார்.

ஊழல், பொருளாதாரம், ஊடகச் சுதந்திரம் போன்ற விடயங்களே பெரும்பான்மை சிங்களவர்களைப் பொறுத்தவரை முக்கியமான விடயங்களாக அமையப்போகின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் என்றும் ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.(சி)

## லசந்தவின் படுகொலை ஓராண்டு பூர்த்தி

# 23வழக்கு தவணைகள் கடந்தும் பிரதான சந்தேக நபர் கைதாகவில்லை

கொழும்பு, ஜன.12

'சண்டேலீடர்' பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு ஜனவரி 8ஆம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. 23வழக்குத் தவணைகளும் வந்து போய்விட்டன.

ஆனால் பிரதான சந்தேக நபர் என்று எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்தப் படுகொலை தொடர்பாக இறுதி விசாரணை அறிக்கை ஒன்றைத்தானும் சமர்ப்பிக்க இயலாத நிலையில் ஸ்ரீலங்கா பொலிஸார் திறனற்றுப்போய்விட்டனர்.

'ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர் நாஷனல்' (இலங்கை) நிறுவனத்தின் ஊடகங்களுக்கான அறிக்கையில் இவ் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வரையில் அப்படுகொலைக்கு பொறுப்பேற்க வேண்டியுள்ள நபர் ஒருவரை நீதிமன்றம் முன் நிறுத்துவதற்கு கூட இலங்கை அரசு திறனற்றுப் போயுள்ளமை தொடர்பாகவும் 'ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர் நாஷனல்' நிறுவனம் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அது போன்றே 'சிரச' தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பந்தமாக பொறுப்பேற்கக்கூடிய நபரொருவரை இன்று வரையில் நீதிமன்றம் முன் நிறுத்தக் கூட பொலிஸார் மற்றும் அதிகாரத் தரப்பினர் திறனற்றுப் போயுள்ளமையும் மேற்படி நிறுவனம் தனது அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-04)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 29 | 13.01.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.ப. 09.44 வரை |
| நட்சத்திரம்: | மூலம் |
| | பி.இ 02.17 வரை |
| சுபநேரம்: | 05.03-06.33 வரை |
| ராகுகாலம்: | 12.33-02.03 வரை |

# மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை பொங்கலன்று மாணவர்களை கௌரவிக்கிறது

யாழ்ப்பாணம், ஜன.12

மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் ஏற்பாட்டில் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமராட்சி கல்வி வலயப் பகுதிக்குட்பட்ட ஜி.சீ.ஈ (சா/த)-2007 பரீட்சையில் 10 ஏ பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும், 2008 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் இதன் போது கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி மாணவர்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை மக்கள் வங்கியில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஏற்கனவே நடத்தத் திட்டமிடப்பட்ட இந்த நிகழ்வு நிஷாப்புயல் அனர்த்தம் மற்றும் தொடர்ந்து நிலவிய அசாதாரண நிலமையால் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை மக்கள் வங்கிச் சேவைகள் அன்றைய தினம் முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHARAJ PUMPS

අපේම දෙයක්...




## இதோ ஓர் அரிய செய்தி

உற்பத்தி மற்றும் விநியோகித்தலில் 50 ஆண்டுகளுக்கு மேலான தேசத்தின் நம்பிக்கையை வென்ற வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம் யாழ் மக்களின் நீண்டகால கமத்தொழில் நீர்த் தேவையினையும் மற்றும் அன்றாட வீட்டு நீர்த் தேவையினையும் பூர்த்தி செய்யும் நோக்குடன்

## மகராஜ் நீர் பம்பிகளை

இன்று முதல் யாழ் மண்ணின் அனைத்து இரும்பகங்களிலும் விற்பனைக்கு அறிமுகம் செய்துள்ளது.

### மகராஜ் நீர் பம்பியைப் பாவிப்பதினால் நீங்கள் பெறும் பயன்களில் சில

- வார்க்கப்பட்ட இரும்பினால் உருவாக்கப்பட்ட நீர் பம்பிகள்
- பித்தளையினால் செய்யப்பட்ட இம்பிலேயர்
- செரமிக் மற்றும் காபன் தயாரிப்பிலான நீர்த் தடுப்பாக்கி தன்னியக்க ஓவர்லோட் கட்டவுட் சுவிற்ச். உங்களின் அதிகப்படியான மின்சார பாவனையை குறைக்கும்
- குறைந்த சப்தத்துடன் சிங்கிள் பேஸ் மின்சாரத்தில் இயங்கும் நீர் பம்ப்
- வரையறையற்ற உத்தரவாதம்
- 24 மணிநேர பராமரிப்புச் சேவை மற்றும் இலகுவாக உதிரிப்பாகங்கள் பெற்று கொள்ளும் வசதி
- உயர்தரத்திலான நீர் பம்பிகள் நீண்ட கால பாவனையைக் கொண்டது

The TRADESMANN Traditionally Trusted 1956
www.tradesmann.com

**வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம்.**
இல 40, பொருப்பன பெரி வீதி, இரத்மலானை, இலங்கை.
வாடிக்கையாளர் சேவை: +94 11 5565657,8 பக்ஸ்: +94 11 5565605
தொலைநகல்: telemarketing@tradesmann.com
வெப்தளம்: www.tradesmann.com

ISO 9001 : 2000 ISO 14001 : 2004 OHSAS 18001 : 1999


### சாவகச்சேரி ஆஸ்பத்திரி நீரிழிவு சிகிச்சைப் பிரிவு நவீனமயமாகிறது

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் லண்டனில் உள்ள தென்மராட்சி அபிவிருத்தி மன்றத்தினரால் திறக்கப்பட்ட நீரிழிவு சிகிச்சைப் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கட்டடத்தில் பத்து லட்சம் ரூபா பெறுமதியான சிகிச்சை உபகரணங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி வந்துள்ள மன்றத்தின் செயற்குழு உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவகுமாரியின் நேரடி மேற்பார்வையில் இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.
(ஒ-207)

### வரணியில் சமுர்த்தி வங்கி

வரணி சமுர்த்தி வங்கிக் சங்கம் விரைவில் வரணியில் உள்ள தனது சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

சேதமடைந்த கட்டடம் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் கட்டட வேலைகள் பூர்த்தியானதும் வங்கி இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வங்கிச் சங்கத்தில் சேதமாக்கப்பட்ட இரும்புப் பெட்டகத்திற்குப் பதிலாக புதிய இரும்புப் பெட்டகம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதுவரை காலமும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இந்த வங்கிச் சங்கம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.
(ஒ-207)

### கணனி, மின்னிணைப்பு பயிற்சி நெறிகள்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினரால் உடுவில் பிரதேச செயலக பிரிவில் நடத்தப்பட்டுவரும் கணனி மற்றும் வீட்டு மின்னிணைப்புப் பயிற்சிகளுக்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில விரும்புபவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக தொழில் வழிகாட்டல் பிரிவில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடைந்திருக்க வேண்டும் என வலி. தெற்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.
(ஒ-10)


## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### பதவிக்கு விண்ணப்பம் கோரல்

பிரதி பிரதம செயலாளர், மாகாண திறைசேரி (வடமாகாணம்) அவர்களுடன் நல்லூர் ப.நோ.கூ.சங்கம் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்திற்கு அமைய பின்வரும் பணிகளை நிறைவு செய்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

★ அலுவலக உதவியாளர்கள் - சகலபடிகளும் உட்பட நாள் ஒன்றுக்கு ரூபா 400
★ சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் - சகலபடிகளும் உட்பட நாள் ஒன்றுக்கு ரூபா 400
★ வாகனச் சாரதிகள் - சகலபடிகளும் உட்பட நாள் ஒன்றுக்கு ரூபா 415

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பப் படிவத்தினை எமது சங்கக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு 25.01.2010 பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,
திருநெல்வேலி. (சி/564061) பொது முகாமையாளர்



## சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
THE SUDAROLI வார மலர்
(ஜன.10 - ஜன.16)

இப்போது விற்பனையில்



- இலங்கையில் பிராந்திய + சர்வதேச சக்திகளின் ஆதிக்கப்போட்டி = சமன் குலையும் உறவுகள்.
- வன்னி அகதிகளின் நிலை கைவிடப்பட்டோரின் கதையே.
- முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்.
- கேலிக்கூத்தாடும் இலங்கை அரசியல்
- தெலுங்கானாப் பிரச்சினை தீருமா?
- உயிர்வலிக்கும் கணங்கள்......தொடர்.

மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்...

உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்



## ஐக்கிய சோஷலிஸ கட்சி

ஜனாதிபதி அபேட்சகர்
**சிறிதுங்க ஜயசூரிய**
பொதுச் செயலாளர்
ஐக்கிய சோஷலிஸ கட்சி
தலைவர்
சிவில் கண்காணிப்புக்குழு
(சி.எம்.சி)



| பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் | ஜனவரி 12 |
| --- | --- |
| உதயன் கேட்போர் கூடம் | மு.ப. 10 மணி |




அனைவரும் வருகை தருக


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கு.சிவநடராஜா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மா. சிதம்பரநாதன்**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்.

(93755)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் சன நெருக்கடியைப் பயன்படுத்தி பட்டப்பகலில் கைவரிசை காட்டும் திருடர்கள்

## பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டுமென அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.நகரில் பட்டப்பகலில் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளமையால் நகருக்குப் பல்வேறு தேவைகளுக்கு வரும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏ-9 வீதி முழுமையாகத் திறந்து விடப்பட்டுள்ளமையால் யாழ்ப்பாணத்துக்கு வெளியிடங்களிலிருந்து வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

பயணிகள் அதிகளவில் நகரை வந்தடைவதால் சன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தித் திருடர்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

பூட்டி வைக்கப்பட்ட சைக்கிள்களை மிகவும் தந்திரமாகக் களவாடிச் செல்வதும், மக்களோடு மக்களாக நின்று தங்க ஆபரணங்களை அபகரித்துக்கொண்டு தப்பிச் செல்வது போன்ற நடவடிக்கைகளில் திருடர்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த வாரத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் யாழ்.நகரில் களவாடப்பட்டுள்ளன. அத்துடன் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

எனவே நகருக்கு வரும் பொதுமக்கள் தங்கள் உடைமைகளில் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (50-224)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, ஜன.12

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் 19 வயதுப் பிரிவினர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதவுள்ளன. (50-86)

# யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் திடீரென சூடுபிடிக்கிறது நடைபாதை வியாபாரம்

யாழ்ப்பாணம், ஜன.12

யுாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதை வியாபாரம் களை கட்டத் தொடங்கியுள்ளது.

ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் யாழ். மணிக்கூட்டு வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட நடைபாதையில் பெரும் எண்ணிக்கையான வியாபாரிகள் உடுபுடைவைகள், மற்றும் பொருள்களைக் குவித்து விற்பனை செய்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தென்பகுதியில் இருந்து வந்த வியாபாரிகளே இந்த நடைபாதையை முற்று கையிட்டுப் பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.



படம்: நந்தன்.

தற்போது இந்தப் பகுதியில் மக்கள் அதிகளவில் கூடிப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளதால் அப்பகுதியில் சன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

# யாழ். உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு ஜனாதிபதியிடம் ஆயர், நல்லை ஆதீனம் வற்புறுத்தல்



யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, அங்கு மக்களை மீளக் குடியமர வழியேற்படுத்துமாறு யாழ். ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் மற்றும் நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தம்மைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தனித்தனியாகக் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ராஜபக்ஷ முதலில் நல்லூரில் நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்தார். அப்போது அந்தக் கோரிக்கையை நல்லை ஆதீன முதல்வர் முன்வைத்தார்.

பின்னர் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை ஜனாதிபதி சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் யாழ்.ஆயர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, யாழ். குடாநாட்டின் கல்வி அபிவிருத்திக்குத் தான் முன்னுரிமை வழங்குகிறார் எனவும், ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் படிப்படியாகச் சீராக்கப்படும் எனவும் தெரிவித்தார்.



ஏ - 9 வீதி மக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டதற்கும், யாழ்.குடாநாட்டில் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் யாழ்.ஆயர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார். (50)

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் புதன்கிழமைகளில் 'கிளினிக்'

நவாலி, ஜன.12

மானிப்பாய்ப் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மெடிக்கல் கிளினிக், சலரோகக் கிளினிக், அஸ்மா கிளினிக் என்பன நடைபெற்று வருகின்றன.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ஏகாம்பரமூர்த்தி பத்மராணி நோயாளர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டுவரும் இக் கிளினிக்கில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தற்போது சிகிச்சை பெற்றுக் குணமடைந்து வருகின்றனர்.

இதனால் அநேகமானவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்லாது இங்கேயே மருந்துகளைப் பெற்றுச் செல்கின்றனர். (50-100)

## தைப்பொங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.12

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அபிராமிப் பட்டர்தின விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

அபிராமி அந்தாதி ஓதுதல், அம்பாள் வீதியுலா வருதல் என்பனவும் இடம்பெறவுள்ளன. (50-9)

* * *

சித்தங்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த தைப்பொங்கல் விழாவும் தீ மிதிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளன.

இதில் ''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி'' எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்தியதசீதரன், ''சைவர்கள் வாழ்வில் சக்தி'' எனும் தலைப்பில் வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன், யாழ். பல்கலைக்கழக மாணவ ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஐ.சந்திரசேகரன் ஆகியோரின் சிறப்புச்சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (50-9)

* * *

யாழ்ப்பாணம், ஜன.12

புத்தூர் கிழக்கு தல்லுடை கன்னியா வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறவுள்ளது. (50-9)

* * *

புத்தூர் கிழக்கு பெரியதம்பிரான் ஆலயவருடாந்தப் பொங்கல்விழா எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் விசேட பூசைகளுடன் நடைபெறவுள்ளது.

* * *

ஊர்காவற்றுறை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பொங்கல் உற்சவமும் தை அமாவாசை விரத உற்சவமும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு அம்பாளுக்கு 108 சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று அம்பாளுக்கு அபிராமி அந்தாதிப் பதிகம் இசைத்து அம்பாள் திருவீதி உலா வருதலும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் அம்பாளின் அருளைப் பெற்று உய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-16)

## அதிகரிக்கிறது வாழைப்பழத்தின் விலை!

யாழ்ப்பாணம் ஜன 12

யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வாழைப் பழத்தின் விலை அதிகரிப்பை அடுத்து அதனைக் கொள்வனவு செய்வோரின் தொகை குறைவடைந்துள்ளதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏ - 9 வீதியூடாக தினமும் பெரும் எண்ணிக்கையான வாழைக்குலைகள் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாலேயேகுடாநாட்டுச் சந்தைகளில் வாழைப் பழத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தற்போது கதலி வாழைப் பழம் ஒரு கிலோ 60 ரூபா முதல் 70 ரூபா வரையும் இதரை வாழைப்பழம் கிலோ 50 ரூபாவாகவும் விற்பனையாகிறது. வாழைப் பழத்தின் விலை எதிர்வரும் தைப்பொங்கலுடன் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (50-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



• ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார். அவர் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மகளிர் அமைப்புக்களைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்தச் சந்திப்பில் யாழ்.மாநகர சபைக்கான விளையா[illegible] மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் மாநகர ஊழியர்களுக்கு வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும் இந்த நிகழ்[illegible] படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன், கவிநேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகளை இடமாற்றம் செய்யும் அரச உத்தரவுக்குத் தடை!

## சென்னை உயர் நீதிமன்று பிறப்பித்தது

சென்னை, ஜன. 12

இலங்கை அகதிகளை இடமாற்றம் செய்யும் அரசின் உத்தரவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தாலுகா வேடர் காலனியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு வசிக்கும் ஜெயசித்திரா, நந்தகுமார், மடுஜித் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட நாங்கள் 1990 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்து இந்த முகாமில் 20 ஆண்டுகளாக குடும்பத்தினருடன் வசித்து வருகிறோம். இந்த நிலையில் எங்களை திடீரென்று வேறு இடத்துக்கு மாற்றும்படி மறுவாழ்வுத்துறை இயக்குநர் உத்தரவிட்டார்.

கோவை மாவட்ட கலெக்டர், கியூ பிரிவுப் பொலிஸார் அளித்த பரிந்துரைப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என அந்த உத்தரவில் மறுவாழ்வுத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆனால் நாங்கள் மாற்றப்பட வேண்டிய காரணத்தை அவர் அதில் சொல்லவில்லை.

இந்த உத்தரவின் அடிப்படையில் எங்களது பெயர்ப்பதிவு ரத்து செய்யப்பட்டுவிட்டது. இதனால் உதவித்தொகை, ரேஷன் அட்டை உள்ளிட்ட சலுகைகளை பெற முடியாமல் போய்விட்டது. 20 ஆண்டுகளாக தங்கியிருந்து எங்கள் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களுக்கும் பெருத்த இடையூறு ஏற்படுகிறது.

எங்களை இடமாற்றம் செய்யும் இயக்குநரின் உத்தரவு, மனித உரிமைகளுக்கும், அரசியல் சாசன விதிகளுக்கும் முரணானது. எனவே அதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை உயர்நீதிமன்ற நீதிபதி கே.வெங்கட்ராமன் விசாரித்தார். மறு வாழ்வுத்துறை இயக்குநர் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். மேலும் மனுவுக்கான பதில்மனுவை 12 ஆம் திகதி தாக்கல் செய்யும்படி மறுவாழ்வுத்துறை இயக்குநர், கோவை மாவட்ட கலெக்டர், கியூப் பிரிவுப் பொலிஸ் சூப்பிரண்டு ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

## தீவாரிக்கு மீண்டும் வாரிசு சிக்கல்!

புதுடில்லி, ஜன.12

இளைஞர் ஒருவர் தொடர்ந்துள்ள வாரிசு விவகார வழக்கில் விளக்கம் அளிக்குமாறு என்.டி.திவாரிக்கு புதுடில்லி உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

50 ஆண்டுகளுக்கும் மேலாக பழுத்த அரசியல் அனுபவம் கொண்ட காங்கிரஸ் காரர் என்.டி.திவாரி, பாலியல் குற்றச்சாட்டின் எதிரொலியாக ஆந்திர ஆளுநர் பதவியில் இருந்து ராஜினாமா செய்து ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

இவர் ஆந்திர ஆளுநராக இருந்த சமயத்திலேயே டில்லி நீதிமன்றத்தில் ரோஹித் ஷேகர் என்பவர், 'நான் என்.டி.திவாரிக்கு பிறந்தவன். என்னை திவாரியின் மகனாக சட்டப்படி அறிவிக்கவேண்டும்' என்று மனுத்தாக்கல் செய்தார்.

கடந்த நவம்பர் 3ஆம் திகதி இம்மனு விசாரணைக்கு வந்தபோது, திவாரி ஆந்திர ஆளுநராக இருந்தார். இதை காரணம் காட்டியும், திவாரி சார்பில் தெரிவிக்கப்பட்ட வாதத்தை ஏற்றும் ரோஹித்தின் மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

தற்போது திவாரி ஆந்திர ஆளுநர் பதவியில் இருந்து விலகிய நிலையில், செக்ஸ் குற்றச்சாட்டுகளும் இருக்கும் சூழலில் 29 வயது இளைஞர் ரோஹித் மீண்டும் டில்லி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவை ஏற்ற தலைமை நீதிபதிகள் கொண்ட ஆயம், ரோஹித்தின் மனு குறித்து விளக்கம் அளிக்குமாறு என்.டி.திவாரிக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

அதில் வரும் பெப்ரவரி 9ஆம் திகதிக்குள் விளக்கமளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

# புலிகளின் தலைவர் பிரபாவின் தாயாரை எனது வீட்டில் வைத்துப் பராமரிப்பேன்

## வைகோ தெரிவிப்பு



சென்னை, ஜன. 12

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை தனது வீட்டில் வைத்து பராமரிப்பார் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மறைந்த திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் உடல் நேற்றுமுன்தினம் அவரது சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் தகனம் செய்யப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

இறுதிச் சடங்கின்போது ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தொலைபேசி மூலம் கூடியிருந்த மக்களிடையே பேசினார்கள். அது ஒலிபெருக்கி மூலம் ஒலி பரப்பப்பட்டது.

இதுகுறித்து ம.தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பிரபாகரனின் தாயாரை இந்தியாவுக்கு அனுப்ப இலங்கை அரசு அனுமதி தர வேண்டும் என்றும், அவரை தனது வீட்டில் வைத்துப் பராமரிப்பேன் என்றும் வைகோ தனது உரையில் குறிப்பிட்டுள்ளார் - என்றுள்ளது.

தமிழகத்திலிருந்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இறு திச் சடங்கில் நேரில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியச் செய்திகள்

# இந்தியக் கடற்படை கைதுசெய்த 117 இலங்கை மீனவர்களும் விடுதலை!

கொழும்பு, ஜன. 12

எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 117 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் இருந்து 233 படகுகளில் சொந்த நாட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இலங்கை மீனவர்கள் கடலோர பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் உள்ளூர் பொலிசிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள்.

இப்படி பல்வேறு கால கட்டங்களில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக, சென்னையில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள், இலங்கை மற்றும் இந்திய அரசுடன் பேச்சு மேற்கொண்டனர்.

அதன் அடிப்படையில், கலெக்டர், மீன் வளத்துறை அதிகாரிகள், இலங்கை தூதரக துணை அதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவினர். இதுதொடர்பாக விசாரணை நடத்தினர். விசாரணையில் காற்றின் போக்கினால் திசைமாறி எல்லை தாண்டி வந்து மீன்பிடித்தது தெரியவந்தது.

அதனைத்தொடர்ந்து, மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதலோடு, கைது செய்யப்பட்ட மீனவர்களை எச்சரித்து அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி, நேற்றுமுன்தி[illegible] 17 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 23 படகுகளும் ஒப்படைக்கப்பட்டன.

விடுதலை செய்யப்பட்ட 117 பேரும் நேற்றுமுன்தினம் சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் 30 பேர் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டு, இலங்கைக் கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவிருந்தனர்.

சிறையிலிருந்து விடுதலையாகி சொந்த நாட்டுக்குச் செல்கிறோம் என்ற உற்சாகத்துடன் இலங்கை மீனவர்கள் சென்றனர். இலங்கை மீனவர்களை இந்திய கடல் எல்லை வரை பத்திரமாக கொண்டு வந்து விடுவதற்காக கடலோர காவல்படையினர் தனி படகில் சென்றனர். கடல் எல்லையை அடைந்ததும், இலங்கைக் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களிடம் மீனவர்கள் ஒப்படைக்கப்படவிருந்தனர்.

# தமிழருக்கு என்றுமே வீழ்ச்சி இல்லை!

## கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஜன. 12

தமிழ் உள்ள அளவும், தமிழன் உள்ள அளவும், தமிழ் நெறி உள்ள அளவும் தமிழர்களுக்கு வீழ்ச்சி இல்லை - என்று தமிழக முதல்வர் கருணாநிதி கூறினார்.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியின் நான்காம் ஆண்டு தொடக்க விழா நேற்றுமுன்தினம் சென்னை தீவுத்திடலில் நடந்தது. இந் நிகழ்ச்சியை தொடக்கி வைத்து தமிழக முதல்வர் கருணாநிதி பேசியவை வருமாறு -

சென்னை தீவுத்திடல் நிரம்பி வழியும் அளவிற்கு சென்னை சங்கமம் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி நான்கு ஆண்டுகளுக்கு முன் சென்னையில் தொடங்கப்பட்டு, மாநகரத்தின் வீதிகளில் எல்லாம் நடத்தப்பட்டது. இதற்கு மத்தியில் நாட்டுப்புறம் என்று ஒன்று இருக்கிறது. அதற்கென்று நாட்டுப்புறக் கலைகள் மற்றும் இசைத் துறையில் பாடல்கள் என்றெல்லாம் இருக்கின்றனவே; அவற்றை மக்களோடு பரிமாறிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு இந்தச் சங்கமம், தமிழ் மையத்தின் சார்பில் தொடங்கப்பட்டு பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்று வருகிறது.

இதைத் தொடங்கியவர்களும், தொடங்கி வைத்த நானும் எதிர்பாராத அளவிற்கு இந்த சங்கம் நிகழ்ச்சி வெற்றி முரசு கொட்டி வருகிறது. இம்மேடையில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள், எல்லாரும் வியந்து போற்றுகின்ற அளவிற்கு அவ்வளவு அருமையாக அரிய பல கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற நிலையில் இங்கே நடத்திக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வில் இடம்பெற்ற சில காட்சிகளில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. சந்தேகம் ஏற்பட்ட அடுத்த வினாடியில், அந்த சந்தேகத்தை நீக்குகின்ற காட்சிகள் இந்த அரங்கத்திலே வந்தன. சொல்லப்போனால் சங்கமம் என்பதனுடைய நோக்கம், 'பிறப்பொக்கும்' என்பதை நாட்டிலே பரவச் செய்திடல் வேண்டும். சமுதாயத்தில் வேரூன்றச் செய்ய வேண்டும் என்பதுதான்.

நாம் பிரிந்து கிடக்கக்கூடாது; நாம் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்; ஒற்றுமையாக வாழ வேண்டும். நாம் நம் தமிழ் மொழியால் ஒன்று சேர வேண்டும். நாம் நம்முடைய தமிழைக் காப்பாற்ற வேண்டும். நம்முடைய மொழி உணர்வை தொடர்ந்து இங்கே நிலைநாட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற இத்தனை வாசகங்களும் பொருந்தியாக சங்கமம் கலை விழாவிலே 'பிறப்பொக்கும்' என்ற சுருக்க மான சொற்றொடரை அமைத்துள்ளனர்.



தமிழ் உள்ள அளவும், தமிழன் உள்ள அளவும், தமிழ் நெறி உள்ள அளவும் தமிழர்களுக்கு வீழ்ச்சி இல்லை. சென்னை சங்கமம் நிகழ்ச்சி சென்னை மாநகரில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதும் நடத்தப்பட வேண்டும் என்று சென்னை சங்கமம் நிகழ்ச்சி ஒருங்கி ணைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அவர்களின் செயலைப் பாராட்டுகிறேன் - என்றார்.

# சிறந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 88 ஆவது இடம்!

டில்லி, ஜன.12

உலகின் சிறந்த நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 88 ஆவது இடம் கிடைத்துள்ளது. இதில் பிரான்ஸ் முதலிடம் பிடித்துள்ளது.

சர்வதேச சுற்றுலா வாரஇதழ் ஒன்று மக்களின் வாழ்க்கைத் தர அடிப்படையில் 2010 ஆம் ஆண்டின் சிறந்த நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் பிரான்ஸ் முதலிடம் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன. அமெரிக்கா 7ஆவது இடத்தில் உள்ளது.

உலகின் 194 நாடுகளை, 8 பிரிவுகளில் வகைப்படுத்தி 30ஆவது ஆண்டாக இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் வாழ்வாதாரம், கலாசாரம், பொருளாதாரம், சுகாதாரம், உட்கட்டமைப்பு, பருவநிலை போன்றவை முக்கிய அம்சமாகக் கொள்ளப்படுகிறது.

இவை அனைத்திலும் இந்தியாவுக்கான புள்ளிகள் அதிகரித்துள்ளன. வாழ்வாதார பிரிவில் இந்தியா 65 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டை விடக் கூடுதலாகும். வாழ்வாதாரம் அதிகம் தேவைப் படும் நாடுகளில் ஈராக் முதலிடத்திலும், ஆப்கானிஸ்தான் 2ஆவது இடத்திலும் உள்ளன.

இப்பிரிவில் பூட்டான், பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், இலங்கை, மாலைத்தீவு, பர்மா ஆகிய நாடுகள் முறையே 80, 56, 65, 73, 64, 63, 75 புள்ளிகளைப் பெற்றுள்[illegible]ன.

அனைத்துப் பிரிவுகளிலும் அதிக [illegible] களைப் பெற்று சிறந்த நாடுகள் பட்டியலில் பிரான்ஸ் முதலிடத்தை தக்கவைத்துள்ளது. தொடர்ந்து 5ஆவது ஆண்டாக இப்பெருமையை பிரான்ஸ் பெற்று வருகிறது. இதில் 88ஆவது இடத்தை இந்தியா பெற்றுள்ளது.

அரசின் பல்வேறு வகையான புள்ளி விவரங்களை [illegible] பார்த்துத்தான் இப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என அதன் வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 500 ரூபா கள்ள நோட்டுகள் விவகாரத்தில் சென்னையில் இலங்கை வர்த்தகர் கைது

சென்னை விருகம்பாக்கத்தில் 500 ரூபா கள்ள நோட்டுகளுடன் ரியல் எஸ்டேட் அதிபர் கைதுசெய்யப்பட்டார். இலங்கை தொழில் அதிபரும் இதுதொடர்பாக பிடிபட்டார்.

சென்னை விருகம்பாக்கம் பாலாஜி நகர் முதல் தெருவைச் சேர்ந்தவர் கொத்தமங்கலம் தமிழ் (வயது - 40). இவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார்.

இவரிடம் இலங்கையைச் சேர்ந்த தொழில் அதிபர் விஜயசுரேந்திரன் என்பவர் சுவிட்ஸர்லாந்தில் வசிக்கும் தனது அக்காவுக்கு சென்னை அருகே ஒரு ஏக்கரில் நிலம் வேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு ஏற்பாடு செய்வதாக கொத்தமங்கலம் தமிழ் தெரிவித்தார். இதற்கு முற்பணம் வேண்டும் என்றும் அவர் கேட்டார்.

முற்பணம் தருவதாகச் சொல்லி சென்னை பாரிமுனைக்கு கொத்தமங்கலம் தமிழை, சுரேந்திரன் வரச்சொன்னார். அதுபோல் பாரி [illegible] முன்பணமாக ரூபா 5 லட்சத்து 20 ஆயிரத்தை கொத்தமங்கலம் தமிழ், சுரேந்திரனிடம் வாங்கி வந்தார்.

அந்தப் பணத்தை விருகம்பாக்கத்தில் உள்ள வங்கி ஒன்றில் வைப்புச் செய்தார். வங்கியில் பணத்தை எண்ணி சரிபார்த்த போது அதில் ரூபா ஒரு லட்சம் கள்ள நோட்டுகள் இருப்பதைக் கண்டறிந்தார். இரு நூறு 500 ரூபா நோட்டுகள் கள்ள நோட்டுகளாக இருந்தன.

இந்தக் கள்ள நோட்டுகளை வங்கி நிர்வாகத்தினர் விருகம்பாக்கம் பொலிஸில் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி புகார் கொடுத்தனர். இதுதொடர்பாக உதவி கமிஷனர் மனோகரன், விருகம்பாக்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஞானசேகரன் ஆகியோர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

ரியல் எஸ்டேட் அதிபர் கொத்தமங்கலம் தமிழ் கைது செய்யப்பட்டார். அவர் இலங்கை தொழில் அதிபர் சுரேந்திரன்தான் இந்தப் பணத்தைக் கொடுத்தார் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து சுரேந்திரனும் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றப் பணிகளைத் துரிதப்படுத்த இந்தியாவிலிருந்து தேவையான பொருள்கள்

கொழும்பு, ஜன.12

வடக்கில் மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக, கூடாரத் துணி வகைகளும் ஏனைய உபயோகப் பொருள்களும் இந்தியாவிலிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுவதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து உபயோகப் பொருள்கள் கிடைக்கப்பெற்றதும் கிளிநொச்சியில் மீள்குடியேற்றப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, கரைச்சி ஆகிய பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென அரச அதிபர் கூறினார்.

பூநகரி, கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்கனவே மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த சகலரையும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்த்தும் இலக்குடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடியிருப்புப் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன், சிவில் நிர்வாகத்தைச் சீராக மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் திருமதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மீள்குடியேறும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் தீர்ந்து வருவதால், அவை விரைவில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுகின்றன.

அவை வந்து சேர்ந்ததும், தயார் நிலையில் உள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்களென்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (50)

# பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம்

கொழும்பு, ஜன.12

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதியாகப் புதிதாகப் பதவியேற்றுள்ள பேரருட்திரு. ஜோசப் ஸ்பீற்றரி மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, நேற்று முன்தினம் மாலை அங்கு சென்றனர்.

இறம்பைக்குளம் பங்குத் தந்தை அருட்திரு. எமிலியாஸ்பிள்ளை மற்றும் புனித அந்தோனியார் ஆலயப் பங்குக் குழுவினரின் தலைமையில் கூடிய பெருந்திரளான மக்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அவருக்கு வரவேற்பளித்தனர்.

இதில் வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பந்துல சி பெரேரா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா நகரசபைத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன், வவுனியா குடியிருப்புப் பிள்ளையார் கோவிலின் பிரதம குருக் கள் க.கந்தசாமி மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டார்கள்.

ஊர்வலமாக அந்தோனியார் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட பாப்பரசரின் பிரதிநிதி பேரருட்திரு. ஜோசப் ஸ்பீற்றரி, அங்கு இடம்பெற்ற விசேட திருப்பலிப் பூசையில் கலந்துகொண்டு பாப்பரசரின் ஆசியை ஆலயத்தில் குழுமியிருந்த பெருந்திரளான மக்களுக்கு வழங்கினார். அதன் பின்னர் இடம்பெற்ற வரவேற்பு, கலை நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்துகொண் டார்.

போரினால் பாதிக்கப்பட்டுப் பெற்றோரை இழந்து, சிறுவர் இல்லத்தில் தஞ்சமடைந்துள்ள சிறுவர்களையும், முதியவர்கள் மற்றும் காயமடைந்து அங்கங்களை இழந்துள்ளவர்களையும், மனிக்பாம் முகாமில் உள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களையும் அவர் பார்வையிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. (50)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் நடைபெறுகின்றது

கொழும்பு, ஜன.12

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் நடைபெறும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்து விட்டதாக தெரிவித்துள்ள திணைக்களம் இந்த இரு நாள்களுக்குள் வாக்களிப்பதற்கு தவறுகின்ற வாக்காளர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது. இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டை விநியோகம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விடுமுறை தினமான நேற்று முன்தினம் வாக்காளர் அட்டை விநியோகம் மேற்கொள்ளப்பட்டது என்று தபால்த் திணைக்களம் தெரிவித்தது..

வாக்காளர் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கும் தபால் நிலையங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் விநியோக நடவடிக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு பெறும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தும் வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்குப் பின்னர் உரிய ஆதாரங்களுடன் அருகிலுள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று விசாரித்துக்கொள்ளலாம். ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 15 ஆயிரம் நிலையங்களில் நடைபெறுவதுடன் இதில் வாக்களிப்பதற்கு 4 லட்சத்து 58 ஆயிரத்து 154 பேர் விண்ணப்பித்திருந்தனர். எனினும் அதில் 57,036 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. .

தபால் மூல வாக்களிப்பை கண்காணிப்பதற்கு பெப்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் ஆகியவற்றுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (50)

# வியாழனன்று சூரியகிரகணம்

கொழும்பு, ஜன.12

இயற்கையின் படைப்பில் மிக அரிதான காட்சியாகக் கருதப்படும் சூரிய கிரகணம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நிகழ்கிறது.

இந்த வருடத்தின் சூரிய கிரகணம் மத்திய ஆபிரிக்காப் பகுதியில் ஆரம்பித்து, உகண்டா, கென்யா, சோமாலியா வழியாக இந்து சமுத்திரப் பகுதியில் பயணிக்கும். இதன்போது மாலைதீவு, தென்.இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், பர்மா, சீனா ஆகிய நாடுகளிலும் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

இலங்கையில் தலைமன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 10 நிமிடம் 18 செக்கன்கள் வரை தெளிவாக இதனைக் காணலாம்.

(50)

## 'சனல்-4' மரணதண்டனை ஒளிநாடா தொடர்பான

# ஐ. நா. அறிக்கை வெளியாவதை தடுக்க எடுத்த முயற்சி தோல்வி

கொழும்பு, ஜன. 12

"சனல்- 4' வீடியோ குறித்து ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை விடுவதைத் தடுப்பதற்கு இலங்கை தீவிர முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது பலனளிக்கவில்லை என்று இப்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.நாவின் அறிக்கை வெளியாகப் போவதை அறிந்ததும், அது தமிழ் வாக்காளர் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு குறித்துக் கலக்கமடைந்த அரசு, அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

பிலிப் அல்ஸ்ரனின் அறிக்கை ஜனாதிபதித் தேர்தலில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து அரசு கவலையடைந்திருந்தது.

குறிப்பாகத் தமிழ் வாக்காளர்கள் குறித்து அது கலக்கமடைந்தது.

வெளிவிவகாரச் செயலாளர் றொமேஷ் ஜயசிங்க உடனடியாக பிலிப் அல்ஸ்ரனைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டாமென வேண்டுகோள் விடுத்தார்.

அல்ஸ்ரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசிற்கு கால அவகாசத்தை வழங்குமாறும் வெளிவிவகார செயலாளர் கேட்டுக்கொண்டார்.

எனினும் அல்ஸ்ரன் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

இதன் பின்னர் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் - கீ- மூனைத் தொடர்பு கொள்வதற்குப் பல தடவைகள் முயன்றார்.

எனினும் அவரால் பான் -கீ - மூனைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியவில்லை.

மாறாக, போகொல்லாகமவின் தொலைபேசி அழைப்புகள் செயலாளர் நாயகத்தின் தலைமை அதிகாரி விஜய் நம்பியாருக்கு மாற்றிவிடப்பட்டன.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹனவும் ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளைத் தொடர்புகொள்ள முயன்றார். எனினும் இந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

எவராலும் அல்ஸ்ரனை அவரது செய்தியாளர் மாநாட்டை நிறுத்தச் செய்யமுடியவில்லை - எனக் கூறப்பட்டது.

(அ-சி)

# 65 மில்லியன் டொலர் செலவில் வடக்குக்குப் புனர்வாழ்வுத் திட்டம்

கொழும்பு, ஜன.12

65 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் வடக்குக்கான அவசர புனர்வாழ்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

நிதி, திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

அமைச்சர் இங்கு மேலும் தகவல் தருகையில்:-

வடக்கு அவசர புனர்வாழ்வுத் திட்டத்திற்கு உலக வங்கியின் சர்வதேச அபவிருத்தி அமைப்பின் ஊடாக 65 மில்லியன் அமெரிக்க டொலரை கடனுதவியாக பெறப்படவுள்ளது. மீள்குடியமர்த்தல் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீள ஆரம்பிக்க, விவசாய நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தல், பொது உட்கட்டமைப்பு வசதிகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் ஆரம்பமாகும் இந்த வேலைத் திட்டம் 2011ஆம் ஆண்டு டிசெம்பருக்குள் முடிவடையவுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் மூலம் இடம்பெயர்ந்து வாழும் ஒரு லட்சம் மக்கள் நன்மை அடையவுள்ளனர். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த் துவதற்கு அரசாங்கம் ஐந்து கட்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. அதன் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களில் இந்தத் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வதேச அபிவிருத்தி அமைப்பு எந்த வித வட்டி அறவிடலும் இன்றி இந்த நிதியைக் கடனாக வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

(50)




ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கருஜயசூரியவுக்கும் பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள், றோட்டறிக் கழகப் பிரதி நிதிகள் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய உரையாற்றுவதையும் அருகில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் டி.எம்.சுவாமிநாதன் அமர்திருப்பதையும் முதற்படத்திலும், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: உமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் மணிலால் நாளை யாழ்.வருகிறார்

வலி வடக்கு,ஜன.12

யாழ்.உதைபந்தாட்ட லீக்கிற்கு உதைபந்தாட்ட மைதானம் அமைப்பதற்கான இடத்தை பார்வையிடுவதற்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் மணிலால் பெர்னான்டோவும் அவருடன் கூட இலங்கைக்கான ஜேர்மன் நாட்டு உயர் ஸ்தானிகரும் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இவர்கள் அரியாலையில் யாழ் உதைபந்தாட்ட லீக்கிற்கான மைதானம் அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிடுவதுடன் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளுடனும் கலந்துரையாடவும் உள்ளார்கள்.

இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.அந்தோனிப்பிள்ளை, செயலாளர் பிரான்சிஸ் ஆகியோர் மேற்கொண்டுள்ளார்கள். (1-86)

## அரச ஊழியர்களின் சம்பளத் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

வடமாகாண அரச நிறுவனங்களில் சேவைபுரியும் அரச ஊழியர்களின் இந்த (2010) வருடத்தில் மாதாந்தம் சம்பளம் வழங்கப்படும் திகதிகள் பற்றிய விவரங்களடக்கிய சுற்றுநிருபம் வடமாகாணத் திறைசேரியால் வடமாகாணத்தில் இயங்கும் சகல அரச திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் வருடம் ஜனவரி மற்றும் டிசெம்பர் மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் 22ஆம் திகதியும் பெப்ரவரி, மார்ச், மே, ஓகஸ்ட், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் 25ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவு 08ஆம் திகதியும் ஜூன், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் 24ஆம் திகதிகளிலும் ஜூலை மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவு 23ஆம் திகதியும் வழங்கப்படும் என இச் சுற்று நிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-302)

## மரக்கறிகளின் விலைகள் சரியத் தொடங்கியுள்ளன

சுன்னாகம்,ஜன.12

கொழும்பிலிருந்து பெருமளவு மரக்கறி வகைகள் எடுத்துவரப்படுவதால் அவற்றின் விலைகள் சரிந்துள்ளன.

கத்தரிக்காய் 100 ரூபாவாகவும், கரட் 110 ரூபாவாகவும், பூசனி 40 ரூபாவாகவும், பாகற்காய் 200 ரூபாவாகவும், பயற்றங்காய் 150 ரூபாவாகவும் தற்போது விலை குறைந்துள்ளன.

கடந்த வாரம் இவை அதிகரித்த விலையில் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை:-

உள்ளூர் விவசாயிகள் தமது பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் பெரிதும் இடர்ப்படுவதாகவும் பொருள்களின் விலை குறைந்து வருவதால் தாம் நஷ்டமடைய நேரிடுகிறது என்றும் கவலை தெரிவித்துள்ளனர். (1-38)

## சுத்திகரிப்பு சேவை ஆஸ்பத்திரிகளுக்கு விஸ்தரிப்பு

குருநகர்,ஜன.12

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் இயங்கும் மேலும் சில வைத்தியசாலைகளுக்கும் இம்மாதம் தொடக்கம் தனியார் சுத்திகரிப்புச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை , ஆதார வைத்தியசாலை -ஊர்காவற்றுறை, பிரிவு வைத்தியசாலை - சங்கானை மற்றும் யாழ்.பண்ணையில் இயங்கும் மருத்துவக் களஞ்சியம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலியில் உள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சுற்றுலா விடுதி ஆகியவைகளில் இச்சேவை விஸ் தரிக்கப்பட்டுள்ளது. (1-51)

**தவறிவிட்டது** சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் இந்திரகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (682123893V), சாரதி அனுமதிப்பத்திரம், பணப்பரிமாற்ற அட்டை என்பன 09.01.2010 அன்று கொடிகாமத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே.: 071 2056925, 077 9213726 (93742)

# சனாபதித் தேர்தல் 2010

### யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகஞ் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல் என்பன தொடர்பான பொதுமக்களுக்கான அறிவித்தல்

1. மேற்கூறப்பட்ட தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு 2010.01.11ஆந் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.
2. அந்த தேர்தல் மாவட்டத்தின் ஆட்கள் இடம் பெயர்ந்துள்ளதன் காரணமாக வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் விதம் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகஞ் செய்யும் முறை என்பன தொடர்பாக தெளிவுபடுத்துமுகமாக இந்த அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.
3. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

3.1 யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வாக்கெடுப்புப் பிரிவுகள் அடங்கியுள்ளன. அந்த வாக்கெடுப்புப் பிரிவுகளுள் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவு தவிர்ந்த எஞ்சிய வாக்கெடுப்புப் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு, அவர்கள் 2008 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரிகளுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகஞ் செய்வதற்கு அஞ்சல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

3.2 பருத்தித்துறை வாக்கெடுப்புப் பிரிவின் 36 இலிருந்து 43 வரையும் காங்கேசன்துறை வாக்கெடுப்புப் பிரிவில் 21 இலிருந்து 25 வரையும் மற்றும் 30 இலிருந்து 58 வரையுமான வாக்கெடுப்பு மாவட்டங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த பிரதேசங்களாகும். அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியுமென யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் கிராம அலுவலர்கள் மூலமாக வாக்காளர்களை அறிவூட்டுவார்.

3.3 யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவு

இந்த வாக்கெடுப்புப் பிரிவின் வாக்கெடுப்பு மாவட்டங்கள் எந்த பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்ததென்றும் அவற்றுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் விதமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரதேச செயலாளர் பிரிவு | உரித்தான வா.மா | வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| கரைச்சி (கிளிநொச்சி) | 1 - 42 | இல. 1 முதல் 11, மற்றும் 14 முதல் 25, 29, 32, 34 முதல் 42 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும். வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அஞ்சல் அலுவலகங்களிலிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.<br>கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த எஞ்சிய வாக்கெடுப்பு மாவட்டங்கள், இல. 12, 13, 26 முதல் 28, 30, 31, 33 ஆகிய வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள், கி/ கண்ணகைபுரம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தில் அந்த வாக்கெடுப்பு மாவட்டத்திற்குரிய அஞ்சல் அலுவலகங்களினால் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| கண்டாவளை | 43 - 58 | இல. 43 முதல் 58 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும். வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். |
| பூநகரி | 59 - 77 | இல. 59 முதல் 61 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக் கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி, பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>இல. 62 முதல் 63 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங் களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கி / கருக்காய்தீவு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட வுள்ளன.<br>இல. 64 முதல் 66 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கி /பூநகரி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>67 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/பாமன்கிராய் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை யில் அமைக்கப்பவுள்ளன.<br>68ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/கௌதாரிமுனை அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>இல. 69 முதல் 70 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கி /ஜெயபுரம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>இல. 71ம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையம் கி/கரியாலை நாகபடுவான் இல. 3 அரசாங்கப் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>72ம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/பல்லலராயன்கட்டு பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>73ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/முழங்காவில் மகாவித்தியாலயத்தில் அமைக்கப் படவுள்ளன.<br>74ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/நாச்சிக்குடா அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை யில் அமைக்கப்படவுள்ளன.<br>75ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி /கிராஞ்சி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன.<br>76ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி /வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>77ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் கி/இரணைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும். குறிப்பிட்ட வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அஞ்சல் அலுவலகத்திலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| பச்சிளைப்பள்ளி | 78 - 95 | இல. 78 முதல் 95 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிளிநொச்சி பிரதான அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்படும். குறிப்பிட்ட வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அஞ்சல் அலுவலகத்திலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். |

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2010 சனவரி மாதம் 11ஆந் திகதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



### நிவேதினி தேவதயாபரன்
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**புள்ளிகள் - 142**

நான் சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவி. எனது அப்பாவின் தொழில் வியாபாரம். எனக்கு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறவேண்டும் என்பதே என்னுடைய குறிக்கோள்.

நான் கல்வி கற்பதற்கு வழிகாட்டி நெறிப்படுத்திய திருமதி சாந்தினி புலேந்திரன் ஆசிரியர் அவர்களையும் மேலும் ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்களையும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களையும் உளமார வாழ்த்துகிறேன்.

எதிர்காலத்தில் ஆசிரியராக வரவேண்டும் என்பதே என்னுடைய ஆசை. அதனை எதிர்காலத்தில் நிறைவேற்றி சமூகத்திற்கு என்னாலான பணியினைச் செய்வேன்.



### சிவகுமாரன் ஜனனிஜா
**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**
**புள்ளிகள் - 147**

இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ளேன்.

எனது அப்பா வியாபாரியாக இருக்கிறார். அம்மா வீட்டுப் பணி செய்கிறார். நான் சித்தியடைவதற்குக் காரணமான எமது பாடசாலை அதிபர் பொ.இரத்தினராசா, வகுப்பாசிரியை ர.சுசிலா ஏனைய ஆசிரியர்களினதும் எனது பெற்றோரின் ஊக்குவிப்பும் என்னால் சித்தியடைய முடிந்தது.

நான் காலை 5 மணி தொடக்கம் 6.30 மணி வரையும் மாலை 6மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும் படிப்பேன். இதன் காரணமாக இன்னும் முயன்று எதிர் காலத்தில் ஒரு ஆசிரியையாக வருவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

சந்திப்பு: மூர்த்தி.



### சேதுப்பிரியா புவனேந்திரராசா
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**புள்ளிகள் - 140**

நான் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்றுப் புலமைப்பரிசிலில் 140 புள்ளிகளைப் பெற்றேன். நான் இந்நிலைமையை அடைவதற்கு எனது வகுப்பாசிரியர் திருமதி சாந்தினி புலேந்திரன், அவர் எம்மை தம் சொந்தக் குழந்தைகள் போல கற்பித்தார். மற்றும் எனது பாடசாலை அதிபர், பிரதி அதிபர் ஆகியோரும் உடுப்பிட்டி கல்வி நிறுவன ஆசிரியர்களும் தனியாக எனக்கு வழிகாட்டியாக இருந்தனர். எதிர்காலத்தில் நற்பிரஜையாக வரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். என் வீட்டில் பெற்றோர், உற்றார், உறவினர்கள் அனைவரும் எனக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தனர். நான் இறைவனின் ஆசியோடும் கல்விகற்று சித்தியடைந்தேன். நான் என்றும் இவர்களுக்கு மனமகிழ்வுடன் நன்றி கூறுவேன்.



### குமரேசன் கலைவர்ணன்
**வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலை**
**புள்ளிகள் - 134**

எனது அப்பா வன்னிப்போரில் ஷெல் தாக்கி இறந்து விட்டார். அவர் இருக்கும்போது எனது படிப்பிற்கு எதைக் கேட்டாலும் வாங்கித் தந்தார். நானும் எனது அம்மாவும் இரண்டு சகோதரர்களும் வவுனியா நலன்புரி முகாமில் வசித்து வந்தோம்.

அங்கு நான் மின்சார வசதி இல்லாத காரணத்தால் குப்பி விளக்கிலேயே படித்தேன். காலை 4 மணிக்கு என்னை அம்மா எழுப்பிவிடுவார். இரவும் 9 மணிவரை படிப்பேன்.

நான் இவ்வாறு படிப்பதற்கு எனது தாயே ஊக்குவித்தார்.

மற்றும் முகாமில் கல்வி கற்றுத்தந்த ஆசிரியர்களும் குறிப் பிடத்தக்கவர்கள். நான் புலமைப் பரிசில் பரீட்சையில் 134 புள்ளி எடுத்து சித்தியடைந்தமைக்கு எனது தாய்க்கு மிக்க நன்றி கூறுகிறேன். இப்போது நான் காசிநாதர் பாடசாலையில் கல்வி கற்று வருகி றேன். எனது எதிர்கால இலட்சியம் நான் ஒரு வைத்தியராகுவதே ஆகும்.



### லோகநாதன் நிதர்ஷா
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**புள்ளிகள் - 154**

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறக் காரணமாயிருந்தவர்கள் எனது ஆசிரியர்களே. அந்தவகையில் எனது பாடசாலை ஆசிரியரான திருமதி அருந்தவச்செல்வி செல்வராஜா, திருமதி சாந்தினி புலேந்திரன் ஆகியோரும் மற்றும் தரம் 1-4 வரை கல்வி கற்பித்த ஆசிரியை திருமதி நகுலேஸ்வரி தயானந்தன் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியை திருமதி கஜபானு ராஜ்குமார் ஆகியோருக்கும், எனது வெற்றிக்குக் காரணமாயிருந்த எனது பெற்றோர்களுக்கும், பல விசேட வகுப்புகளை ஒழுங்குபடுத்தி புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற வைத்தார்கள். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மற்றும் உறவினர்களும் நண்பிகளும் எனக்கு வழிகாட்டியாக இருந்தார்கள். அவர்களுக்கும் எனது நன்றிகள். மற்றும் தொடர்ந்தும் உயர்தர வகுப்புகளில் சிறந்த புள்ளிகளைப் பெற்று எனது பெற்றோரின் கனவுகளை நிறைவேற்றுவேன்.

## உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

அண்மையில் வெளியாகிய உயர்தரப் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



### அருணகிரி மனோராஜ்
**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**
**கணிதப்பிரிவு-2ஏபி மாவட்ட நிலை-32**

நான் எனது ஆரம்பக் கல்வி முதல் ஜி.சீ.ஈ.சாதாரணதரம்வரை செம்பியன்பற்று அ.த.க பாடசாலையில் கற்றேன். அப்பிரதேசம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ளது. இது வசதிகள் குறைந்த பிரதேசமானமையால் அங்கே தனியார் கல்வி நிலையங்கள் எதுவுமில்லை. இருப்பினும் பாடசாலைக் கல்வியை மட்டும் பயன்படுத்தி ஜி.சீ.ஈ.சாதாரணதரத்தில் 7ஏ2பி என்ற சிறப்பான சித்தியை எட்டமுடிந்தது. பின்பு உயர்தரக் கல்விக்காக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கணிதப் பிரிவில் சேர்ந்து கற்று 2ஏபி என்ற சித்தியைப் பெற்றேன். என்னைப் பொறுத்தவரையில் சுயமுயற்சியும் இறைபக்தியும் இருந்தால் எந்த இலக்கையும் எட்டமுடியும்.

அந்தவகையில் நான் இப்பெறுபேற்றை எடுக்க ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களிற்கு முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நான் வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் இருந்ததனால் அம்மா, அக்காமார் அருகிலில்லை. இருந்தும் அவர்கள் தொலைபேசி மூலம் எனக்கு ஊக்கமளித்துள்ளனர்.

இதனைவிட எனதருகில் இருந்து எந்நேரமும் படிப்பைப் பற்றியே சிந்திக்கத் தூண்டிய அண்ணா, அண்ணி, அன்ரி மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். அந்தவகையில் சின்னவயதில் இருந்தே நான் பொறியியலாளராக வரவேண்டும் என்று எந்நேரமும் கூறும் அப்பா இப்போது இல்லை. அதனால் என்னுடைய அப்பாவிற்கு இந் தப் பெறுபேற்றைச் சமர்ப்பணம்செய்கின்றேன்.



### திரேகா பாலசிங்கம்
**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**
**கலைப்பிரிவு- 3ஏ மாவட்ட நிலை-96**

நான் இப்பெறுபேறு கிடைத்தமையை இட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆரம்பக்கல்வியை கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் கற்று தரம் 6 முதல் உயர்தரம் வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றேன்.

இந்தவகையில் எனக்கு இப்பெறுபேறு கிடைத்தமைக்காக என்னை ஊக்குவித்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றும் நான் கல்வி கற்பதற்கு எனக்கு சகல வசதிகளையும் செய்து தந்த எனது அம்மா, மாமா, அன்ரிமார், சித்தப்பாமார் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எனக்கு மேலதிக குறிப்புகளைத் தந்துதவி சிறந்த பெறுபேறு எடுக்கத்தூண்டிய நண்பர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



### யோகநாதன் தனரூபன்
**கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி**
**வர்த்தகப்பிரிவு- ஏ2பி மாவட்ட நிலை-76**

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ.உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் ஏ2பி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 76ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது ஆரம்பக் கல்வியை கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்திலும் தரம் 6-13 வரையான கல்வியை கரவெட்டி விக்னேஸ்வாரக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டேன்.

அதிபர், ஆசிரியர்களின் அன்பான வழிகாட்டலும் பெற்றோரின் ஊக்குவிப்பும் எனது குடும்ப நிலையும், நான் தன்னம்பிக்கையும் கல்வியில் அக்கறையுடன் ஈடுபட வழிவகுத்தது எனலாம்.

எதிர்காலத்தில் கணக்காளராகி எனது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது சமூகத்திற்கும் என்னால் இயன்றவரை சேவையாற்ற விரும்புகின்றேன்.



### செ.சயந்தன்
**கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி**
**வர்த்தகப்பிரிவு- 2ஏபி மாவட்ட நிலை-64**

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 2ஏபி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 64ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனது ஆரம்பக்கல்வியை வரணி ஜி.ரி.எம்.எஸ்.இலும் இடைநிலைக் கல்வியை வரணி மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை விக்னேஸ் வராக் கல்லூரியிலும் கற்றேன்.

எனது பெறுபேற்றுக்கு அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் இவற்றுக்கு மேலாக எனது பெற்றோர், சகோதரர்கள் தந்த ஊக்குவிப்பும் நண்பர்களுடன் கலந்துரையாடல் மூலம் கற்ற கல்வியுமே காரணம் எனலாம்.

எதிர்காலத்தில் கணக்காளராகி எனது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு என்னாலான பணிகளைச் செய்வதற்கு விருப்புடையவனாயிருக்கின்றேன்.



### காயத்திரி விநாயகமூர்த்தி
**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**
**கணிதப்பிரிவு- ஏ2பி மாவட்ட நிலை-70**

நான் எனது ஆரம்பக்கல்வியை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும் தரம் 6-11 வரையான கல்வியை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியினை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றேன்.

நான் இப்பெறுபேறு பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இப்பெறுபேற்றைப் பெற வழிவகுத்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் எனக்கு ஆரம்பம் முதல் கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனக்குப் பெரிதும் உறுதுணையாய் இருந்த பெற்றோருக்கும் எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி? தருபவர்: வித்யா



**இடபம்**

சந்திராஷ்டமம் நீடிப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டிவரும். குடும்பத்தாருடன் இணக்கமாகச் செல்லவும். உங்களை நீங்களே குறைத்து மதிப்படாதீர்கள்.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் போராட வேண்டிவரும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.



**இடபம்**

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். தாயாரின் உடல்நிலை சீராகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள்.

உத்யோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.



**மிதுனம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்குப் பாராட்டுக் கிடைக்கும். தொட்ட காரியம் துலங்கும் நாள்.



**கடகம்**

புது முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள்.

வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.



**சிம்மம்**

நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தாய்வழி உறவினர்களுடன் விவாதம் வந்து நீங்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு.

உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி அதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.



**கன்னி**

சவால்களில் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். உறவினர்கள் உதவுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.



**துலாம்**

இரண்டு நாள்களாக குடும்பத்தில் இருந்த சச்சரவு நீங்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். இனிமையான நாள்.



**விருச்சிகம்**

ராசிக்குள் சந்திரன் தொடர்வதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலை வந்து நீங்கும். அனுஷம் நட்சத்திரக்காரர்களுக்கு அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தாருடன் பிரச்சினை வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்புக் குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.



**தனுசு**

சிக்கனமாக இருக்க நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். அலுவலகத்தில் அதிகாரிகளிடம் மோதல் வேண்டாம்.

தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.



**மகரம்**

எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

வியாபாரத்தில் புது பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திடீர் யோகம் கிட்டும் நாள்.



**கும்பம்**

பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். முயற்சிகள் பலிக்கும் நாள்.



**மீனம்**

இரண்டு நாள்களாக கணவன்-மனைவிக்குள் நிலவி வந்த பனிப்போர் நீங்கும். எதிர்பார்த்த பணம் வரும். கால் வலி, தலை வலி நீங்கும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். நிம்மதியான நாள்.

## சனாதிபதித் தேர்தல் 2010

**1981இன் 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 119ஆ ஆம் பிரிவின் கீழ் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கோரியுள்ள வாக்காளர்களுக்கான அறிவித்தல்**

1. மேற்கூறப்பட்ட வசதிகளைக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களையுடையவர்களுக்கு, தேர்தல்கள் ஆணையாளர், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் தொடர்பான தகவல்களை அவர்களின் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறிவிப்பார்.
2. குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்கு 2010.01.26 ஆந் திகதி முற்பகல் 7.00 மணிக்கும் பிற்பகல் 4.00 மணிக்கும் இடையில் சென்று அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு வாக்கையளிக்க முடியும்.
3. இவ் வசதிகளைக் கோரியுள்ள வவுனியா மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாக வதிகின்ற, 2008ஆம் ஆண்டிற்கான பதிவுகளுக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு அந்த நிலையங்களினுள்ளேயே வாக்களிப்பதற்குத் தேவையான வாக்கெடுப்பு நிலையங்களை வன்னி தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி (வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபர்) அலுவலர் அமைத்துக் கொடுப்பார்.
4. இவ்வாறான நலன்புரி நிலையமொன்றில் அல்லது இடம்பெயர்ந்து தற்காலிகமாக ஏதேனுமொரு இடத்தில் வதிகின்றவரொருவரினால் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 119ஆ ஆம் பிரிவின் கீழ் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரமொன்று நிராகரிக்கப்பட்டிருக்குமாயின், அவர்களது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்புப் பிரிவில் குறிப்பிட்ட வாக்கெடுப்பு மாவட்டங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று தனது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
5. வவுனியா, யாழ்ப்பாணம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருப்பவரொருவர், மேற்கூறப்பட்ட வசதிகளைக் கோரி விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பித்து அதற்கான அனுமதியையும் பெற்றிருப்பாராயின் அவர்கள் அந்த நலன்புரி நிலையத்தினுள்ளேயே வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளை அந்த நிலையங்கள் அமைந்திருக்கும் பிரதேசங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் செய்து கொடுக்கப்படும்.

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய,
2010 சனவரி மாதம் 08ஆந் திகதி.

## மின் இணைப்பு இல்லாமல் மக்கள் கவலை

கைதடி,ஜன.12

கைதடி கிழக்கு கிராமசேவகர் பிரிவில் உள்ள கைதடி இராசபுரிக் கிராமத்திற்கு இற்றைவரை மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற போதிலும் இப்பிரதேசத்திற்கு மின்னிணைப்பை வழங்க அதிகாரிகள் பின்னடிக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

இக்கிராமத்திலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள மின்னிணைப்பைப் பொருத்த ஏன் தயங்குகின்றார்களோ எனவும் இப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக் கப்படுகின்றன.

இம் மின்னிணைப்புச் சம்பந்தமாக சாவகச்சேரி பிரதேச சபையிடமும், தென்மராட்சிப் பிரதேச செயலகத்திடமும் மிக நீண்டகாலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்போது இது சம்பந்தமாக கைதடி மத்தி வளர்மதி சன சமூக நிலையத்தினர் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளரிடம் நேரடியாக முறைப்பாடு செய்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. (ப-288)


**ATHITHEIRAN TEC**

Inuvil Road, Manipay

பகுதி நேர போதனாசிரியர் விண்ணப்பம்

- குளிரூட்டும் சாதனங்கள் திருத்துதல்
- மோட்டார் வாகன மின்னியலாளர்
- இலத்திரனியல் சாதனங்கள் சீர்செய்தல்

தகமைச்சான்றிதலுடன் 21.01.2010 திகதிக்குள் காலை 12.00 மணிக்கு முன் நேரில் சமூகம் தரவும்.
இயக்குனர்



**உடன் தேவை**

இல.300, பிரதான வீதியில் இயங்கி வரும் JS Graphics நிலையத்திற்கு இரு பணிப் பெண்கள் தேவை.

★ விற்பனையாளர்

★ கணனி இயக்குனர் (கொம்பியூட்டர் ரைப்பிங் தெரிந்திருத்தல் வேண்டும். விற்பனை [illegible] வேண்டும்)

14.01.2010[illegible] நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு-0777446975

(93736)


## வீதியில் சமாந்தரமாக சைக்கிள் ஓட்டியோர் பொலிஸாரால் கைது

வலி.வடக்கு, ஜன.12

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பகுதிக்குள் சமாந்தரமாக சைக்கிள்களில் பயணம் செய்தவர்கள் சுன்னாகம் பொலிஸாரிடம் மாட்டினர்.

காங்கேசன்துறை வீதியில் ஏனைய வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் 10 சைக்கிள் ஓட்டிகளைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இதேபோன்று இலக்கத்தகடுகள், சைகைலைட்டுகள் இல்லாது வீதியில் சென்ற மூன்று லாண்ட் மாஸ்ரர்களும் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் சாரதிகள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 4 வருட ஆட்சியில் மலையக மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்தோம்!

## தெரிவிக்கின்றார் ஆறுமுகன்

மாத்தளை, ஜன.12



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறப் போவது உறுதி. ஆனால், அவர் பெறப்போகும் பெரும்பான்மை வாக்குகள் நம்முடையவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் நமது சக்தியை மற்றவர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பேற்படும் என்று இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.காவின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கடந்த வியாழன் காலை மாத்தளை மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தோட்டத்தொழிலாளர்கள் கலந்து கொண்டிருந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நமது மக்களின் அபிவிருத்தி மாத்திரமல்ல அவர்களின் பாதுகாப்பும் மிக முக்கியமானது. இதனைக் கருத்தில் கொண்டு தான் நாம் காலத்துக்குக் காலம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவுகளை மேற்கொண்டு வருகிறோம். சென்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரித்தோம். அதனால் அவர் மலையகத்தில் வெற்றி அடைந்தார். என்றாலும் ஏனைய பகுதி மக்கள் அவரைப் புறக்கணித்தமையால் அவர் தோல்வியடைந்தார். இதிலிருந்து நாம் புறக்கணித்து ஒ... ...த்தள்ள முடியாத ஒரு சக்தி என்பது ...ருக்கும் புரிந்தது.

நாம் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதால் நமது மக்களை அடகு வைத்து விட்டோம் என்று சிலர் கிண்டலடிக்கின்றனர். இப்போது நடக்கவிருப் பது ஒரு ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமே. ஒரு அரசை அமைப்பதற்கான தேர்தல் அல்ல. இதை




காங்கிரஸ் நன்றாக உணர்ந்துள்ளதாலேயே அதற்கேற்ற முடிவுகளை மேற்கொண்டோம்.

இ.தொ.காவிலிருந்து சிலர் விலகிப் போய் உள்ளனர். அவர்கள் என் மீதே குறை கூறுகின்றனர். இந்தக் குறைகளை எல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்தக் குறைகள் இதற்கு முன்னரும் என்னிடம் இருந்தன. ஆனால், இவர்கள் அப்போது பிரிந்து செல்லவில்லை. எல்லோரும் கலந்து பேசி முடிவெடுத்து பாதிவழிசென்ற பிறகே செல்கின்றனர் என்றால், அவர்கள் தமக்குப் பிரசாரம் தேவை என்பதற்காகவே இவ்வாறு செய்துள்ளனர் என்று தான் கூறவேண்டும். நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முடிவெடுத்தது மக்களாகிய உங்கள் சக்தியைக் கொண்டே.

வரப்போகும் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெல்வது உறுதியாகிவிட்டது. ஆனால், வெல்லப்போகும் பெரும்பான்மை வாக்கு நம்முடையதாகத்தான் இருக்கவேண்டும் என்ற முடிவோடு 26ஆம் திகதி தேர்தலில் வாக்களிக்கவேண்டும் - எனக் கேட்டுக்கொண்டார். (சி)

# இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒற்றுமையுடன் தமிழ்த் தலைமை எதிர்கொள்ள வேண்டும்

## மேல்மாகாண ஐ.தே.க. உறுப்பினர் ராம் அழைப்பு

கொழும்பு, ஜன. 12

தமிழ் பேசும் மக்களின் இழந்துபோன உரிமைகளை வென்றெடுப்பதற்கான பேரம் பேசும் சக்திகளாக, தமிழ் அரசில் தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒன்று பட்டுச் செயற்படுவதன் மூலமே எதனையும் சாதிக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான சி.வை.பி. ராம் தெரிவித்துள்ளார்.

''ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள ராம் நற்பணிமன்ற தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்கொண்டுள்ள மிக முக்கியமான காலகட்டத்தில் நாம் இன்று உள்ளோம். இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் மிகவும் நிதானமாகவும், பக்குவமாகவும், புத்தி சாதுரியத்துடனும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது.

இந்தத் தேர்தல் இனிவரும் பத்து ஆண்டுகளுக்கு எமது தமிழ் மக்களினதும் ஏனைய நாட்டு மக்கள் அனைவரினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றதாக இது அமையப் போகிறது.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பல்வேறு கசப்பான நிகழ்வுகளை எதிர்கொண்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்புகள், அவயவங்கள் இழந்த மக்களின் துயரம், கடத்தல், கைது போன்ற பயங்கரமான சம்பவங்கள், தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளாகச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் துன்பம். இவையெல்லாவற்றையும் எதிர்கொண்ட நிலையிலேயே யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாவற்றையும் விட கல்வி, சமூக அபிவிருத்தித் திட்டங்கள், தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களிலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றார்கள்.

இதனைவிட மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்குவது மறுக்கப்பட்டு கொத்தடிமைகள் போன்று நாள்சம்பளம் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது. இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இதுபோன்று பல்வேறு கசப்பான நிகழ்வுகளை கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்ட நிலையிலேயே தமிழ் மக்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ளனர்.

அவ்வாறான நிலைமையில் தமிழ் அரசியல் தலைமைகள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதே எமது பிரதான இலக்காக இருக்க வேண்டும்.

எமது பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தமிழ் மக்களின் இதுவரை காலமும் நிறைவேற்றப்படாத நீண்டகால அபிலாசைகளை நிறைவேற்றித் தருவார்கள் எனத் தமிழ்த் தரப்பினரிடம் உறுதியளித்துள்ளார். எனவே, அவரை அமோக வெற்றியீட்டச் செய்த நாம் அனைவரும் முன்வர வேண்டும். (சி)

# பொன்சேகாவின் கட் - அவுட்டுகள் காத்தான்குடியில் சேதமாக்கப்பட்டன

கொழும்பு, ஜன. 12

மட்டக்களப்பு, காத்தான்குடியில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகாவின் கட்- அவுட்டுக்கள் வாகனங்களில் வந்த குழுவினரால் சேதமாக்கப் பட்டுள்ளன.

குட்வின் சந்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மு.கா தவிசாளர் பஷீர் சேகுதாவுத் ஆகியோருடன் பொன்சேகா காட்சியளிக்கின்ற படங்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களில் வந்த சிலர் இக் கட் - அவுட்டுக் களைச் சேதமாக்கிச் சென்றுள்ளனரெனக் கிழக்கு மாகாண சபையின் மு.கா உறுப்பினர் யூ.எல்.எம்.முபீன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நபர்களைப் பொதுமக்கள் அடையாளம் கண்டுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இக்குற்றச்சாட்டை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு முற்றாக நிராகரித்துள்ளது. (சி)

# கிழக்கு தனியாகப் பிரிந்திருக்க வேண்டுமானால் ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்வது மிக அவசியம்

## மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை முஸ்லிம்களுக்கு விளக்கம்

கல்முனை, ஜன. 12

'இணைந்த வடக்கு - கிழக்கு வேண்டுமா? பிரிந்த கிழக்கு வேண்டுமா? -இதைத் தீர்மானியுங்கள் கிழக்கு முஸ்லிம் மக்களே!' என கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமா லெவ்வை தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவினை ஆதரித்து தேசிய காங்கிரஸ் கல்முனையில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றைக் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தியது. இக்கூட்டம் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம்.றியாஸ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களில் எமது கிழக்கு மாகாணம் முழுவதும் பயங்கரவாதம் காணப்பட்டது. இரவு நேரங்களில் கல்முனைக்கு வரமுடியாது, வைத்தியசாலைக்கு வரமுடியாது, மட்டக்களப்புக்குப் போக முடியாது. காரைதீவைத் தாண்ட முடியாது. இவற்றையெல்லாம் மறந்து விட்டீர்களா?

கிழக்கு பிரிக்கப்பட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பயனாகத் திருகோணமலை, கட்டைப்பறிச்சான், குரங்கு பாஞ்சான் போன்ற பிரதேசங்களிலுள்ள முஸ்லிம்களின் ஆயிரக்கணக் கான நெற்காணிகள் மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இன்று எந்நேரத்திலும் தங்கு தடையின்றி நாட்டின் எப்பாகத் திற்கும் சென்று வரமுடியும்.

முஸ்லிம்களே இல்லாமல் வடக்கு - கிழக்கு மாகாண சபையை உருவாக்கினார்கள். முஸ்லிம்களைக் கணக்கில் எடுக்காது 1988 ஆம் ஆண்டு முதலமைச்சர், நிதியமைச்சர் மற்றும் அமைச்சர்களை நியமித்தார்கள். இன்று என்ன நடந்திருக்கின்றது?

கிழக்கு பிரிக்கப்பட்டதினால் மாகாணத்தில் அமைதி ஏற்பட்டுள்ளது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சீர்குலைப்பதற்காக ஹக்கீம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து மீண்டும் வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு முயற்சிக்கின்றார். மக்களே இதனை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா? தீர்ப்பு உங்கள் கையில் உள்ளது. (சி)

# உத்தரவுகளுக்குக் கட்டுப்பட மறுக்கும் பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை?

## தேர்தல் ஆணையாளர் முஸ்தீபாம்

கொழும்பு, ஜன. 12

தேர்தல் சட்டங்களைப் புறக்கணிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத தேர்தல் பிரசார பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளரால் பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட உத்தரவு முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடிதங்கள், சுற்று நிருபங்கள் மற்றும் ஊடக அறிக்கைகளின் மூலம் தேர்தல் ஆணையாளரினால் விடுக்கப்பட்ட உத்தரவுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அம்பாறை, கம்பஹா, களுத்துறை மற்றும் மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் சட்டவிரோதத் தேர்தல் பிரசார பதாகைகள் அகற்றப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை பொலிஸார் தொடர்ந்தும் உதாசீனம் செய்தால், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் எனத் தேர்தல் செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சித் தலைவர்களுடன் இன்று நடைபெறவுள்ள சந்திப்பின்போது இந்த விடயம் குறித்துத் தேர்தல் ஆணையாளர் விரிவாக பேச்சு நடத்தவுள்ளார்.

எனினும், நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம் சட்டவிரோதப் பதாகைகளை அகற்றும் நடவடிக்கை நடைமுறைச் சாத்தியப்பாடற்றதென 'பவ்ரல்' என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல்களுக்கு இன்னமும் சொற்பகாலமே எஞ்சியிருப்பதாகவும் இந்த நிலையில் வழக்குத் தொடர்ந்து அதன் ஊடாக தீர்ப்பைப் பெற்றுக்கொண்டு அதனை அமுல்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதாக '... ...' ... வேற்றுப் ப... ...டியாராய்ச்சி தெரிவித்துள்ளார். (சி)

# பிள்ளையானின் கட்சிக்குள் பிளவா? இல்லை என்கின்றார் பேச்சாளர்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் எவ்வித பிளவுகளும் ஏற்படவில்லை என கட்சியின் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு தமது கட்சி பூரண ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும், இந்தத் தீர்மானம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் கட்சிக்குள் நிலவவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கும் தீர்மானம் காரணமாக கட்சிகள் பிளவு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரும், கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்த போதிலும் பல உறுப்பினர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பதனையே விரும்புகின்றனர் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட பிளவினைப் போன்றே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலும் பிளவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகக் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அழுத்தங்கள் காரணமாகப் பிள்ளையான் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் டெங்குநோய் தடுப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.12

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளைச் சுகாதாரப் பகுதியினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், அரச திணைக்கள அலுவலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவை சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு அப்பகுதிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் துப்புரவு செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் கிராம அலுவலகர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டத்தில் வீதிகள் துப்புரவு செய்யப்பட்டுக் கழிவுப் பொருள்கள் அந்தந்த இடங்களில் புதைக்கப்பட்டு வருகின்றன.

(1-207)


## Official Launch

IDM
Nation's ICT Academy
Affiliated University College

UNB

இலங்கையில் முதன்முறையாக
உலகப்புகழ் பெற்ற கனேடியப் பல்கலைக்கழகத்தின்
பட்டப்படிப்பு முழுக்கற்கைநெறியும்

**யாழ்ப்பாணத்தில்**

(உலகளாவிய ரீதியில் புகழ்பூத்த கனேடிய விரிவுரையாளர்களுடன் நிபுணத்துவம் வாய்ந்த இலங்கை விரிவுரையாளர்களின் சேவையுடன்)

- வட அமெரிக்காவின் பழமை வாய்ந்த பல்கலைக்கழகம்
- கனடாவின் முதலாவது ஆங்கில மொழி பல்கலைக்கழகம் 1785ல் ஆரம்பிக்கப்பட்டது.
- உலகளாவிய ரீதியில் முதல் ஐந்து பல்கலைக் கழகங்களுள் தரப்படுத்தப்பட்டது.
- 11400 பட்டதாரி மாணவர்களைக்கொண்ட வளாகம்.

University of New Brunswick – Canada வழங்கும்

**Bachelor of Computer Science (BCS-HONS)**

IDM Joints hands with University of New Brunswick - Canada
The Canadian Degree for the first time in Sri Lanka - In Country Delivery

உத்தியோகபூர்வ ஆரம்பவிழா

இடம் :
பாதுகாவலன் மண்டபம்
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

நாள் :
13.01.2010 புதன்
காலை 10.00 மணி முதல்

கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அனுமதி இலவசம் -

வடக்கிலிருந்து
அமெரிக்கா வரை உங்களோடு நாம்..........!

IDM
Nation's ICT Academy
Affiliated University College

IDM Affiliated University College
JAFFNA
Hotline : 0217 200 600

விபரங்கள் நாளைய உதயனில்


## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் பளைப் பிரதேச செயலகத்தின் பளை நகர கிராம அலுவலரும் தற்போது கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் கோப்பாய் மத்தி கிராம அலுவலராகக் கடமையாற்றுபவருமானள

**சி.பாலசுந்தரம்**

அவர்களின் பாசமிகு தந்தை

**நமசிவாயம் சின்னத்துரை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
பளைப் பிரதேச செயலகத்தில்கடமையாற்றி தற்போது யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றிவரும் அனைத்து அலுவலக நண்பர்கள்.

(சி/564047)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அணைந்த ஜோதி எங்கள் மைந்தன்**
**இராஜ்மோஹன் தீபிராஜ்**

திதி-அபரபக்க திரயோதசி 12.01.2010

பெற்றவர்களுடன்நூறாண்டுகள்
நிலைத்திருப்பாய்- என
நம்பியிருந்தோம் மகனே!
பெற்றவர்களின் நினைவுகள்
கனவாகிப் போனதோ?
பெற்றவர்களைப்பிரிய மாட்டேன் என்றாய்
எல்லாம் பொய்யாகிப்போனதோ?
அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும்
உறவுகளைக்கட்டி அணைத்தாய்!
எட்டு ஆண்டுகள் மட்டும் எமதுயிரில்
கலந்திருந்தாய் மகனே!
தவமிருந்து பெற்ற ஒரேயொரு மகனையும்
இழந்தோம்.பெற்றவர்களின் உயிர்
பிரியும்வரை மகனின் நினைவுகளைச்
சுமந்திருப்போம்.

தோற்றம்
19.01.2001

மறைவு
25.12.2008

(93486)

பெற்றோர்:
இராஜ்மோஹன் -விஜயலக்சுமி

நிரந்தர முகவரி: வேலன் பண்ணை ஒழுங்கை, கோப்பாய் மத்தி.
தற்காலிக முகவரி: தில்லைவயல், ஆறுகால் மடம்.

## நீங்காத நினைவுகளுடன்

எம் இதயம் நிறைந்த நாள்
09.10.1989

## ஒரு வருட நிறைவில்...



ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
ஆறாத் துயர் இன்னும் ஓயவில்லையம்மா...
அழகான உன் உருவம்தனை
தேடுகின்றோம் தினம் நீ... எங்கேயம்மா...?

உன் பூ முகம் எங்கே? உன் புன்னகை எங்கே?
உன் மகிழ்ச்சி எங்கே? உன் ஆசைகள் எங்கே?
யாவும் தொலைத்துவிட்டு சென்ற தூரம் எது?
உன்னோடு உறங்கிப்போன உண்மைகள் ஏது?

ஆசையுடன் பல்கலைக்கழகம் செல்ல இருந்த வேளை
பாதியுடன் உன் பயணம் மாறியதும் ஏனம்மா?
பரீட்சை ஒன்றில் அதி கூடிய புள்ளி கிடைத்தும்
அறியமுன் வாழ்வினில் முற்றுப்புள்ளி வைத்ததும் ஏனம்மா?

தாயின் கருவறையில் ஈர் ஐந்து மாதங்கள்
எம் அன்புச் சிறையில் ஈர் பத்து வருடங்கள் என்று
இறைவன் விதி எழுதிவிட்டதனாலோ...
கல்லறையில் காவியமாக விரைந்து சென்றாய்?

ஈர விழிகளோடு தினம் தூங்குகின்றோமம்மா...?
உடலின் ஒவ்வொரு அணுக்களும் கண்ணீர் வடிக்கின்றதம்மா...?
உன் உயிர் பிரிந்த வேதனை நினைவுகள்
எம் உயிர் பிரியும் வரை மாறாதம்மா....

(93533)

என்றும் உன் சுமைகளுடன்:
**அப்பா, அம்மா, தம்பி.**
இல.67, மத்தியூஸ் வீதி,கண்டிக்குளி,யாழ்ப்பாணம்.

எம் உதிரம் உறைந்த நாள்
12.01.2009

**செல்வி சாளினி தேவராஜா**

(யா/ திருக்குடும்ப கன்னியர் ம[illegible] 2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
07 . 07 . 1967



இறப்பு
04 . 01 . 2008

**செல்வி சுகந்தி சுந்தரலிங்கம்** (சுகந்தம்)

திதி: துவாதசி (12.01.2010)

ஈராண்டு சென்றதம்மா-நீர்
எம்மை விட்டுப் பிரிந்து
நித்தம் புலம்புகின்றோம்
உந்தன் திருமுகத்தைக் காணாமல்
அம்மா என்று ஒலிக்கும்-உனது
குரல் கேளாதோ எங்கள் காதில்!

என்றும் உன் பிரிவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

அரசினர் வைத்தியசாலை முன்பாக,
சாவகச்சேரி.

(93604)


# குழம்பித் தெளிந்த கூட்டமைப்பும் சம்பந்தரின் ஆளுமையும்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்பதுதொடர்பில்நீண்டவாதப்பிரதிவாதங்கள், குழப்பங்கள், தன்னிச்சையான முடிவுகள், இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தனித்த முடிவு, அதனூடான அழுத்தங்கள், பல்வகைப்பட்ட விமர்சனங்கள் என பல நிகழ்வுகள் நடைபெற்று விட்டன. நீண்ட குழப்பத்தின் பின்னர், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களின் ஏகோபித்த ஆட்சிமாற்றத் திற்கான முடிவை எட்டியது


சம்பந்தன்

மட்டுமல்லாமல், இந்த தாமதத்தினூடாக சில அரசியல் அடைவுகளையும் நிகழ்த்தக்கூடிய தீர்மானத்தை அடைந்தமையானது ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியது போன்றே கருத வேண்டியுள்ளது. அத்துடன் திரு. இரா.சம்பந்தர் அவர்கள் தனது அரசியல் சாணக்கியத்தையும், முதிர்ச்சியையும் வெளிப்படுத்தியதனூடாக தனது தலைமைத்துவ ஆளுமையை வெளிக்காட்டியமையானது தமிழ் பேசும் மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் விடயமே. எனினும் இத்தீர்மானத்தை எடுக்கும் செயற்பாட்டின்போது அரசியலில் அவருக்குப் பூட்டப்பிள்ளைகளாகவும்கொப்பாட்டப் பிள்ளைகளாகவும் இருக்கும் சிலரின் ஆக்ரோசமான கருத்துக்களையும் எதிர்கொள்ளாமல் தீர்மானம்எட்டப்படவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.இதில் நகைச்சுவையான விடயம் என்னவெனில், இந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவை ஆட்சிக்கு வர இடமளிக்காமல் முன்மொழியப்பட்டதானது, ராஜபக்ஷ அவர்களைப் பதவிக்கு கொண்டுவரும் முயற்சிக்கான ஒருவகை அனுகுமுறையாகும் என்பது வெளிப்படையானது. ராஜபக்ஷ அவர்களை பதவிக்கு கொண்டு வர நேரடியாகவும் பின்னாலிருந்தும் உசுப்பேற்றிவிட்டு ஒன்றும் தெரியாது போன்று பாசாங்கு செய்யும் சில தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழ்மக்கள் அடையாளம் காணவேண்டும்.சரத்பொன்சேகாவிற்கு ஆதரவு தெரிவிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்தில் சரத் பொன்சேகாவை நல்லவர் என்றோ, தமிழ்மக்களுக்கு உரிமைகளைத் தந்துவிடுவார் என்றோ, அப்படிப்பட்ட கோரிக்கைக்கு உடன்படுவார் என்றோ, எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை சரத் பொன்சேகா அவர்களிற்கு வாக்களிக்க கோருவதனூடாக அவர் தமிழினத்திற்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்கள், செய்த அநீதிகளை ஏற்று, அவர் செய்ததை மன்னிப்பது போன்று விளக்கம் கொடுக்கவும் கூடாது. அவலத்தையும் அழிவையும் தந்த முதல் எதிரியான ராஜபக்ஷ அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதற்கு மட்டுமான தெரிவே சரத் பொன்சேகா என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.எது எப்படியோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


சரத் பொன்சேகா

குழம்பித் தெளிந்துள்ளதானது எதிர்கால அரசியல் செயற்பாடுகளை சிறுபான்மைக் கட்சிகள் தங்களது கொள்கையில் மாறுபடாது தீர்மானங்களை எடுப்பதனூடாக ஆட்சி மாற்றங்கள் தங்களுக்குச் சாதகமாக வருமாயின் அதற்காக புரிந்துணர்வுடன் கூடிய உறவை வைத்துக்கொள்வது அரசியல் சாணக்கியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக 1989 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய இராணுவத்தை வெளியேற்ற அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸா அவர்களுடன் உறவை வைத்து ஆயுதங்களையும் பெற்று, இந்திய இராணுவத்தை வெளியேற்றிவிட்டு, பின் அதே ஆயுதங்களைக் கொண்டு பிரேமதாஸா அவர்களின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகள் விடு தலைப்போரில் ஈடுபடவில்லையா?1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா அவர்கள் ஆட்சிக்குவர ஆதரவளிக்க வில்லையா? பின்னர் 2001 இல் சந்திரிகா பண்டாரா நாயக்காவை ஆட்சி யிலிருந்து அகற்றி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ரணில் விக்கிரமசிங்க வெல்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவில்லையா? பின்னர் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் அவர்கள் சர்வதேச வலைப் பின்னலுக்குள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொண்டு சென்று சிதைத்துவிடுவார் என்று கூறி, ரணிலை ஆட்சிக்கு வராமல் செய்ய ராஜபக்ஷ அவர்கள் வெற்றி பெறுவதற்கு சூழல் அமைத்துக்கொடுக்க வில்லையா? இந்த அனைத்து தீர்மானங்களும் தமிழீழ விடுலைப்புலிகள் ஆயுதபோராட்ட பலம் இருந்த போது- ஒரு விடுதலை இயக்கம் நடைமுறை அரசை நிறுவி நிர்வகித்துக் கொண்டிருந்த போது- எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். அப்போதைய அரசியல் சூழல்களில் விடுதலைப்புலிகள் தமது ஆயுதப்போராட்ட வலுவை அடிப்படையாகக் கொண்டு தங்களுக்குப் பொருத்தமான வெளியேற்ற, குறிப்பாக தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சி மாற்றத்திற்கு வழிசமைப்பதற்காக சரத்பொன்சேகாவிற்கு சார்பாக என் வாக்குகளைப் பிரயோகிக்கக் கூடாது?தற்போதையஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நீடிப்பதற்கான கோரிக்கையை நிராகரித்துத் தோற்கடிக்கச் செய்ய வேண்டும் என்ற முடிவை எட்டுவதற்காக, எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளரான சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது என ஏகமனதான தீர்மானத்தை நோக்கி நகர்த்தியமையானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவரின் மதிநுட்பமான அனுபவ அரசியலின் வெளிப்பாடாகும். அத்துடன் சரத் பொன்சேகா அவர்களை ஆதரிக்கும் முடிவை தமிழ்த்தேசி யத்தை விட்டு விலகிப்போவதாக கருதுகோடல் கொள்ளக் கூடாது. எஞ்சியுள்ள கோவணம் பறிபோவதை தடுப்பதைப்பற்றி சிந்திக்காமல், கோட், சூட் போடுவதைப் பற்றிச் சிந்திப்பது


மஹிந்த ராஜபக்ஷ

காலத்திற்குப்பொருத்தமானதல்ல. எனவே தமிழ்மக்களின் அரசியல் எதிர்காலத்தைப் பற்றி தீர்மானிக்க தற்போதைய யதார்த்த அக, புறநிலையை புரிந்து வெற்று வாய்சவடால்களைத் தவிர்க்க வேண்டும். மற்றும் சரியான மதிப்பீடும் ஆய்வும் தேவை.அதில் தமிழ்மக்களின் பலம், பலவீனம், இலக்கை அடைவதற்கான வாய்ப்புகள், அதிலுள்ள நெருக்கடிகள் போன்றவற்றின் அடிப்படையில் சமகாலத்தில் செய்யப்படவேண்டிய அரசியல் நகர்வுகளைச் செய்யவேண்டும். இச்செயற்பாட்டினூடாக போடப்படும் அடித்தளங்களே எதிர்காலத்தல் செய்வதாயின் தமிழ்மக்கள் தமது வாக்குகளை சரத்பொன்சேகாவிற்கு அளித்தேயாக வேண்டும் என்பதில் மறுகருத்தில்லை.

ராஜபக்ஷ அவர்களை ஆட்சியில் அமர இடமளிக்கக்கூடாது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இரண்டாவது தீர்மானமாக, இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களையும் ஆதரிக்கக்கூடாது என்று சில உறுப்பினர்கள் முன்னெடுக்கத் தெளிவான, உறுதியான அரசியல் ஆளுமையுள்ளவர்களையும், அரசியல் ஆளுமை இல்லாதவர்களையும் அடையாளம் காட்டியுள்ளது. இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத்திற்கு பயனுள்ளதாகவே அமையும். தமிழீழ விடுதலைப் புலிகளின் கடந்தகால சில அரசியல் முடிவுகளின் போதும் சரி, உலக அரசியல் வரலாறுகளிலேயேயும் சரி, தேவைக்கேற்ப எதிரியை தெரிவுசெய்வதற்காக வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். தற்போது உள்ள சூழலில் தமிழ்மக்களின் வாக்குகள் மட்டுமே அவர்களின் பலம் என்றிருக்கும் போது, தமிழ்மக்களுக்கான உரிமைகளை வழங்குவது தொடர்பில் அக்கறையில்லாமல் அவர்களை அழித்துக் கொடுமைப்படுத்திவிட்டு,தமிழ்த்தேசியத்தைத் தகர்க்கவும் பதவிக்கதிரைகளைக் காட்டி விலைபேசவும் முயன்ற ராஜபக்ஷ அவர்களை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை நிலைநாட்டுவதற்கான அடிப்படை. எனவே இதற்கு புரிதலும், தெளிதலும், வெளிப்படைத்தன்மையும், ஏற்றுக்கொள்ளும் மனநிலையுமேமுக்கியம்.

அத்துடன் நகர்வுப்பாதையைத் தீர்மானித்து அதற்கான சரியான அணுகுமுறையைக் கையாண்டு உறுதியாக நகர்தலே தமிழினத்தின் அரசியல் இறுதி அடைவிற்கு அவசியமானது.

-அபிஷேகா-

★★★

# இங்கு நீதியான தேர்தல் நடப்பது குறித்து அமெரிக்கா மிகக் கரிசனை கொண்டுள்ளது

## அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாகவும், சுதந்திரமானதாகவும், வன்முறைகள் அற்றதாகவும் அமையவேண்டும் என்பது குறித்துத்தான் கரிசனை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கா, இடம்பெயர்ந்த மக்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே தேர்தலில் வாக்களிப்பதற்காகத் தம்மைப் பதிவு செய்துகொண்டுள்ளமை குறித்து ஏமாற்றமும் வெளியிட்டுள்ளது. 'த சண்டே ரைம்ஸ்' வார இதழுக்கு வழங்கியுள்ள பேட்டியில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பட்ரீசியா புட்டெனிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியுடன் அமெரிக்கா மீண்டும் நேர்காணலில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளதா என்பது குறித்து உறுதிப்படுத்தவோ நிராகரிக்கவோ மறுத்துள்ள அவர், மோதலின்போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இடைநடுவில் சிக்கியுள்ளவர்களுக்கு நீதி வழங்குவதற்காக இலங்கை அரசு யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணையை நடத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

மனிதஉரிமை மீறல் விடயங்களுக்குத் தீர்வு காணப்படும்வரை இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை வழங்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

. இலங்கை, அமெரிக்காவின் நீண்டகால சினேகிதன். எனினும் இருதரப்பு மத்தியிலும் கரிசனைகளும் பதற்றமும் காணப்படுகின்றன எனச் சொல்வதே நேர்மையானது. எனினும் இது இயல்பானது.

எமது முக்கிய கரிசனைக்குரிய சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தோர் விடுவிக்கப்படுதல், மீள்குடியேற்றம், முகாமில் உள்ளவர்களின் நடமாட்டச் சுதந்திரம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தற்போது வர்த்தகம், புனர்நிர்மாணம் குறித்துக் கவனம் செலுத்தும் நிலையில் உள்ளோம்.

என்றாலும், எமது முக்கிய கவனம் தற்போது எதிர்வரும் தேர்தல் தொடர்பாகவே உள்ளது. அமெரிக்காவின் விருப்பத்திற்குரிய வேட்பாளர் என எவரும் இல்லை. எனினும், தேர்தல் நியாயமானதாகவும், சுதந்திரமானதாகவும், வன்முறைகள் அற்றதாகவும் அமையவேண்டும் என்பது குறித்துக் கவலை கொண்டுள்ளோம்.

'கட் - அவுட்'கள் தொடர்பாக சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தேர்தல் ஆணையாளர் அவற்றை அகற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். சில அகற்றப்பட்டுள்ளன. பிரசார அலுவலகங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அச்சுறுத்தல் மற்றும் வன்முறை இல்லாமல் மக்கள் தங்களது வாக்குகளைச் செலுத்தவேண்டும்.

அமெரிக்கா யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்பது குறித்து தீவிரமாகக் கவனம் செலுத்துகின்றது. பெருமளவில் இலங்கையர்களும் இது குறித்து அக்கறை கொண்டுள்ளனர்.

இலங்கை ஜனநாயக நாடென்ற வகையில் சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களைப் பின்பற்ற உறுதியளித்துள்ளது. இதனால் இந்த நாட்டு மக்களுக்கு மாத்திரமல்லாமல் உலக நாடுகளுக்கும் அதன் கடப்பாடுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல் வரலாறு ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசு இந்த உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யவேண்டும்.

இலங்கையுடன் எமக்கு நீண்டகால பாதுகாப்பு உறவுள்ளது. எனினும், உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் காரணமாக 2008 இற்குப் பின்னர் எம்மால் சிலவகைப் பயிற்சிகளை வழங்க முடியாமல் போனது.

இது நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கு முயல்கிறோம். முழுமையான பயிற்சியை வழங்க விரும்புகிறோம்.

வாஷிங்டனில் வெளிவிவகாரக் கொள்கை என்பது பகிரங்கமான விடயம். பலர் இதில் தொடர்புபட்டுள்ளனர். காங்கிரஸ் வெளிவிவகாரக் குழுவைச் சேர்ந்த நாங்கள் இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கை எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பாக ஒபாமா நிர்வாகத்திற்கு அறிக்கையொன்றை வழங்கினோம்.

அது மிகவும் சாதகமான அணுகுமுறையைக் கொண்டிருந்தது. அதேவேளை, இலங்கைக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவது குறித்த காங்கிரஸின் மக்கள் குழு கடும் நிலைப்பாட்டை எடுத்தது. கொள்கைகளைத் தீர்மானிப்பதில் பல சக்திகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதனால் இலங்கை இராணுவத்துடன் முழுமையான தொடர்புகளை ஏற்படுத்த முடியாதுள்ளது.

மனித உரிமைகள் விடயத்திற்குத் தீர்வு காணும் வரை இவ்வாறான ஒத்துழைப்பு சாத்தியமற்றது.

தேர்தல் வன்முறையற்றதாக, சுதந்திரமானதாக, நீதியானதாக அமைய வேண்டும் என்பதே எமது முக்கிய அக்கறைக்குரிய விடயம்.

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தம்மைப் பதிவு செய்து வாக்களிப்பதற்கான உரிமையைக் கூடியளவிற்கு வழங்குவதும் இதில் அடங்கியுள்ளது.

மிகவும் சவாலான பணியைப் பூர்த்தி செய்வதற்குத் தேர்தல் ஆணையாளர் மிகக் கடுமையாகப் பாடுபடுகிறார். தனது அதிகாரிகள் இடம்பெயர்ந்த மக்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதிவு செய்தவர்களின் எண்ணி[illegible] ஏமாற்றமளிக்கும் அளவிற்கு குறைவாகவுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தற்போது தேர்தல் பற்றிச் சிந்திக்காமல் உயிர்வாழ்தல் பற்றியே சிந்திப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

பெருமளவு இலங்கையர்களைப் போன்று நாமும் தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான கரிசனைகள் உள்ளன எனக் கருதுகிறோம்.

அவர்களின் வாழ்க்கை மீது அவர்களே செல்வாக்குச் செலுத்தும் நிலையை உருவாக்குவதன் மூலமே இதற்குத் தீர்வு காணலாம்.

இதனை அரசமைப்பின் 13 ஆவது அல்லது 17 ஆவது திருத்தத்தின் மூலம் ஏற்படுத்துவதா அல்லது தேர்தல் மூலமாகவா என்பதை இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

எனினும் அரசியல் நல்லிணக்கத்தைத் தாமதிப்பது நாடு மீண்டும் எழுச்சி பெறுவதைப் பாதிக்கும் - எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் ஏந்திப் போராடியோருக்கு சுகபோகம் அப்பாவிகளான எங்களுக்குச் சிறைவாசமா?

## திருமலை அரசியற் கைதிகள் குமுறல்

திருகோணமலை, ஜன.12

அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இன்று அரசில் உயர் பதவிகளை வகித்துக் கொண்டு சுகபோகங்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால், அப்பாவிகளாகிய நாம் எவ்வித விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படாமல் சிறைச்சாலையில் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

-இவ்வாறு திருகோணமலைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் அவர்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

திருகோணமலைச் சிறைச்சாலையில் நீண்டகாலமாக பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியற் கைதிகள் அவர்களின் விடுதலையைக் கோரி உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

அவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டம் குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கடிதங்களிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். இக் கடிதத்தில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 35 அரசியற் கைதிகள் கையொப்பம் இட்டுள்ளார்கள்.

அவர்கள் இக்கடிதங்களில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

''உண்மையாக இயக்கங்களுடன் இணைந்து போராட்டம் நடத்தியவர்களுக்கு அரசு பெரிய பெரிய பதவிகளைக் கொடுத்து அவர்களை அருகில் வைத்திருக்கின்றது. அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விட்டது. ஆனால், அப்பாவிகளான நாம் என்ன தவறு செய்தோம்?. ஏன் எம்மை தொடர்ச்சியாகத் தடுத்து வைத்துள்ளார்கள்.

சுமார் 55 இற்கும் அதிகமானவர்கள் பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தொடர்ச்சியாக திருகோணமலைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளளோம். எம்மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. எனவே, தமிழ் அரசியற் கைதிகளான எம்மை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் அல்லது பிணையிலேனும் விடுவிக்க வேண்டும் அல்லது எமக்குப் பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தியே நாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளோம். நாம் எமது போராட்டத்தை இடை நிறுத்த மாட்டோம். எமது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை சாகும் வரையான போராட்டத்தை முன்னெடுப்போம். எம்மை யாரும் சாக்குப் போக்குகளைக் கூறிச் சமாளிக்கவோ, எங்களின் மனங்களை மாற்றவோ, எம்மை ஏமாற்றவோ முடியாது.

அரசின் மனிதாபிமானமற்ற நடவடிக்கையால் நாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது குடும்பம், கல்வி, வாழ்க்கை ஆகியவற்றை இழந்து தனிமரமாகி விட்டோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எத்தனையோ நல்ல விடயங்களை செய்து மக்கள் மத்தியில் பிரபலம் அடைந்து வருகின்றார் என்று அறிகின்றோம். ஆனால், ஏன் அவர் எமது விடுதலை தொடர்பில் இன்னமும் உறுதியான முடிவு எடுக்காமல் உள்ளார்?.

அரசு எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஒருவாரகால அவகாசம் வழங்குகின்றோம். அரசு ஒருவாரத்துக்குள் உரிய நடிவடிக்கை எடுக்கத் தவறினால் மரணிக்கவும் தயங்க மாட்டோம்.''

(சி)


**வேலையாள்கள் தேவை**

1.சிற்றுண்டி தயாரிப்பவர்கள்
2.சிற்றுண்டி பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
3.கைவேலை செய்வதற்கு (பெண்கள், ஆண்கள்)
4.சமையல் தெரிந்தவர்கள் (அசைவம்)
5.காசாளர் (கணக்கு மெசின் பாவித்து பில், கணக்குகள் செய்யக்கூடியவர்)

* உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வயது 20 -40 வரை

தொடர்பு: DILAN HOTEL
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/564009)


# படையினரின் ஆதரவில் சிங்கள குடியேற்றங்கள் கிண்ணியா பிரதேச சிறுபான்மை மக்கள் அச்சம்

கிண்ணியா, ஜன. 12

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிலும், அதனை அண்டிய எல்லைக் கிராமங்களிலும் படையினரின் உதவியுடன் சிங்கள குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கிண்ணியாப் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் - முஸ்லிம் மக்களின் பூர்வீக கிராமங்களான மணியரசன் குளம், உப்பாறு, குரங்குபாஞ்சான் ஆகிய இடங்களில் இவ்வாறான சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச உயர் பதவிகளை வகிக்கும் சில சிங்கள அதிகாரிகளும் இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு உதவி செய்து வருகின்றார்கள் என்றும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த கால யுத்தச் சூழ்நிலை காரணமாக இப்பிரதேசங்களில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் இடம்பெயர்ந்து சென்றுள்ளார்கள். அவர்கள் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இதேநேரம், கிண்ணியாவின் எல்லைக் கிராமங்களான வான்எல, கந்தளாய், சேதுநுவர ஆகிய இடங்களில் படையினரின் ஆதரவுடன் பெருமளவில் சிங்கள பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள் என்றும் பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிகளுக்குள் பலாத்காரமாகப் பிரவேசித்து, அவற்றைத் துப்புரவு செய்து காணிகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளிலும் பெரும்பான்மை இனத்தவர்கள் பரவலாக ஈடுபட்டு வருகின்றமையை அண்மைய நாள்களில் கிழக்கு மாகாணத்தில் அவதானிக்க முடிகின்றது. (சி)


**தேவை**

ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கும்
1. பிலிப் நேசிங் ஹோம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்
2.சன்றைஸ் மெடிகிளினிக்
பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணம்
என்பவற்றுக்கு- பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை
1. தாதியர் (பயிற்றப்பட்ட பெண்)
2. தாதிய உதவியாளர் (பழகவிரும்புவர்கள் -பெண்)
3. மேற்பார்வையாளர் -ஆண் 40வயதுக்கு மேல்
4. வரவேற்பாளர் (பெண், கணணி அறிவுள்ள A/L படித்த) (மாநகர சபை எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது)
நேர்முகதேர்வு: 13.01.2010 புதன், 17.01.2010 -ஞாயிறு காலை 9 மணி முதல் 12 மணிவரை
இடம்: சன்றைஸ் மெடிகிளினிக் பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.
(c/564036)



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

*Manufactured By:*
Sithara Products
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத் தர்மகர்த்தாசபை உறுப்பினர்
திரு.ஐ.இராசேந்திரம் அவர்களின் அன்பு மகன்

**இராசேந்திரம் விஜயகுமார்**
*(கண்ணன்)*

(மின் அத்தியட்சகர் மின்சாரசபை -சுன்னாகம்)
அவர்களின் மறைவினால் மீளாத்துயருற்றிருக்கும் அவரின் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம் நாச்சிமார் கோயில்.

துயரைப் பகிர்ந்து கொள்ளும்: தர்மகத்தா சபையினர்.

(c/564048)

## கெருடாவில் விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.12

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மிதி வண்டி விபத்தில் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த க.தியாகராசா (வயது 67) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(1-207)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 ★ 08 ★ 1935



உதிர்வு 18 ★ 12 ★ 2006

**அமரர் தம்பு கோபாலபிள்ளை**
(நயினாதீவு) திதி-திரயோதசி (12.01.2010)

சீரோங்கும் நயினையம் பதியினிலே நன்றே!
பேரோங்கும் குடும்ப கலசமாய் திகழ்ந்தே
தக்க குணம் நிறை சான்றோர்களாய் எமை
மிக்க அன்புடன் வாழ வழி செய்தீர்களே!
தங்கள் பிரிவை எம்மால் தாங்க இயலவில்லையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாகபூஷணி
அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

5ஆம் வட்டாரம், நயினாதீவு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்கள்.

(93586)

## மரண அறிவித்தல்

**நாகப்பர் சின்னையா குமாரசாமி (NSK) (பிரபல வர்த்தகர்)**



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர், சட்டநாதர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் நாகப்பர் சின்னையா குமாரசாமி அவர்கள் 04.01.2010 திங்கட்கிழமை அதிகாலை லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களாகிய நாகலிங்கம், தெய்வானை, வைத்திலிங்கம், மார்க்கண்டு ஆகியோரின் சகோதரனும் செந்தில்மதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகம், தர்மராசா, செல்வராசா மற்றும் மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் நகுலேஸ்வரி (யாழ்ப்பாணம்), இராமச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஞானக்குமார் (லண்டன்), ராஜ்குமார் (இலங்கை), சூரியகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்), ஜெயந்தி (லண்டன்), சுகந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லக்சுமி, கலாவதனி, சாயிலதா, வனிதா, லிங்கநாதன், மனோகரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் மதீசன், சிந்துஜா, நீபஜன், நேமினா, ஜனகன், தேனுஜா, கிருபஜா, ஹரிசன், திவாபரன், ஷோபனா, அக்ஷரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Feltham Assembly Hall, Feltham Park, Hounslow Road, Feltham, TW 14 9DN இல் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் நண்பகல் 12 மணிக்கு Ogden Chapel, Hanworth, Crematorium, Feltham, Middle Sex, TW 13 5 JH இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானக்குமார் (மோகன்) - 0208 5772490, 07599172975,
ராஜ்குமார் (பவா) - 0094 114879711,
சூரியகுமார் (நந்தன்) - 0208 5709192, 07842133829,
ஜெயக்குமார் (ஜெயா) -0208 5709583, 0777 3614144,
ஜெயந்தி - 02085696528, சுகந்தி - 001 416 4412 946.

தகவல்: மனைவி, பிள்ளைகள் (லண்டன்).

(93727)

## தசாக கிருகயக்ஞ அழைப்பு



நிகழும் விரோதி வருஷ மார்கழித் திங்கள் 20ஆம் நாள் (04.01.2010) திங்கட்கிழமை முன்னிரவு சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் இராமநாதக்குருக்கள்**

அவர்களின் ஆத்மார்ந்த கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

நாளை (13.01.2010) புதன்கிழமை
மு.ப. 10 மணிக்கு - தசாகம்
14.01.2010 வியாழக்கிழமை - ஏகோதிஷ்டம், மாசிகம்
15.01.2010 வெள்ளிக்கிழமை காலை - சபிண்டீகரணம்
16.01.2010 சனிக்கிழமை மதியம் - கிருகயக்ஞம் (சமாராதனை)


மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் (மதியபோசனம்) கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிழக்கு வீதி, நல்லூர்.

(93621) குடும்பத்தினர். 0778484444.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டைக் கடந்த பின்னும் கம்பீரத்தோடு நிற்கும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்



நூற்றிப்பதினைந்தாவது வருடத்தில் தனது கல்விப்பணியினைத் தொடர்ந்து வரும் இக்கல்லூரியானது, தற்போதைய அதிபர் திரு.ச.திரவியராசா அவர்களின் சிறப்பான முகாமைத்துவத்தின் மூலமும் சிறந்த நிர்வாகச் செயற்பாடுகள் மூலமும் சமூகத்தில் முன்னணிப் பாடசாலையாக வளர்ந்து வருகின்றது.

இவ்வித்தியாலயத்தின் மாணவர்கள் பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலமும் சாதனைகள் பல படைத்து வருகின்றார்கள். க.பொ.த சாதாரண தரம், க.பொ.த.உயர்தரம் என் பவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதுடன், வருடாவருடம் கணித, கலை, வர்த்தகத் துறைகளில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றமையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அம்சமாகும். செல்வன் செந்தில் மோகன் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.உ.தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் 4 ஏ திறமைச் சித்தியுடன் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் 2008 இல் நடைபெற்ற க.பொ.த.உ.தரப்பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் செல்வன் து.திருமகன் 3 ஏ திறமைச் சித்தியுடன் மாவட்ட நிலையில் 4ஆம் இடத்தைப் பெற்றமை பாராட்டத்தக்க கல்விச் செயற்பாடுகளாகும். விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு சாதனைகள் படைத்துள்ளனர் எம் மாணவர்கள். இவ்வருடம் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் மாவட்ட, மாகாண, தேசியமட்டங்களில் பங்கு பற்றியுள்ளனர். 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டியில் 19 வயதுப் பிரிவில் 200 மீற்றர் ஓட்டத்தில் செல்வன்ஜெ.அன்ரனி நெல்சன் 5 ஆம் இடத்தினைப் பெற்றமையும், தட்டெறிதலில் செல்வன் .ஆ.ரவிக்குமார் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியமையும் சிறப்பாகக் கூறவேண்டிய அம்சமாகும். அத்துடன் இவ்வருடம் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் மாவட்டமட்டத்தில் செல்வன் ஆ.ரவிக்குமார் 100 மீற்றர் , 200 மீற்றர், தட்டெறிதல் என்பவற்றில் முதலாம் இடத்தினைப் பெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன். தேசிய மட்டப்போட்டியில் தட்டெறிதல் நிகழ்வில்இம் மாணவன் 5ஆம் இடத்தினைப் பெற்றமை இப் பாடசாலை விளையாட்டுத்துறையில் பெற்ற சாதனைப் பதிவுகளாகும்.

இப் பாடசாலை மாணவர்கள் சாரணியத்தில் சிறப்புப் பெற்று விளங்குவதுடன் செல்வன் பே.பிரேம்குமார் 2006இல் சாரணியத்திற்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.ஆங்கில நாடகம் , சங்கீதம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகளிலும் கல்லூரி மாணவர்கள் மாவட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு தமது திறமையினை வெளிப்படுத்தியுள்ளனர்.

**பகுதி - II**

இவ்வித்தியாலயமானது கற்றலுக்குகந்த ஆளணி வளத்துடனும் பௌதீக வளத்துடனும் திகழ்கின்றது. மாடிக்கட்டடங்கள், பிரதான மண்டபங்கள் என்பவற்றுடன் இவ்வருடம் 'நிகொட்' நிறுவனத்தினால் கையளிக்கப்பட்ட புதிய கட்டமானது நவீன ஆய்வு கூட வசதிகளையும் மகிழ்ச்சிகரமான நூலக வசதிகளையும் ஏற்படுத்தித்தந்துள்ளது எனலாம். அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பல்லூடக கருவியும் மாணவரின் கற்றல் விருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றன.

வடமாகாணத்தில் பாடசாலைக் கணனி கற்கை நிலையங்களில் சிறந்த செயற்பாட்டைக் கொண்ட நிலையமாக இவ் வித்தியாலயத்தின் கணனிக் கற்கை நிலையம் தெரிவு செய்யப்பட்டதுடன்,வடமராட்சி வலயத்தின் முதன்மை கணனிக் கற்கை நிலையம் தெரிவு செய்யப்பட்டதுடன், வடமராட்சி வலயத்தின் முதன்மை கணனி கற்கை நிலையம் என ஆளுநரின் விருதையும் பெற்றுள்ளது. அத்துடன் வடமராட்சி வலய ஆசிரியர்கள், மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சிகளை வழங்கி வருகின்றமை கணனிகற்கை நிலையத்தின் வினைதிறன் மிக்க செயற்பாட்டுக்குச் சான்று பகர்வனவாகும்.

இப் பாடசாலையானது வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் சமூகக்கற்கை நிலையத்தினை ஆரம்பித்து பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்கான பல்வேறு பயிற்சி வகுப்புக்களினையும் நடத்தி வருகின்றமையும், பாடசாலை தவிர்ந்த நேரங்களில் சமூகத்தின் பல்வேறு தேவைகளுக்கும் பாடசாலையும், பாடசாலை வளங்களும் பயன் படுத்தப்பட்டு வருவதும் பாடசாலையினதும் சமூகத்தினதும் சிறந்த தொடர்பாடலுக்கு உதாரணமாக அமைவனவாகும்.




வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின், பிரதான சங்கத்தினரும், கொழும்பு, கனடா கிளையினரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், ஏனைய சமூக நலன் விரும்பிகளும் உறுதுணையாக நின்று உதவி வழங்கி வருகின்றனர். வசதிகள் குறைந்த அதிக மாணவருக்கு கல்வி வழங்கும் இக் கலைக்கூடமானது சமூகத்தின் பல்வேறு தரப்பினரதும் உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் எதிர்காலத்திற்கு உகந்த, சிறந்த நற்பிரஜைகளை சமூகத்திற்கு வழங்கும் எனலாம். ★★ ★★ (முற்றும்)

# வடமராட்சியின் தொன்மையும் கோட்டுத்தெரு புளியமரமும்



வடமராட்சியின் பல தொல்பொருள் உண்மைகள் மெல்ல மெல்ல வெளிவர ஆரம்பித்துள்ளன. அந்த வகையிலே கோட்டுத் தெருவில் உள்ள புளியமரம் பற்றிய ஆய்வின் அடிப்படையில் வடமராட்சியின் தொன்மை பற்றிய பல உண்மைகள் வெளிவரும்.

அதாவது கோட்டைத் தெரு புளியமரம் சோழர் காலத்திற்கு உரியது. அதாவது கோட்டைத்தெரு என்ற பதம் கோட்டுத்தெரு என்பதன் மருவிய வடிவமாகும். புளியமரத்தின் மையப்பகுதி அக்காலத்தில் (சோழர் காலத்தில்) ஒரு நீதி வழங்கும் நிலையமாகத் தொழிற்பட்டது. அக்காலத்தில் மக்களிடம் இருந்து அரசனால் தண்டமாக வசூலிக்கப்பட்ட பெருந்தொகை நாணயங்கள் தண்டம் வசூலிப்பவனின் சகோதரியினால் அப்பகுதியில் புதைக்கப்பட்டது. அதற்கு ஒரு அடையாளமாக அப்பகுதியில் புளியமரம் ஒன்றை நட்டதாகவும் தொல்பொருள் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

இது 1993 ஆம் ஆண்டு வடமராட்சியில் பெய்த பெரும் மழை காரணமாக ஏற்பட்ட அதீத வெள்ளப் பெருக்கு காரணமாக நாணயங்கள் பழமை வாய்ந்த மட்பாண்டத் தொகுதியும் ஐம் பொன்னாலான ஒரு வெட்டுக்காசினையும் மீட்க முடிந்ததாக இது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.செ.கிருஸ்ணராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

அம் மரத்தடியில் இருந்து கிடைத்த மட்பாண்டங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலத்திற்குரியவை என்றும் இவை யாழ்ப்பாணக் கோட்டையின் தெற்குப் பக்கச் சுவருக்குள்ளிருந்து மீட்கப்பட்ட பெருமளவிலான சோழர்கால மட்பாண்டங்களுடன் (எழுத்துக்களுடன்) ஒத்த தன்மையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டைத்தெருவில் கண்டெடுக்கப்பட்ட தனித்துவமான நாணயம் நீள் சதுரமான அமைப்பினை உடையது. இதன் நீளம் மூன்று சென்ரி மீற்றர், அகலம் 2 சென்ரி மீற்றர். இது ஆக்கப்பட்ட உலோகம் ஐம்பொன் ஆகும். இதை ஆராய்ந்த பொழுது சம்பந்தப்பட்ட பகுதி சோழர் காலத்தை நினைவுபடுத்துவதாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மிகவும் பத்திரமாக ஆராய வேண்டிய இடமாக கோட்டைத்தெருப் பகுதி விளங்குவதாகவும் அதனை ஆராய்ந்தால் மேலும் பல வடமராட்சி வரலாற்று உண்மைகள் வெளிப்படுத்தப்படலாம் என உதயன் வடமராட்சி வாரவலத்திற்கு கருத்துக் கூறிய யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுதுறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா தெரிவித்துள்ளார். அத்தகைய அகழ்வாராய்வுகள் மேற்கொள்ளப்படின் உடனுக்குடன் உதயன் வாசகர்களுக்கு உதயன் வடமராட்சி வாரவலம் தொகுத்துத் தரும் [illegible] கின்றோம். ★★★



தொகுப்பு: ஹரிஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - அச்சுவேலி

அரைக்கும் ஆலை மீள்நிர்மாணம் செய்வதற்கு கட்டடத்திருத்தம் செய்வதற்கான

# கேள்விக் கூறு கோரல்

எமது சங்கத்தால் துரிதகதியில் அமைக்கப்படவுள்ள அரைக்கும் ஆலை மீள்நிர்மாணம் செய்வதற்குக் கட்டடத்திருத்தம் செய்வதற்கான கேள்விக் கூறுகள் சங்கத்தால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 20.01.2010ஆம் திகதிக்கு முன்னதாக நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்குச் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
வலி.கிழக்கு வடபகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.

12.01.2010 (c/564056)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக விரிவுரையாளர் செல்வி அருட்செல்வி இராஜேந்திரம் அவர்களின் சகோதரர்

## அமரர் இராஜேந்திரம் விஜயகுமார் [கண்ணன்]

அவர்களின் திடீர்மறைவுச் செய்திகேட்டு மிகவும் துயரடைகின்றோம், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், விரிவுரையாளர்கள், சகஊழியர்கள், நடனத்துறை/சித்திரம் வடிவமைப்பு, இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம். (93739)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு

மலர்வு: 26.12.1926

உதிர்வு: 13.12.2009

கடந்த 13.12.2009 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலை பேசி மூலமும், தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச்சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

வண்.வட.மேற்கு,
மானிப்பாய் வீதி, நாலுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (93738)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## கந்தையா கனகரத்தினம்

(Retired Investigating Inspector of Post Office)

சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் 61/7, நல்லூர் குறுக்குவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மார்க்கண்டு கந்தையாவின் இளையமகனும் அச்சுவேலி, தோப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி காசிப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற தனலஷ்மியின் அன்புக்கணவரும் வசந்தன் (ஹட்டன் நஷனல் வங்கி, தலைமைக்காரியாலயம்), ஜெயபாலன், பாஸ்கரன், ஜெயகாந்தன், உமாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசலாதேவி,இந்திரா, காயத்திரி, நிரஞ்சனா, சுபத்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் சிவகஜன், சிவகணேஸ்(கொழும்பு இந்துக்கல்லூரி), இரதன், தணிகன், நிஷ்கலன், ஹர்சினி, சாயக்கா, சஜீவா, மயூரா, திவ்வியா, ரம்யா, ஜனனி ஆகியோரின் ஆசைப் பாட்டனும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, ஆறுமுகம், கனகசிங்கம், இராஜசிங்கம், பூபாலசிங்கம், தங்கரத்தினம் மற்றும் மலேசியாவைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரரும் நாகராசா, தயாபரன், காலஞ்சென்ற மார்க்கண்டு, விசாகரத்தினம், சிவபாக்கியம், கண்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.01.2010) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி முதல் A.F. Raymond மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நாளை (13.01.2010) புதன்கிழமை காலை ஈமக்கிரியைகள் நடைபெற்று மு.ப.10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்- க. வசந்தன் (மகன்)
42 1/1, அருத்துசா ஒழுங்கை, வெள்ளவத்தை
Phone - 2360278, 0777 350074

# பல்கலைக்கழக விஞ்ஞான மாணவர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில்

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.மாவட்டத்தில் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் விஞ்ஞானபீட மாணவர்கள் கடந்த சனிக்கிழமை பல்கலைக்கழக சுற்றுப்புறச் சூழலில் சிரமதானப் பணியிலும், விழிப்புணர்வு நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

சுமார் 130 மாணவர்கள் 12 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலுடன் பலாலி வீதிக்கும் காங்கேசன்துறை வீதிக்கும் இடைப்பட்ட கந்தர்மடம், பிறவுண் வீதி, யாழ்.இந்துக் கல்லூரி வளாகம், கொக்குவில் நூலகப்பகுதி போன்ற இடங்களில் மக்களை விழிப்படையச் செய்ததுடன் பொது இடங்களில் சிரமதானப் பணியிலும் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் சி.சிவன்சுதன், யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறைசார்ந்த டாக்டர் இ.சுரேந்திரகுமார் ஆகியோர் மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கினர்.

அத்துடன் இப்பணியில் ஈடுபட்ட மாணவர்கள், அதிகாரிகளுக்கான சிற்றுண்டி வகைகளை அப்பகுதி வர்த்தகர்கள் வழங்கி ஊக்குவித்தனர். (1-16)

# சனாதிபதித் தேர்தல் 2010

## முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகஞ் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல் என்பன தொடர்பான பொதுமக்களுக்கான அறிவித்தல்

1. மேற்கூறப்பட்ட தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் முல்லைத்தீவு வாக்கெடுப்புப்பிரிவு உட்பட்ட வன்னி தேர்தல் மாவட்டத்தின் ஏனைய வாக்கெடுப்புப் பிரிவுகளில் 2010.01.11ஆந் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

02. முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவின் ஆட்கள் இடம்பெயர்ந்துள்ளதன் காரணமாக வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் விதம் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகஞ் செய்யும் முறை என்பன தொடர்பாக தெளிவுபடுத்துமுகமாக இந்த அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

03. முல்லைத்தீவு மாவட்டம் / வாக்கெடுப்புப் பிரிவு

இந்த வாக்கெடுப்புப் பிரிவில் 50 வாக்கெடுப்பு மாவட்டங்கள் இருப்பதோடு அவை எந்த பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்ததென்றும் அவற்றுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் முறையும் கீழே காட்டப்பட்டுள்ளன. வவுனியா மத்திய மகா வித்தியாலத்தில் அமைக்கப்படும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கான வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை 2010.01.11 ஆந் திகதி முதல் தமது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு வவுனியா அஞ்சல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அதே பிரதேசங்களில் குறிப்பிட்ட வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படும். ஆகவே அந்த பிரதேசத்துக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கடிதங்கள் விநியோகிக்கப்படும் அஞ்சல் அலுவலகங்கள் மூலமாக வாக்காளர்களுக்கு விநியோகஞ் செய்யப்படும்.

ஏனைய இடம்பெயர்ந்தவர்கள் மீள குடியமர்த்தப்பட்டுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் 25, 26 ஆம் வாக்கெடுப்பு நிலையங்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வாக்கெடுப்பு மாவட்டங்களில் ஆட்கள் இடம்பெயர்ந்தில்லாததன் காரணமாக 31 ஆம் இலக்க பிரதேசத்துக்கான வாக்கெடுப்பு நிலையமும் அதே பிரதேசதங்களில் அமைக்கப்படும். ஆகவே அந்த பிரதேசங்களின் வாக்காளர்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், அந்தப் பிரதேசங்களின் அஞ்சல் அலுவலகங்கள் மூலமாக விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் கீழ்க்காணுமாறு அமைக்கப்படும்.

| பிரதேச செயலாளர் பிரிவு | உரித்தான வா.மா | வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| மாந்தை கிழக்கு | 1-5 | இல. 1 முதல் 5 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படவுள்ளன. |
| துணுக்காய் | 6-11 | இல. 6 முதல் 11 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்படவுள்ளன. |
| புதுகுடியிருப்பு | 12-18 | இல. 12 முதல் 18 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வவுனியா, வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. |
| ஒட்டுசுட்டான் | 19-28 | இல. 19 முதல் 24 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வவுனியா, வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.<br>இல. 25 முதல் 26 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் அந்த வாக்கெடுப்பு மாவட்டங்களினுள்ளேயே அமைக்கப்பட வுள்ளன.<br>இல.27 முதல் 28 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. |
| கரைதுறைப்பற்று | 29-50 | இல. 29 முதல் 30 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன.<br>31 ஆம் இலக்க வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு நிலையம் மு/கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.<br>இல. 32 முதல் 50 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன. |

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய,
2010 சனவரி மாதம் 11ஆந் திகதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமையின் அடிப்படையில் தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்தும் தீர்வு வேண்டும்

## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன.12

ஆயுதப் போராட்டம் முடிவடைந்த இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு காண்பது காலத்தின் கட்டாயமாகின்றது. இத்தகைய தீர்வும் தமிழ் மக்கள் காலாகாலமாக முன்வைத்த தமது அபிலாஷைகளான தாயகம், தேசிய சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையில், எம்மக்களிடமுள்ள இறைமை அடிப்படையில், தமிழ்பேசும் மக்களின் தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் இருத்தல் வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நல்லூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் மாநாட்டில் பொருளாதாரம், அரசியல் ஆகிய விவகாரங்கள் தொடர்பாக 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொருளாதாரம் தொடர்பான தீர்மானத்தைக் கட்சியின் பிரமுகர் சி.வி.கே.சிவஞானமும் அரசியல் தொடர்பான தீர்மானங்களைக் கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசாவும் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகமும் முன்மொழிந்தனர்.

தீர்மானங்களின் விவரம் வருமாறு:

* கடந்த முப்பது ஆண்டு காலமாக இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக, சிதைந்து, சின்னாபின்னப்பட்டு, சீரழிந்து நிற்கும் வடக்கு-கிழக்குப் பிரதேச உட்கட்டுமானங்களை மீள்வித்து:

வாழ்வாதாரங்களைத் தொலைத்து விட்டு நிற்கும், வன்னி மக்கள் உள்ளிட்ட சகல மக்களது வாழ்வாதாரங்களை மீள்வித்து,

எமது பிரதேசத்து உற்பத்தி வளங்களை இனங்கண்டு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு;

எமது மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்பு உருவாக்குதலுக்கும் உழைத்தலும், இந்த செயற்பாடுகளைத் திட்டமிடவும், அமுலாக்கவும்; கண்காணிக்கவும் கூடிய நிபுணத்துவத் தகைமை பெற்றவர்களின் சேவைகளை அணிதிரட்டி நடவடிக்கை எடுக்கவும்;

உள்ளூர் மற்றும் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களை ஊக்குவித்து தொழிற்றுறை மேம்பாட்டிற்காக உழைக்கவும், இழந்தவற்றை மீள்வித்து அபிவிருத்திப் பாதையில் முன் செல்லவும், அவற்றிற்காக அரச சார்பற்ற நிறுவனங்களதும் சர்வதேச சமூகத்தினதும் ஒத்துழைப்பைப் பெறவும், காத்திரமான நடவடிக்கைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொள்ள வேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது.

*தமிழ்த் தேசிய இனத்தின் நியாயபூர்வமான அபிலாஷைகளை உள்வாங்கிக் கொள்ளும் அரசியல் யாப்பு இந்நாடு சுதந்திரமடைந்த காலத்திலோ அன்றிப் பின்னரோ நடைமுறையில் இருக்கவில்லை. இதனால் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத ஒன்றாகவே இற்றைவரை நிலவுகிறது. மாறிமாறி வந்த அரசுகள் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் பற்றிப் பிரஸ்தாபித்தது மட்டுமன்றித் தமிழ்த் தரப்புடன் ஒப்பந்தங்களையும் செய்து கொண்டாலும்கூட இவை யாவும் செயல் வடிவம் பெறவில்லை.

இதனால் தமிழர் தரப்பின் அரசியல் போராட்டம் சாத்வீக ரீதியிலும் ஆயுதப் போராட்ட ரீதியிலும் முன்னெடுக்கப்பட்டது. ஆயுதப் போராட்டம் முடிவடைந்த இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு காண்பது காலத்தின் கட்டாயமாகிறது. இத்தகைய தீர்வும் தமிழ் மக்கள் காலாகாலமாக முன்வைத்த தமது அபிலாஷைகளான தாயகம், தேசியம் சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையில், எம்மக்களிடமுள்ள இறைமை அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் இருத்தல் ஒன்றாகவே இருத்தல் வேண்டும் என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சி வற்புறுத்துகிறது.

*உயர் பாதுகாப்பு வலயங்கள் முற்றாக நீக்கப்பட வேண்டும். இரு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்த் தேசிய இன மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படாமையால் ஏற்பட்டிருந்த போராட்டங்களினாலும் ஆயுதப் போரினாலும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்து, அகதிகளாய் அலைகின்றனர்.

தமிழர் தாயகப் பிரதேசங்கள், கடல் பிரதேசங்கள் அரச இராணுவப் படைகளினால் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அரசு அறிவித்துவிட்டது.

எனவே உயர் பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக நீக்கப்பட்டு மக்கள் தங்கள் சொந்த வீடுகளில் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும்.

அந்த மக்களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்கி வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும்.

ஐ.நா. அகதிகள் புனரமைப்பு, மீள் குடியேற்றங்களுக்கான பிரகடனங்களும் தரமும் மீள் குடியேற்ற நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டும்.

மீள் குடியேற்றப்படும் போது உடன் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபா குடும்பமொன்றிற்கு வழங்க வேண்டும் என்றும் தங்கள் வீடுகள், உடைமைகள், வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கும், உயிர் இழந்தோர், அங்கவீனமானோர், விதவைகளானோர், நோய்வாய்ப்பட்டுள்ளோர்களுக்கு நஷ்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தகுந்த நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு அரசை வற்புறுத்துகிறது. சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கிறது.

* தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒருசில இடங்களைத் தவிர ஏனைய ஆயுதப் படை முகாம்களும், ஆயுதப் படையினரும் விலக்கப்பட்டு தமிழர் தாயக மக்கள் சுதந்திரமான நடமாட்டத்தை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

* இலங்கையில் குறிப்பாக ஜனநாயக அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மக்கள் உயிர் வாழும் உரிமை பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டுமென சர்வதேச சமூகத்திடம் இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

* அரசியல் காரணங்களுக்காகவும், காட்டிக்கொடுப்புக்களினாலும், வெறும் சந்தேகத்தினாலும் கைது செய்யப்பட்டு பத்து ஆண்டுகளுக்கும் மேலாகவும்கூட விசாரணையின்றித் தடுப்புக் காவலிலுள்ள சிறைக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்கிறது இம்மாநாடு.

* போர் முடிவுற்ற நிலையில் அரசிடம் சரணடைந்த 12000இற்கும் அதிகமான இளைஞர்களின் பெயர் விவரங்களை உடன் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டுமென்பதுடன் அவர்கள் புனர்வாழ்வுக்காகவும் புதிய வாழ்க்கையின் பொருட்டும் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

* போரில் கொல்லப்பட்டவர்களின் விவரங்கள் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன், அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் போதிய நஷ்டஈடு வழங்கப்படுதலும் வேண்டும் எனவும், அழிக்கப்பட்ட மக்களின் உடைமைகள் மதிப்பிடப்பட்டு அவற்றிற்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

* தமிழர் தாயகப் பிரதேசங்களில் இந்துக் கோயில்கள் சூறையாடப்பட்டு பௌத்த சின்னங்கள் நிலைநாட்டப்படும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாலும் தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, தமிழ் பேசும் மக்களின் மொழி, கலை, கலாசாரங்கள் சீர்குலைக்கப்பட்டுத் தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்கள் பௌத்த சிங்கள மயமாக்கப்பட்டு வருவதாலும், தமிழர் தாயகப் பிரதேசங்களில் பெரும் நிலப்பரப்புகள் ஆக்கிரமிக்கப்பட்டு ஆயுதப்படைகளின் கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாலும், தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மைத்துவம் வீழ்த்தப்பட்டும், பலவீனப்படுத்தப்படும் வகையில் பிரதேச மற்றும் இனக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் அரசின் நேரடியான, மறைமுகமான இத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை உடன் தடுத்து நிறுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

*இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்குறித்த தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் தேவைப்பட்டால் போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், தீர்மானங்களின் அடிப்படையிலும், கொள்கை அடிப்படையிலும் அணிதிரளக்கூடிய தமிழ், முஸ்லிம் மக்களின் அனைத்து ஜனநாயக சக்திகளையும், கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயலாற்ற வேண்டுமென்றும், புலம்பெயர்ந்த தமிழர் தாயக மக்களின் அமைப்புக்களையும் கூட்டிணைக்க வேண்டுவதுடன் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும், நாடுகளிடமும், ஐ.நா அமைப்புக்களிலும் இராஜதந்திர ரீதியில் ஆதரவினைத் திரட்டுவதற்குப் பொருத்தமான தக்க நிபுணத்துவம், ஆற்றல், அனுபவம் மிக்கவர்களையும் ஈர்த்துத் தமிழ் பேசும் மக்களின் விடிவையும் விடுதலையையும் ஈட்டுவதற்கு உறுதிபூண வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்த ஆறு மாத காலத்துள் மேற்குறித்த தீர்மானங்களின் அடிப்படையில் தமிழ் மக்களின் உடனடித் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுடன், தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கும், விடுதலைக்குமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் எதிர்கால அரசை வற்புறுத்துகின்றது இம்மாநாடு.

அவ்வாறு குறித்த காலத்துள் தீர்வுகள் எட்டப்படாதுவிட்டால் சிறப்புத் தேசிய மாநாட்டைக் கூட்டி அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ் இலக்குகளை அடைவதற்கு மக்களை அணிதிரட்டும் பொருட்டு ஜனநாயக மற்றும் சாத்வீக வழிமுறைகளில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

போரினால் பேரவலத்தில் வீழ்ந்து கிடக்கின்ற தமிழ் பேசும் மக்களினதும் தாயகப் பிரதேசங்களிலும் பொருளாதாரக் கட்டமைப்புக்களை உருவாக்கவும், விருத்தி செய்யவும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடுகளை எட்டவேண்டுமென்றும் சம கல்வி, சம வேலைவாய்ப்பு எனும் திட்டங்களை உருவாக்கவும், மேம்படுத்தவும் பொருத்தமான நிபுணத்துவத்தை ஈர்க்க வேண்டுமென்பதுடன் மனிதவளம், ஆற்றல், கடின உழைப்பு மிகுந்துள்ள எம் மக்களிடம் வேலை வாய்ப்பினை உருவாக்கவும், தொழில் நுட்பத்தைப் பெருக்கவும் பொருத்தமான சிறு மற்றும் பெருந் தொழில்களைத் தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்தில் உருவாக்குவதற்கும் தேசிய மட்டத்தில் வேலை வாய்ப்புக்களைப் பெறவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது. (14-23)

# தமிழரசுக் கட்சித் தலைவராக சம்பந்தன் மீண்டும் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

நல்லூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் அக்கட்சியின் தலைவராக இரா.சம்பந்தன் மீண்டும் பதவியேற்றுள்ளார்.

கட்சியின் புதிய நிர்வாகம் பதவியேற்கும் நிகழ்வும் இந்த மாநாட்டில் இடம்பெற்றது.

புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர் இரா.சம்பந்தன் (திருகோணமலை), சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (யாழ்ப்பாணம்), உப தலைவர்கள் எஸ்.சூசைதாசன் (மன்னார்), எஸ்.செல்வராசா (மட்டக்களப்பு), டாக்டர் தோமஸ் (அம்பாறை), டேவிட் நாகநாதன் (வவுனியா), எஸ்.சின்னத்துரை (யாழ்ப்பாணம்).

பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா (யாழ்ப்பாணம்), துணைப் பொதுச் செயலாளர் எஸ்.துரைரட்ணசிங்கம் (திருகோணமலை), துணைச்செயலாளர்கள் சி.வி.கே.சிவஞானம் (யாழ்ப்பாணம்), எஸ்.சிவகரன் (மன்னார்), எக்ஸ்.குலநாயகம் (யாழ்ப்பாணம்), கலாநிதி நாச்சியார் செல்வநாயகம் (யாழ்ப்பாணம்), ஜனகா் இமாம் (யாழ்ப்பாணம்).

இணைப் பொருளாளர்கள் எஸ்.தியாகராசா (யாழ்ப்பாணம்), எஸ்.கனகசபாபதி (யாழ்ப்பாணம்). (14-23)

# பிரிட்டன், அமெரிக்கா, நோர்வேக்கு நேசக் கரம் நீட்டுகின்றது ஜே.வி.பி.!

கொழும்பு, ஜன.12

நோர்வே, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளின் செயற்பாடுகளுக்கு இதுவரை காலமும் எதிர்ப்புத் தெரிவித்து வந்த ஜே.வி.பி., இலங்கையில் தற்போது பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதால் அந்நாடுகளுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளது.

தற்போது கொழும்பில் உள்ள பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் தூதரகங்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டு வருவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

பத்ரமுல்லையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகளின் பிரதிநிதிகள் என்று நாம் கூறி வந்தோம். ஆனால், அவர்களின் ஊடாக நாம் ஜனநாயகத்தின் கதவுகளைத் திறக்க வேண்டிய தேவை எமக்குண்டு. தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயகத்தை நிலைநாட்டத் தமிழ் தலைமைத்துவங்கள் முன்வரவேண்டும்.

நோர்வே புலிகளுக்குப் பாரிய உதவிகளைச் செய்த நாடாகும். நாம் அந்நாட்டுடன் எந்தவிதமான உறவையோ அல்லது பேச்சுகளையோ வைத்திருக்கவில்லை. ஆனால், தேசப்பற்றாளர் என்று தன்னைக் கூறிக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ அப்போது நோர்வேயுடன் ஒட்டி உறவாடினார்.

தற்போது புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டதால் நோர்வேயுடனும், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளுடனும் நாம் இராஜதந்திர உறவை ஏற்படுத்த விரும்புகிறோம். நாம் இப்போது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தூதரகங்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

நாம் புலிகள் உறுப்பினர்களை விடுதலை செய்யப்போகின்றோம் என்று கூறிய மஹிந்த இப்போது அதைத்தான் செய்கிறார். அதுவும் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்படாமல் விடுதலை செய்யப்படுகின்றனர். தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே அரசு இவ்வாறு செய்கின்றது. அப்படியாயின் எதற்காக அரசு இவ்வளவு காலமும் அவர்களை அடைத்து வைத்திருந்தது?

டக்ளஸ், கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோரின் ஆயுதக்குழுக்களுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படலாம். கிழக்கில் இடம்பெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது அங்கு முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அபாயகரமான நிலைமைகளை முற்றாகத் தடுக்க வேண்டும் என்றால் டக்ளஸ், கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோரின் ஆயுதக் குழுக்களை உடன் களைந்து வடக்கு, கிழக்கில் முழுமையான ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

யா/மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி சிவசக்தி பரமானந்தம் அவர்களின் அன்பு மாமனார் அமரர்

## முருகேசு சண்முகம்

அவர்கள் 03.01.2010 (ஞாயிறு) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவினால் துயரில் மூழ்கி இருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதலைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்.மத்திய கல்லூரி.

(93743)

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் ஏ.எஸ்.ஆறுமுகம் அன் சன்ஸ் உரிமையாளருமாகிய

## ஆறுமுகம் பொன்னம்பலம்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/564055)

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்.

# கண்ணீர் அஞ்சலி



நவாலியூர் பிரதிஷ்டா சிரோன்மணி

பிரம்மஸ்ரீ

## சாமி விஸ்வநாதக் குருக்கள்

(பிரதமகுரு, நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்)

கற்குளி கந்தசாமி கோயில்
பரிபாலன சபை,
நுணாவில் கிழக்கு.

(சி/564053)

## மருதனார்மடம் சந்தைக்கு வருவோர் அசௌகரியம்

சுன்னாகம், ஜன.12

மருதனார்மடம் சந்தைப் பகுதியில் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் வியாபாரிகளும் விவசாயிகளும் பெரிதும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் பொருள்களைக் கூறி விற்கும் இடம், வாழைக்குலை விற்பனை செய்யப்படுமிடம், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றில் மழைநீர் தேங்கி நிற்பதால் பெரிதும் அசௌகரியம் அடைவதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். (1-38)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
01 ★ 09 ★ 1952



மனம் நெகிழ
12 ★ 01 ★ 2009

## திருமதி நீற்றா அன்ரனி

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(93730)

இவரின் பிரிவால் வாடும்:
ச.அன்ரனி (கணவர்).

## ஓட்டோ- லான்ட் மாஸ்டர் நேருக்கு நேர் மோதியதில் சாரதி காயமடைந்தார்

வலி வடக்கு, ஜன.12

மருதனார்மடம் சந்தியில் நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றஓட்டோ-லான்ட் மாஸ்டர் விபத்தில் லான்ட் மாஸ்டர்சாரதி காயங்களுக்கு உள்ளானார்.

மானிப்பாய் பகுதியில் இருந்து வந்த ஆட்டோவும், காங்கேசன்துறை வீதி வழியாக வந்த லான்ட் மாஸ்டரும் மோதியதில் லான்ட் மாஸ்டர்சாரதி தூக்கி வீசப்பட்டுக் காயங்களுக்கு உள்ளாகினார்.

காயமடைந்த சாரதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (50-86)

## மிருசுவில் நூலகம் மீண்டும் பழைய இடத்தில்

தென்மராட்சி, ஜன.12

மிருசுவில் நூல் நிலையம் விரைவில் பழைய இடத்தில் இயங்க உள்ளதாகக் கூறப்படுகின்றது. 2006 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து மக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து நூல் நிலையம் தற்சமயம் மீசாலைப் பிரதேசத்தில் உள்ள தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருகின்றது. தற்போது சமாதானச் சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்தும் மக்கள் அப்பகுதியில் மீளக்குடியேறியுள்ளனர்.

இதனை அடுத்து நூல் நிலையம் மீளவும் பழைய இடத்தில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-122)

# மரண அறிவித்தல்



## திருமதி. இராஜலக்சுமி அரியரத்தினம்

மானிப்பாய் மேற்கு கட்டுடையை .வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராஜலக்சுமி அரியரத்தினம் அவர்கள் 09-01-2010 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லப்பாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரியரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்புச் சகோதரியும், அற்புதராணி, காலஞ்சென்ற யோகரத்தினம், காலஞ்சென்ற ஜெயமோகன், இரட்ணராணி, இரட்ணமோகன், சந்திரமோகன், விமலராணி, தவமோகன், அரசமோகன், ஜெகன்மோகன், அதிசயமோகன், ரூபராணி ஆகியோரின் அன்புத் தாயும், செல்லப்பா, வசந்த குமாரி, தர்மரட்ணம், இராஜேஸ்வரி, கலாதேவி, தேவதாஸ், இராஜி, மஞ்சுளாம்பிகை, தர்ஷினி, ரூபகி, சுரேஷ் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-01-2010 அன்று புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்சாலையில் காலை 8.00 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைகளுக்காக 01.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் - பிள்ளைகள், மருமக்கள்.**

3/4-4/2, அருத்துசா லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
T.P. 0112360995.

## கூட்டம் ஒத்திவைப்பு

வலி.கிழக்கு, ஜன.12

நாளை மறுதினம் 12 ஆம் திகதி நடைபெற இருந்த கைதடி வலி.கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் விவசாயக் குழுக் கூட்டம் என்பன தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் அறிவித்துள்ளார். (ஓ-16-72)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பஸ்ரியாம்பிள்ளை ஞானம்மா (அல்வின்)



ஊர்காவற்றுறை கிழக்கு வீதியைப் பிறப்பிடமாகவும், வேலணை, சாட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை ஞானம்மா (அல்வின்) நேற்று முன்தினம் (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பஸ்ரியாம்பிள்ளை அல்வினின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை, சூசைப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றோஸ்மேரியின் பாசமிகு மைத்துனியும், பசில் அன்ரன் (கொழும்பு), அந்தோனியாப்பிள்ளை தவமணி (கொழும்பு), காலஞ்சென்ற நவரட்ணம் (முன்னாள் நீதிமன்ற ஊழியர்), மற்றும் கத்தரினம்மா சறோ (ஹொலன்ட்), காலஞ்சென்ற மரியதாஸ் மகேந்திரன் மற்றும் ஜோசப் ராஜகாரியர் பவா (ஜேர்மனி), மரியலூசியா மனோன், விஜேந்திரன் (கொழும்பு), காலஞ்சென்ற தேவன் மற்றும் சகாயநாதன் லோகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யூக்கலிஸ்ரா (கொழும்பு), றொபின்சன் (கொழும்பு), ஜேசுமலர் (கொழும்பு), றிச்வே, வசந்தா (கொழும்பு), றஞ்சி (ஜேர்மனி), இரட்ணம், ராணி (கொழும்பு), ஜசிந்தா (ஜேர்மனி), ராதா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் சரளாதேவி, மஞ்சுளா, சகுந்தலா, ஜோன்சன், றொபேட்சன், நிசானி, காலஞ்சென்ற சதீஷன் மற்றும் லதா, சுதா, விஜித்ரா, அனிதா, கில்லறி, றொசிற்றா, வெனிற்றா, ஜீனா, ரொனி, காலஞ்சென்ற றொஷான் மற்றும் றஜி, வவி, பேபி, றொசானி, யாழினி, ஜெனி, மியூரியன், ஸ்ரெலா, றெஜி, அஜந்தன், றொமில்டா, சுஜிதன், நிரோஜினி, சுதர்சன், சர்மிளா, ஜான்சி, அனிற்றா, ஜரின்ஸ் கிளாரினா, சாரா, சியான், றோச் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டெஸ்கலா, பிறாங்கிளின், டலின், சஸ்மிதா, ரிபனியா, ரியூமன், லக்ஸ்மன், சயாணா, ஸ்ரெபானா, பிறசிபா, துசிபா, ஏரன்சிபா, றேமிஷா, மினோலா, றொமோஷன், றொசேல், றென்ஸ்ரன், றின்ஸ்ரன், சுரேசிகா, ஆன்கீர்த்திகா, டொனால்ஸ், டொமினா, டிவோன், டினோஷா, நிசாருகான், தில்சான், திலிசானி, ரீத்திக்கா, அபினாஸ், அரோஸ், அனோஸ், மீர்த்தி, செரோன், ஈசா, பிரவீனா, பிரினீத், விறன்சன், றெகாஸ், கிளாரா, நிகாஸ், புளோஸ், பிரடிகன், செரோன், இமேஷா, கெவின், தீப்சி, அன்றியா, றீனுஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சாட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை. (93741)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## திருமதி பஞ்சவர்ணம் பரராசசிங்கம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சவர்ணம் பரராசசிங்கம் நேற்று (11.01.2010) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-நல்லம்மா தம்பதியினரின் மகளும், பரராசசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- தெய்வானை தம்பதியினரின் மருமகளும், பிரபாகரன் (ஜேர்மனி), பிரதீபன் (ஜேர்மனி), பிரதீசன் (யா/ தம்பாட்டி அ.த.க பாடசாலை), பிரசன்னா, பிரகலாதன் ஆகியோரின் தாயும், சுதர்சினி (ஜேர்மனி), சுபாநந்தினி (ஜேர்மனி), ஷபானா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, குமாரசுவாமி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பிரியங்கன், பிதுஷன், நித்திலா, பிருந்தா (ஜேர்மனி), சாயீஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

'பிரசன்னா பந்தல்',
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (சி/93744)

தகவல் :
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## பஞ்சவர்ணம் (தேவி) பரராசசிங்கம்

திருமதி பஞ்சவர்ணம் (தேவி) பரராசசிங்கம் அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

'அனுஷா பந்தல்',
இணுவில் சந்தி, இணுவில். (93745)

S.தயாபரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற் கொண்ட தீர்மானம் சரியானதா? தவறா னதா? என்கிற வாதப் பிரதிவாதம் நீண்டு செல்கிறது.

மக்களிடையே ஒற்றுமை பேணப்பட வேண்டுமெனக் கருதுவோர், தமக்குள் முதலில் ஒற்றுமை காண வேண்டும்.

ஒரு சிலருக்கு அரச உத்தி யோகங்கள் வழங்கப்படுவதால், ஒட்டு மொத்த மக் களுக்கும் விடிவும், வசந்த காலமும் வந்து விட்டது என அதிகார நாற்காலி

இத்தகைய முள்வேலிகள் இறைமை யுள்ள பூர்வீக தமிழ்த் தேசிய இனத்தின் அர சியல் இருப்பை அழித்துவிடும்.

**தவறான போக்கை சம்பந்தர்**

# தமிழ் மக்களின் அரசியல் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படுமா?

போர் முடிவடைந்த நிலையில், தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்த அடுத்த கட்ட நகர்வில், சரத் பொன்சேகாவை ஆதரிக் கும் கூட்டமைப்பின் நிலைப்பாடு, பல சிக் கல்களை உருவாக்குகிறது.

2010 ஆம் ஆண்டு தேர்தல் திணைக் களத்தில் பதிவு செய்யாது இழுத் தடித் தால், மேலும் பல பிளவுகள் தோன் றும் வாய்ப்புக்களும் உருவாகலாம்.

தமிழரசுக் கட்சி நடத்தும் மாநாடு போன்று, ஏனைய மூன்று கட்சிகளும் தமது மாநாடுகளை நடத்தித் தீர்மானங் களை நிறைவேற்றி, இடைவெளிகளை அதிகரிக்கச் செய்யலாம்.

தமிழ்த் தேசிய இனத்தின் இறை மையைப் பாதுகாப்பதற்கும், சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் போராட்டத்தை விரிவுபடுத்துவதற்கும்,

மக்களின் பங்களிப் போடு கூடிய வெகுஜன அமைப்புக் களைக் கட்டி எழுப்புவதற் கும், இவர்கள் நிச்சயம்



ஆகவே, அடுத்த கட்ட அரசியல் பரிமாணத்துள் நகர முன்பாக, தமக்குள் ஓர் இறுக்கமான, தமிழ் தேசிய விடுதலை சார்ந்த இணக்கப்பாட்டுக்குள் வரவேண் டிய அவசியம் கூட்டமைப்பிற்கு இருக் கிறது.

அதேவேளை, கட்சி சாராமல், கூட் டமைப்பில் இணைந்துள்ள பல நாடாளு மன்ற உறுப்பினர்களின் பங்களிப்புத் தொடர வேண்டுமாயின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும்.

**மக்கள் ஒற்றுமைப்படுவதற்கு தலைமைத்துவ ஒற்றுமை தேவை**

ஒன்று படவேண்டும்.

பேரினவாதம் நிகழ்த்திய கொடூரமான இன ஒழிப்பு யுத்தம், தமிழ் மக்களின் வாழ் வாதாரங்களைச் சின்னாபின்னமாக்கி யுள்ளது.

இராணுவ, பொலிஸாருக்கான நிலப் பங்கீடுகளும், விலங்குகள் சரணாலயம் என்கின்ற போர்வைக்குள் ஆக்கிரமிக்கப் படும் பூர்வீக நிலங்களும், வலுவான தலைமைத்துவம் ஒன்றின் தேவையை உணர்த்துகின்றன.

பாதைகளைச் செப்பனிடுவது, 'அபி விருத்தி' என்று சிலர் கூறலாம். படித்த

வாசிகள் கூறலாம்.

சலுகைகளுக்கும், உரிமைகளுக்கும் இடையே உள்ள பேதம் புரியாமல் அர சியல் பேசுவோர், மக்களை

வழிநடத்து வதும் அபத்தமா னது.

கோவில்களில் திருவிழாக்கள் நடை பெறுவதால் மக் களின் இயல்புவாழ்வு நிலைநாட்டப்பட் டுள்ளதெனக் கருத முடி யாது.

இழப்பின் வலியோடுதான் மக்கள் கோவிலுக்குச் செல்கின்றார்கள்.

விவரிக்க முடியாத ஊமைக்குமுறல்கள் ஆட்சியாளர் களின் காதில் விழுவதில்லை.

ஆட்சி மாற்றம் மட்டுமல்ல இயல்பு வாழ்வை மீட்டெடுக்க எம்மக்களுக்கு ஒரு மூச்சுவிடும் காலம் தேவைப்படுகின்றது.

இந்த வலிசுமந்த மேனியர் பேரின வாத அரக்கன் சுமத்திய துன்பச் சிலு வையை காவிக்கொண்டு நீண்டதூரம் நடந்துள்ளனர்.

சிலுவை சுமக்கும் வாழ்வு, விடுதலை பெறும்வரை தொடரும். சற்று இறக்கி வைத்து அவர்களை இளைப்பாற விடுங்கள்.

அதைத் தடுப்பவர்களை ஆட்சி யிலி ருந்து அகற்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எடுத்த நிலைப்பாடு இருப்பு நிலை சார்ந்ததாகும்.

துணை இராணுவக் குழுக்களும், அதன் எஜமானர்களும் இவர்களைத் தாங்கிப் பிடிக்கும் பிராந்திய வல் லரசாளர்களும் ஓரங்கட்டப்படாமல் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலை கொள்ள முடியாது.

**மாற்றிக் கொள்ளவேண்டும்**

2005 இல் அரசியல் தவறு நடந்து விட் டதாகக் குறை கூறியவாறு அவர்களை அணுகும் தவறான போக் கைச் சம்பந்தர் கைவிட வேண்டும்.

அது தவறாக இருந்தால் அதே தவறைத்தான் சம்பந்தரும் இப்போது மேற்கொள்கின்றார் எனவும் வியாக்கியான மளிக்கப்படலாம்.

பலமான சக்திகளை அகற்ற வேண்டு மென்கிற இராஜதந்திரத்தை அது குறித்த புரிதல் இல்லாமல், சம்பந்தர் மேற்கொள் கின்றார் என்றும் கூறலாம்.

இவை தவிர, 2005 இல் வாக்களிக் காமல் விட்ட தவறை நிவர்த்தி செய்ய இப்போது வாக்களியுங்கள் என்கிற வாதம் தவறானது.

ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த எத்தனையோ அரசியல் காரணிகள் உள்ளன.

பூகோள அரசியலில் ஏற்படும் மாற் றங்களை அடிப்படையாகக் கொண்டு அதற்கான விளக்கங்களை முன் வைக்க லாம். இந்திய நகர்வுகளை விமர்சிக்க விரும்பாவிட்டால் சிங்களத்தின் நிரந்தர நண்பன் சீனாவைப் போட்டுத் தாக்கலாம்.

ஆகவே, மக்களின் உணர்வுகளை

**இதயச்சந்திரன்**

சீண்டிப் பார்க்கும் காரியத்தில் ஈடுபடு வதைத் தவிர்த்தால் ஆட்சி மாற்றம் ஏற்படலாம். *

---

# வாடிவீடு விடயத்தில் எதேச்சாதிகாரமான எந்தவொரு முடிவும் எடுக்கப்படவேயில்லை

## யாழ். மாநகரசபை முதல்வரின் விளக்கம்

9.01.2010 அன்று உதயனில் '' யாழ் .நகரில் நம்மவ ரிடமே வசதிகளை இருக்கும் போது எமது வளங்களை வெளியார் களிடம் ஒப்படைக்கலாமா?''

என்னும் தலைப்பில் உதயனின் 'மக்கள் மன்றம்' பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாநகர சபை உறுப்பினர் மு.றெமிடியஸ் வாடி வீட் டினை எதேச்சாதிகாரமாக மாந கர சபை முதல்வர் தனியார் நிறுவ னம் ஒன்றிற்கு 99 வருட காலத் திற்கு குத்தகைக்கு விட முடிவு செய்துள்ளதாகத் தெரிவித் திருந்தார். இது குறித்து தன்னுடைய விளக்கத்தை யாழ் மாநகர சபை முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள விளக்க கடிதம் இங்கு பிரசுரமாகிறது.

09.01.2010 ஆம் திகதிய உதயன் பத் திரிகையில் 08 ம் பக்கத்தில் 'மக்கள் மன்றம்' பகுதியில் தமிழ் தேசிய கூட்ட மைப்பைச் சேர்ந்த கௌரவ அங் கத்தவர் மு.றெமிடியஸ் எழுதிய ''யாழ். நகரில் நம்மவரிடமே வசதிகள் இருக் கும் போது எமது வளங்களை வெளி யார்களிடம் ஒப்படைக்கலாமா''? எனும் தலைப்பி லான செய்தி எம்மைப் பெரும் அதிர்ச் சிக்குள்ளாக்கியுள்ளது.

தென்பகுதியில் இருந்து பெரும்பா லான தனியார் வங்கிகள் யாழ் நகரில் தமது கிளைகளை ஸ்தாபித்து இருக்கும் இக் காலகட்டத்தில் யாழ்ப்பாண மாந கர சபைக்குச் சொந்தமானதும் மிக நீண்ட காலமாக இயங்கி வந்த வாடி வீடு உள்நாட்டு யுத்தத்தினால் அழி வடைந்த நிலையில் அக்காணியை தென்னிலங் கையைச் சேர்ந்த லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி (LOLC) நிறு வனம் 99 வருட காலத்திற்கு குத்தகைக் குப் பெற்று அக் காணியில் நவீன வசதிகளுடன் கூடிய நிலத்தளத்துடன் 2மாடிகளைக் கொண்ட தாக ஹோட்டல் அமைப்பதற்கு அனு மதி கோரி அக் கம்பனி விண்ணப்பித்து இருந்தது.

இவ் விண்ணப்பம் கடந்த 22.12. 2009 ஆம் திகதி இடம் பெற்ற மாநகர சபையின் 3வது நிதிக்குழுக்கூட்டத் தில் பரிசீலிக்கப்பட்டது.நிதிக்குழு அங் கத்தவராகிய கௌரவ அங்கத்தவர் மு.றெமிடியஸ் இக் குழுக் கூட்டத்திற் குச் சமுகம் அளித்திருக்கவில்லை.

மேற்படி குத்தகை விண்ணப்பம் பற்றி ஆலோசிக்கப்பட்டு இந்த ஹோட் டல் கட்டும் திட்டத்தில் இவ்அமைப்பு மாத்திரம் அல்ல வேறு அமைப்புகளும் அக்கறை உடையவராக இருக்கலாம் எனினும் இவர்களை மாத்திரம் என்று எண்ணாமல் நாடளாவிய ரீதியில் கேள்விகளை கோரி யாருக்கு கொடுப் பது என்பதை முடிவு செய்யலாம் என வும் இவ் விடயத்தை நாளை நடை பெறும் மாதாந் தப் பொது கூட்டத்தில் சமர்ப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட் டது.

மறுநாள் நடைபெற்ற மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் நிதிக்குழுவினது மேற்படி தீர்மானம் ஏகமனதான ஏற்றுக் கொள்ளப்பட்டு நாடளாவியரீதியில் கேள்விகளைக் கோரி குத்தகைக்கு கொடுப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மாதாந்த கூட்டத்திலும் மேற்படி கௌரவ அங்கத்தவர் சமுகமளிக்கவில்லை.

பொதுச் சபையினது ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையிலேயே நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது வழக்கமாகும்.

இது விடயத்தில் நான் எதே சாதிகார மாக முடிவு ஏதும் எடுக்கவில்லை என் பதையும் இந்த நடவடிக்கை தம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது என்று கூறுவதில் எவ் விதத்திலும் நியாயமா காது என்பதையும் தெரிவித்துக்கொள் கின்றேன்.

மக்களின் நன்மை கருதிய எந்த வொரு விடயமாகினும் உரிய குழுக் களின் சிபாரிசின் பின்னரே பொதுக் கூட்டத்திற் குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வா றாகவே குறித்த விடயமும் இந்தப் படி முறை ஒழுங்கி லேயே முன்னெடுக்கப் பட்டு பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. குறித்த கௌரவ அங்கத் தவர் சமுக மளித்திருக்காத பொதுக்கூட் டத்தில் இவர் சார்ந்த கட்சியின் ஏனைய உறுப் பினர்கள் அத்திட்டத்திற்கு எதிர்ப் புக்கள் எதையும் வெளிபடுத்தாத நிலை யில் ஏகமனதாகவே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த அங்கத்த வருடைய கூற்றின் மூலம் தாம் சார்ந்த கட்சி அங்கத்தவரிடையே ஒற்றுமை யின்மை நிலவுவதாக என்னால் உணர முடிகின்றது. எவ்வாறாயினும் மாநகர சபை யினால் முன்னெடுக்கப்படும் மக்கள் சேவைகளும் சகல அபிவிருத் திப்பணி களும் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப் பட்ட பின்னரே அவை நடைமுறைப்படுத் தப் படுவதிலும் நானும் எனது கட்சியின ரும் உறுதி யாகச் செயற்படுவோம். யாழ். நகரினை முன்னர் இருந்த நிலைக்கு மீள்விப் பதிலேயே கௌரவ அமைச்சர் அவர் களும் எமக்குப்பக்க பலமாக செயற்பட்டு வருவதை மக்கள் அனைவரும் நன்கறிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அணி அசத்தல்

# இலங்கைக்குப் பதிலடி; இறுதிக்கு முன்னேற்றம்!



டாக்கா, ஜன.12

முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இலங்கையை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்றுள்ள ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளுடன் தலா இரு முறை மோத வேண்டும்.

அதன்படி, இலங்கை அணி தான் ஆடிய முதல் 3 லீக் ஆட்டங்களிலும் வெற்றி



பெற்று இறுதிப்போட்டியை உறுதிசெய்தது. இந்திய அணி ஒரு ஆட்டத்தில் வெற்றியும், ஒரு ஆட்டத்தில் தோல்வியும் அடைந்தது. பங்களாதேஷ் தான் ஆடிய 3 மோதல்களிலும் தோற்றிருந்தது.

இந்த நிலையில் தொடரின் 5ஆவது லீக் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் நேற்றுமுன்தினம் மீண்டும் சந்தித் தன.

இந்திய அணியில் ஷேவாக், ஹர்பஜன்சிங், நெஹ்ரா ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக தினேஷ் கார்த்திக், அமித் மிஸ்ரா, சுதீப் தியாகி ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.

பனிப்பொழிவால் 2ஆவதாக பந்துவீசுவது கடினம் என்ற நிலையிருந்தபோதிலும், இறுதிப்போட்டிக்கான பரிசோதனை முயற்சியாகஇலங்கை அணியின் தலைவர் இந்த முடிவை எடுத்தார். அவரது பரி சோதனை முயற்சிக்கு எந்த வகையிலும் பலன் கிடைக்கவில்லை.

இலங்கை அணியின் இன்னிங்ஸை டில்ஷானும், தரங்கவும் ஆரம்பித்தார்கள். சுதீப் தியாகியின் முதல் 3 பந்துகளில் தடுமாறிய தரங்க 4ஆவது பந்தில் தினேஷ் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதன்பிறகு டில்ஷான் சிறிதுநேரம் வேடிக்கை காட்டினாலும் அவரை அதிக நேரம் களத்தில் நிற்க இந்திய வீரர்கள் விடவில்லை. சஹீர்கானின் பந்துவீச்சில் டில்ஷான் (33) கம்பீரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந் தார்.

இந்தத் தொடரில் சஹீர் கான் கைப்பற்றிய முதல் விக்கெட் இதுவாகும்.

இதன் பிறகு 2ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்கார ஒரு பக்கம் போராட மறுபுறம் இலங்கை அணியின் விக்கெட்டுகள் சாய்ந்தவண்ணம் இருந்தன. சஹீர்கானின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. இந்திய அணியின் களத்தடுப்பிலும் முன்னேற்றம் காணப்பட்டது.

இதனால், இலங்கை அணியின் ஓட்ட வேகம் கட்டுப்படுத்தப் பட்டதுடன், ஆட்டத்தை இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது

சங்ககார 68 ஓட்டங்களுடன் 7ஆவது விக்கெட்டாக வெளியேறிய போது அணி, 143 ஓட்டங்களையே (29.4 ஓவர்கள்) பெற்றிருந்தது. இதனால் 200 ஓட்டங்களைக் இலங்கை அணி கடக்குமா என்ற சந்தேகம் எழுந்திருந்து.

இதன் பின்னர் இளம் வீரர் சுரஜ் ரன்டிவ், துஷார ஆகியோர் தாக்குப்பிடித்தமையால் இலங் கை அணி 200 ஓட்டங்களைக் கடந்தது. முடிவில் 46.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தத் தொடரில் இதுவரை நடந்த ஆட்டங்களில் எடுக்கப்பட்ட குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். தனது முதலாவது அரைச்சதத்தை எட்டிய ரன்டிவ் 56 ஓட்டங்களையும், துஷார 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சஹீர்கான், அமித் மிஸ்ரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

இதையடுத்து 214 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி ஆடியது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய தினேஷ் கார்த்திக்கும், கௌதம் கம்பீரும் வலுவான அடித்தளம் அமைத்து இந்திய அணியின் வெற்றிப்பயணத்தைச் சுலபமாக்கினர். பந்துகளை அடிக்கடி பவுண்டரிக்கு ஓட விட்ட தமிழக வீரர் தினேஷ் கார்த்திக், 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 89 ஓட்டங்களை விளாசியது. அடுத்து விராட் கோஹ்லி களம் புகுந்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த கம்பீர் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் விராட் கோஹ்லி அதிரடி காட்டினார். லக்மலின் ஒரே ஓவரில் 4 பவுண்டரிகளை விரட்டினார். இதனால் இந்தியா இலக்கை எளிதாக எட்டியது. இந்திய அணி 32.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப் பிற்கு 214 ஓட்டங்களைக் குவித்தது. இதன்மூலம் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றது. அதுமட்டுமன்றி முதல்




லீக்கில் இலங்கையிடம் அடைந்த தோல்விக்கும் பழிதீர்த்துக் கொண்டது.

கோஹ்லி 71 ஓட்டங்களுடனும், யுவராஜ்சிங் 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளரான சஹீர்கான் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

நாளை நடக்கவிருக்கும் இறுதிப்போட்டியில் இந்தியா-இலங்கை அணிகள் மீண்டும் சந்திக்கவுள்ளன.

## இந்திய அணியின் பந்துவீச்சு ஆலோசகராக எரிக் சைமன்ஸ்!



இந்திய அணியின் பந்து வீச்சு ஆலோசகராக எரிக்சைமன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடருக்குப் பின்னர் இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக இருந்த வெங்கடேஷ் பிரசாத் மற்றும் களத்தடுப்புப் பயிற்சியாளரான ரொபின்சிங் ஆகி யோர் நீக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் இந்திய அணியின் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு ஆகியன மோசமாக இருந்துவருகிறது. சிறப்புப் பந்து வீச்சுப் பயிற்சியாளர் இல்லாதமையால் அணியின் ஆட்டத் திறனைப் பாதிப்பதாகக் கருத்து நிலவியது.

இதைத் தொடர்ந்து இந்திய அணிக்குப் பந்து வீச்சுப் பயிற்சியாளரை நியமிப்பதற்கு இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்து, தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர்களான எரிக் சைமன்ஸ், டொனால்ட் ஆகியோரின் பெயர்கள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியின் பந்து வீச்சு ஆலோசகராக எரிக் சைமன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எவ்வளவு காலம் ஆலோசகராக நீடிப்பார் என்பது தெரிவிக்கப்படவில்லை.

47 வயதான எரிக்சைமன்ஸ் 2002-2004 வரை தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக இருந்துள்ளார். 23 ஒருநாள் போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆஸிக்கெதிரான எஞ்சிய தொடர்களிலும் பாகிஸ்தான் வீரர் அப்துல் ரஸாக் இல்லை



ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் 'ருவெண்ரி-20' போட்டிகளில், அப்துல் ரஸாக் காயம் காரணமாக சேர்த்துக்கொள்ளப்படமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கடைசி டெஸ்ட் போட்டி, ஹோபார்ட்டில் நாளை ஆரம்பமாகிறது. இதனையடுத்து இரு அணிகளுக்கு மிடையிலான 5 ஒருநாள் மற்றும் ஒரு 'ருவெண்ரி-20' போட்டி நடைபெறவுள்ளது.

ஐ.சி.எல். அமைப்பிலிருந்து விலகி, சர்வதேச 'ருவெண்ரி-20' போட்டிகளில் பாகிஸ்தான் அணியில் முக்கிய பங்கு வகித்த சகலதுறை வீரரான அப்துல் ரஸாக் அணியில் சேர்க்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், உள்ளூர் போட்டி ஒன்றில் விளையாடியபோது கையில் பந்து தாக்கியமையால் அப்துல் ரஸாக் காயம் அடைந்துள்ளார், இதன் காரணமாக அவரை ஒரு மாதம் ஓய்வு எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார். இதனால் அவர் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடருக்கான அணியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார் எனத் தெரியவருகிறது.

## இம்ரான் தாஹிர் நீக்கம்

தென்னாபிரிக்க அணியிலிருந்து இம்ரான் தாஹிர் திடீரென நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகனஸ்பார்க்கில் நாளையதினம் ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் பாகிஸ்தான் 'ஏ' அணியில் விளையாடி வந்த சுழற்பந்து வீச்சாளரான இம்ரான் தாஹீர் சேர்க்கப்பட்டிக்கிறார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணியிலிருந்து இம்ரான் தாஹிர் திடீரென நீக்கப்பட்டுள்ளார். தாஹிருக்கான நிரந்தரக் குடியுரிமை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிதான் கிடைக்கும். அதற்கு முன்பு ஆடினால் பிரச்சினைகள் உருவாகும் என்பதால்தான் அவர் அணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார் என தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை விளக்கமளித்துள்ளது.

30 வயதான தாஹிர் தென்னாபிரிக்கப் பெண்ணைத் திருமணம் முடித்து அந்த நாட்டில் வசித்துவருகிறார். தென்னாபிரிக்காவில் உள்ள உள்ளூர் அணியான ஈஸ்டன்ஸ் அணிக்கும், இங்கிலாந்தில் உள்ள உள்ளூர் அணியான ஹாம்ப்ஷயர் அணிக்கும் விளையாடி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எல்லாப் புகழும் பந்துவீச்சுக்கே!




''இலங்கையுடனான வெற்றிக்குரிய எல்லாப் புகழும் பந்துவீச்சாளர்களுக்கே'' - இவ்வாறு இந்திய அணியின் தலைவர் டோனி கூறியுள்ளார்.

இலங்கையுடன் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் வெற்றி பெற்றமை குறித்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு:-

''கடந்த ஓராண்டுகளில் இந்திய அணியின் சிறந்த களத்தடுப்பு இதுவாகும். எல்லாப் பந்துவீச்சாளர்களும் தமது திறமைக்கேற்ப பந்து வீசினார்கள். ஆனால், வெற்றிக்கான எல்லாப் பெருமையும் வேகப்பந்து வீச்சாளர்களையே சாரும்.

அவர்கள்தான் தொடக்கத்தில் இலங்கையின் விக்கெட்டுகளை வேகமாக வீழ்த்தி சிறந்த தொடக்கம் அமைந்துக் கொடுத்தனர்.

சஹீர்கானின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. சுதீப் தியாகி, ஸ்ரீசாந்த் ஆகியோரும் நன்றாகவே பந்து வீசினார்கள்.

துடுப்பாட்டத்தில் தினேஷ் கார்த்திக் நல்ல ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தார். துரதிர்ஷ்டவசமாக அவரால் அரைச்சதத்தை எட்ட முடியவில்லை. கடந்த சில ஆட்டங்களில் விராட் கோஹ்லி தொடர்ந்து சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது மகிழ்ச்சியளிக்கிறது'' - என்றார்.

## எமது ஆட்டம் குறித்து சொல்ல ஏதுமில்லை




''இந்தியாவுடன் நடந்த இன்றைய (நேற்றுமுன்தினம்) போட்டியின் எமது ஆட் டம் குறித்துக் கூறுவதற்கு எதுவும் இல்லை. அதேவேளை, இந்தியாவுடன் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் நிச்சயமாக சிறப்பாக விளையாடி இந்தப் போட்டியில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்து - கிண்ணத்தைக் கைப்பற்றுவோம்''

- இவ்வாறு இலங்கை அணியின் தலைவர் சங்ககாரக் கூறியுள்ளார்.

இந்தியாவுடனான போட்டியில் தோல்வியடைந்த பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இன்றைய (நேற்றுமுன்தினம்) ஆட்டத்தில் இலங்கை அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு ஆகியவற்றின் செயற்பாடு குறித்து சொல்வதற்கு எதுவுமில்லை.

நல்லவேளையாக இது இறுதிப்போட்டியாக அமையவில்லை. இதில் செய்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்டுள்ளோம். இறுதிப் போட்டியின்போது தவறுகளைச் சரி செய்து கொண்டு நிச்சயம் சிறப்பாக ஆடுவோம்'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA SOCIAL ACTION CENTER

JSAC

18/1, Kailasapillaiayar Kovil Road, Nallur Jaffna

**Vacancy for the post of Finance Assistsnt**

Applications are invited for the post of Finance Assistant from the suitable candidates with the following qualifications.

1. The Person should have financial background & experience
2. Good interpersonal and liaison skills with an excellent of written and spoken English.
3. Age should be not less than 22 Years.
4. Good Analytical skills & profound knowledge of MS office & Excel as well as experience with an established book keeping software.
5. Excellent interpersonal skills and ability to work in a multicultural setting.
6. previous experience required preferably with local NGO's or International NGO's.

Applications should be forwarded to **co-ordinator, Jaffna social Action center, 18, Kailasapillaiyar kovil Road, Nallur Jaffna** on or before 20 th of January 2010. Also mention as " The Application for the post of Finance Assistant" at the upper left corner of the envelop.


## அமரர் புவனேஸ்வரி கந்தையா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06★12★1927 மறைவு 05.01.2008

**திதி: 12.01.2010**

என்னைப் பெத்த ராசா என
பெற்ற மகனை உற்றுப்பார்த்து
அழைப்பாள் அன்னை
அதில்தான் இருக்கிறது
எத்தனை உண்மை!
எப்போது பிள்ளையைப்
பெற்றாளோ அப்போதுதான்
தாயும் பிறந்தாள்
பிரசவம் என்பது சவமாகிப்
பின் மீண்டும்பிறப்பது என்பதுதான்

பிள்ளைகள் நலமாய் வாழ உலகில்
எத்தனை தெய்வங்களுண்டோ
அத்தனை தெய்வங்களை மன்றாடி
கவசம் பாடிடுவாள்
கண்ணீர் வடித்து நிற்பாள்


தன்பசியறியாள் தனது பிள்ளைகள்
பசியுடன் உள்ளார்களா என்பதை
ஆராய்ந்து கொண்டிருப்பாள்
எவ்வேளையாவது பிள்ளைகளைக்
கண்டால் கேட்கும் முதல் கேள்வி
சாப்பிட்டாயா? என்பதாகவே இருக்கும்

கருவறையில் சிசுவைச் சுமந்து
பெற்றதனால் காலம் முழுவதும்
நோயைச் சுமந்து நிற்பாள்
ஆனால் பெற்ற பிள்ளைகள்
நலமாய் வாழத் தினம்
பிரார்த்தனை செய்து நிற்பாள்
கண்முன்னே வாழ்ந்த கருணை மிகு
அன்புத் தெய்வம் நீயம்மா
எங்களைப் பெற்றெடுப்பதற்காய்
பத்துத்தடவை செத்துப் பிறந்தவளே
பரிதவிக்கவிட்டு நிரந்தரமாய்
எம்மைப் பிரிந்து ஆண்டுகள்
இரண்டாகிறன ஆனாலும்
நினைவுகளால் என்றும்
எம்முடன் வாழ்கிறாய் அம்மா!

(சி/5637758)

ஈரமான நினைவுகளோடு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
தகவல் : ஜெயகுமார்
தொடர்பு : மருதலிங்கம் தொ.பே 4591370

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையில் சுகாதார மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய

**தர்மலிங்கம் இரவிராஜ்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தினை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுச் சுகாதார பொறியியல்பிரிவு,
மாநகரசபை,
யாழ்ப்பாணம். (93760)

பொறுப்பதிகாரியும்,
மேற்பார்வையாளர்களும்,
அலுவலக உத்தியோகத்தர்களும்.

## பெற்றோல் நிரப்பிய வேளை திடீரெனத் தீப்பற்றி எரிந்தது மோட்டார் சைக்கிள்!

யாழ்ப்பாணம், ஜன 12

கொடிகாமம் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்பிக்கொண்டிருந்தார் ஒருவர். அப்போது அந்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது.

அங்கிருந்தவர் வந்து தீயை பெரும் சிரமப்பட்டு அணைத்தார். எனினும் அந்த மோட்டார் சைக்கிள் எரிந்து பெருமளவில் சேதமடைந்துவிட்டது. மோட்டார் சைக்கிள் இயங்கிய நிலையில் பெற்றோல் நிரப்பப்பட்டதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

கொடிகாமம், மந்துவிலைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு எரிந்து நாசமாகியது. நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ஒ-14)

## சாவச்சேரி லயன்ஸ் கழக பொங்கல் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பொங்கல் விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் நடைபெறவிருக்கின்றது.

காலை 6 மணிக்கு ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியை யாழ்ப்பாணத்திலிருந்தும் காலை 6.10 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியை யாழ்ப்பாணத்திலிருந்தும் காலை 6.30 மணிக்கு பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியை கைதடியில் இருந்தும் காலை 6.45 மணிக்கு இருபாலாருக்கான வேகநடைப்போட்டி (நுணாவில் சந்தியிலிருந்தும் ஆரம்பமாகவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரியில் கிறீஸ்மரம், கயிறிழுப்பு உள்ளிட்ட மைதானப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

மாலை 6 மணிக்கு கலாசார விழாவும் பரிசளிப்பும் தென்மராட்சிக் கலைமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக லயன் ஆர்.ஜெயபாலன், லயன் வி. மகாலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வார்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விமலாஸ் வியாபார நிலையம், சாவகச்சேரி நவீன சந்தை, உரிமையாளர் லயன் எஸ். கே. நவரத்தினம். யாழ்.டேவிட் பீரிஸ் கற்பனியிலிருந்தோ அதற்கான விண்ணப்பத்தைப் பெற்று விண்ணப்பிக்க முடியும். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனியான விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு இரு துவிச்சக்கரவண்டிகள் உட்பட பல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (1 - 16)

## வரணி சுட்டிபுரம் பகுதியில் நெற்பயிர்கள் நாசம்

வடமராட்சி கிழக்கு, ஜன. 12

வரணி, சுட்டிபுரம் கோயில் பகுதியில் அமைந்துள்ள தும்புருவில் வயல் வெளியில் பல ஏக்கர் நெற்பயிர்கள் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன. அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளம் வழிந்தோடாமல் வயல் நிலங்களிலும் வாய்க்காலிலும்கம்பனி என்பவற்றில் தேங்கி நிற்கின்றது. வாய்க்காலின் ஒரு பகுதியில் மிதிவெடி அபாயம் குறித்து எச்சரிக்கை அறிவித்தல் கள் காணப்படுகின்றன.

மிதிவெடிகள் அகற்றப்படாத நிலையில் வாய்க்காலின் அப்பகுதியை புனரமைக்க முடியவில்லை என்று புனரமைப்பு பணியில் ஈடுபட்ட விவசாய சம்மேளன பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஒ-122)

## மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்து

யாழ்ப்பாணம், ஜன.12

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளைப் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் நால்வர் காயங்களுக்கு உள்ளாகினார்கள்.

மல்லாகம்-காங்கேசன்துறை வீதி, 7ஆம் கட்டையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் தாயும் மகனும், மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த சகோதரர்கள் இருவரும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

படை முகாமுக்குச் சமீபமாக இடம்பெற்ற விபத்துக் குறித்து இராணுவத்தினர் பதிவு செய்து கொண்டு இரு பகுதியினரையும் வைத்தியசாலைக்குச் செல்ல அனு… சைக்கிள் சேதம் அடைந்ததாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஒ)


## ஈஸ்வரன் போக்குவரத்து சேவையின் அனுசரணையுடன் அதி சொகுசு பஸ் சேவை




நேற்று (11.01.2010) திங்கட்கிழமைதொடக்கம் கொழும்பில் இருந்து ஆரம்பமாகி நடைபெறுகின்றது. தினமும் 29 ஆசனங்களே பதிவுசெய்யப்படும்.

ஆசனப் பதிவுகள்:
யாழ்ப்பாணத்தில்..
★115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
★ தொ.பே.: 222 2813, 4317
★வரணி மீசன்
145, நவீன சந்தை,
தொ.பே.இல: 021 222 2868
★மருதம் தொலைத் தொடர்பகம்
நெல்லியடி,
தொ.பே. 2263210

கொழும்பில்...
★ ஈஸ்வரன் ராவல்ஸ்போர்ட்
201பி, டாம் வீதி,
கொழும்பு. 2433889
★சிற்றி கொம்யூனிக்கேசன்
346,காலி வீதி,
கொழும்பு - 6.
தொ.பே. 2361711
★மைக் கொம்யூனிக்கேசன்
487, காலிவீதி,
கொழும்பு - 6. 2362140
★சன்றைஸ் பூட் சிற்றி
6, 37 ஆவது லேன்
தொ.பே. 0117207046


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சசிகலா அவர்களின் அன்புத் துணைவர்

**தர்மலிங்கம் ரவிராஜ்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிக வும் கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (93749)

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்ரிமேரி சறோஜா ஜெயராணி

கடந்த 09.01.2010 சனிக்கிழமை இறைபதம் அடைந்த கிறிஸ்ரிமேரி சறோஜா ஜெயராணியின் இறுதிக் கிரியைகள் இன்று 12.01. 2010 செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை 13. 01.2010 புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

களபாவோடை, ஏழாலை. (93766)
தகவல்: பிள்ளைகள்.

### திருமதி ஷ.சிவபாக்கியம்




தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் 14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவபாக்கியம் அவர்கள் 10-01-2010 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஷண்முகரத்தினத்தின் (வில்லூன்றி புனித தீர்த்தக்கேணி ஊழியர்) அன்பு மனைவியும், கமலநாதன், ஆதீசன் (டோகா), தினேசா (அன்னை புத்தகசாலை ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-01-2010) செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (93756)

14,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்: வைரமுத்து ஷண்முகரத்தினம் (கணவர்).

### திருமதி நல்லையா பாக்கியம்



யாழ்ப்பாணம், கலட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பாக்கியம் நேற்று (11.01.2010) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், புஸ்பராசா, பூபாலசிங்கம், சறோஜாதேவி (ஜேர்மனி), வசந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், தங்கராசா (ஜேர்மனி), யோகேஸ்வரன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜேர்மனியில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/18, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். (93747)
தகவல் : ந.பூபாலசிங்கம் குடும்பத்தினர் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதந்திர தேசத்தில்
சமத்துவமாய் வாழ..
ஜனநாயகம் நிலைக்க..
எதிர்காலம் செழிக்க..

யாழ்மக்கள் பட்டதுன்பம் பறக்கலாச்சு
தொட்டதெல்லாம் துலங்கும் காலம் தொடங்கலாச்சு!

வன்னிமக்கள் வாழ்வினிலே இருந்த இன்னல்
வளம்மிக்க செயற்பாட்டால் மறையலாச்சு!

எழுகதிரோன் திசையென்னும் கிழக்கு மண்ணில்
ஏற்றமிகு வாழ்வை மக்கள் ஏற்கலாச்சு!

மலையகத்துப் பசுமைமிகு மண்மீதெங்கும்
மலர்ந்துள்ள புது வாழ்வு தொடரலாச்சு!

தமிழ் பேசும் மக்கள் கூடத் தலைநகரில்
தலை நிமிர்ந்து வாழுந் தன்மை தன்னைப் பெற்றார்!

எங்கள் தெரிவு



மஹிந்த ராஜபக்ஷ

தமிழர்தம் வாழ்வில்
வீசட்டும் வசந்தம்


## மரண அறிவித்தல்கள்

### ஆசைப்பிள்ளை மனோன்மணி



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை-மனோன்மணி (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி சிதம்பரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பி தம்பதியினரின் மருமகளும், காலஞ் சென்ற நல்லம்மா மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்லத்துரை, சோதி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கருணாநிதி (ஏழாலை), மற்றும் ஜெகநாதன்(சுன்னாகம்) ஆகியோரின் பெரிய தாயாரும், பிரபாகரன் (இத்தாலி), சுசீலா, லலிதா (கொழும்பு), சறோஜா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான சிறிதரன், கிரிதரன் மற்றும் கிரிஜா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் நாவற்குழி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாவற்குழி பிண முருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
நாவற்குழி.

தகவல் :
குடும்பத்தினர்.

(சி/564082)

### தருமலிங்கம் ரவிராஜ்

(பொதுச் சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகரசபை)



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் ரவிராஜ் (பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ்.மாநகரசபை) நேற்று (11.01.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் புவனேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், சசிகலாவின் (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்) அன்புக்கணவரும், சாரங்கனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராசா மற்றும் சின்னப்பிள்ளையின் அன்பு மருமகனும், மோகன்ராஜ், ஜெயராஜ், சத்தியராஜ், ஆகியோரின் சகோதரனும் பிரபாலினி, யசோதா, ஆரணி, இராஜகணேசன், இராஜவரதன், இராஜமோகன், ஜானகி, இராஜவிசாகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி,
கொடிகாமம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(93762)

## 400 குடும்பங்களுக்கு ரூ.5,000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன. 12

நலன்புரிநிலையங்களிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 400 குடும்பங்களுக்கான மீள்குடியமர்வு உதவு தொகை ரூபா 5ஆயிரம் நேற்றுத் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி யின் உதவி அமைப்பாளரும் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளருமான சூ.அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) உதவு தொகையை வழங்கினார். (ஒ-207)

## டெங்கு ஒழிப்பு பிரசார ஊர்வலம்

கோண்டாவில், ஜன.12

கோண்டாவில் பிரதேச சமுர்த்தி சங்கத்தினர் மற்றும் கோண்டாவில் பகுதி பொது சுகாதார பிரிவினர் ஆகியோர் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவர்களுடன் இணைந்து இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு டெங்கு ஒழிப்பு பிரசார ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகும் இந்தப்பிரசார ஊர்வலம் கோண்டாவில், தாவடி, இணுவில் பிரதான வீதிகள் ஊடாகச் செல்லும் (ஒ-49)


## நீண்ட காலக் குத்தகைக்கு வீடு, காணி தேவை

4-8 அறைகளுடன் தோட்ட வசதிகள் உள்ள வீடு நீண்ட காலக் குத்தகைக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் உடன் தேவை. குத்தகைக்கு விட விரும்புபவர்கள் 15 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:- 5972
சே/பா உதயன்
அல்லது
mmslanka@gmail.Com

(3972)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபையை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை:
T.P: 0774440172

(93758)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
தெ.கஜேந்திரன் அவர்களின் அன்பு
மனைவி
திருமதி Dr.ரேணுகா கஜேந்திரன்
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும்
அடைவதோடு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.
(நலன்புரிப் பாடசாலை)

(93746)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சின்னம்மா



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சின்னம்மா 10.01.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பர் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் சுப்பையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும் தம்பிராசா (கரிகட்டுக்குளம், பூநகரி), குணரெத்தினம் (பூநகரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புலேந்திரன், கனகாம்பிகை, விஜயலட்சுமி, மகேந்திரன் (பொலிஸ் உத்தியோகத்தர், திருகோணமலைத் தலைமையகம்), காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் பாலேந்திரன் (டாக்டர் - ஆயுள்வேதம், பூநகரி), மனோகரன் (லண்டன்), திவாகரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர், சுப்பிரமணியம் மற்றும் கணேசலிங்கம் (புனிதவதி புடைவையகம், கல்வியங்காடு), சந்திரா (கனடா), சுமதி, கணேஸ்வரி (லண்டன்), ராஜேஸ்வரி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயானந்தி, நக்கீரன், ஜெயமோகன், ஜெயரூபா, ஜெயந்தன், சந்திரவதனி, சந்திரமோகன், முகுந்தன், பாஸ்கரன், தயாழினி, அரவிந்தன், தர்சினி, நிசாந்தினி, சாரங்கி, லுசானி, சஞ்சயன், தீபன், சுஜிதா, நிலானி, கஜானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நல்லூர் வடக்கு, கலைமகள் வீதியில் உள்ள மருமகன் கணேசலிங்கத்தின் இல்லத்தில் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு. தொ. பே.021 5680234

தகவல்:
பிள்ளைகள்.

(93761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர் தீவிரம்

## வீடு, வீடாகச் சென்று அவர்கள் மக்களுக்கு விளக்கம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் டெங்கு நோய் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இன்று செவ்வாய்க்கிழமை முகாமைக் கற்கைகள் வணிக பீட மாணவர்களால் யாழ். மாநகர சபை எல்லைக்குள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் நேற்று விவசாயபீட மாணவர்கள் பங்கெடுத்திருந்தனர்.

இதேவேளை 'டெங்கு ஒழிப்பு வாரம்' பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு இந்த நோயின் விபரீதம் குறித்து விளக்கம் அளித்து வருகின்றனர்.

பொதுமக்கள் தங்களின் சுற்றாடல் பகுதியை எவ்வாறு பேணவேண்டும் என்பது குறித்தும் நுளம்புகளால் ஏற்படும் தொற்றுக்கள் மற்றும் நோய்களின் பாதிப்புக்கள் குறித்தும் அவர்கள் விளக்கம் அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய காலகட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ள அதே சமயம், அவர்களின் பொறுப்புணர்வை பாராட்டுகின்றனர். (ஓ-10)

# மாணவருக்கான உணவு விநியோகம்: துரிதப்படுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.12

நாளைமறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கான உணவுப் பொருள்களை பாடசாலைகளுக்கு துரிதமாக விநியோகித்து முடிக்குமாறு அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக, அவர் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் முதலாம் தவணைக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்ளும் பொருட்டு உரிய ப.நோ.கூ. சங்கங்களுக்கு உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டப்புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப்பிரிவினரால் கடந்த 11ஆம் திகதி வழங்கப்பட்டுவிட்டன.

எனவே நாளை மறுதினம் 14ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் உரிய ப.நோ.கூ. சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப்பொருள்கள்களைப் பெற்று மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கலை சீரான முறையில் மேற்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-14)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா நாகம்மா



தட்டாதெரு, ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா நாகம்மா நேற்று (11.01.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-தங்கம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், ஞானேஸ்வரி, பேரின்பநாதன், குமாரசூரியர், பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானசேகரம், கமலேஸ்வரி, கனகாம்பிகை, சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவீரும் ஏற்றுக்கொள்ளவும்.

11 ஏ, கச்சேரி கிழக்கு
ஒழுங்கை, யாழ்ப்பாணம். (93768)

தகவல்:
குமாரசூரியர் (மகன்).

## திருமதி குணசிங்கம் சறோஜினிதேவி



சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி குணசிங்கம் சறோஜினிதேவி நேற்று (11.01.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம்- சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற குணசிங்கம் (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2010) புதன் கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி வைரவர் கோவிலடி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (93764)

தகவல்:
பிள்ளைகள்.

## வல்லிபுரம் சோமசுந்தரம்

(விளைவேலி, மருதடி வீரகத்தி விநாயகர் முன்னாள் உப செயலாளர்)



நுணாவில் மேற்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சோமசுந்தரம் 11.01. 2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மூளாயைச் சேர்ந்த நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மரு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்னம்மா (அமரர்), மகேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்து னரும், ஜெகதீஸ்வரி, நிர்மலா, பாலச்சந்திரன், பாரதி (ஆசிரியை யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), சௌந்தரவல்லி (சுவிஸ்), இராமச்சந்திரன் (இ.போ.ச- பருத்தித்துறை), நாகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலசுந்தரமூர்த்தி, மகேந்திரன், ஜெயமதி, சிவனேசன் (இ.போ.ச-கோண்டாவில்), ஜெயா நந்தன் (சுவிஸ்), வசந்தகுமாரி (ஆசிரியை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ராஜ்குமார் (ஜேர்மனி) ஆகி யோரின் அன்பு மாமனாரும் சைலஷா (சுவிஸ்), சுகன்ஜா (லண்டன்), நிரோஜன், துவாரகன், கௌசிகன், கௌதமன், கௌதமி, ஷங்கவி, ஜானுசன், கபிலன், அகிலன், குபேரன், மீரா (சுவிஸ்), மாயா (சுவிஸ்), ரஜீபனா, மிதுசா, சுயானா (ஜேர் மனி), கீதன் (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), யோகானந்தம் (சுவிஸ்), சந்திரசேகரம் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் கஜீவன் (சுவிஸ்), நர்த்தனா (சுவிஸ்), சஜீவன் (சுவிஸ்), சமீரா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.01.2010) செவ்வாய்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பி.ப 3 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
021 3213299, 021 3219016 (93690)

தகவல்:
குடும்பத்தினர்.

# தமிழர் பகுதி அபிவிருத்தி குறித்து இன்று பல்கலையில் உயர் மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 12

புலம்பெயர்ந்த உறவுகளின் உதவிகளைக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கை அபிவிருத்தி செய்வது தொடர்பான உயர்மட்ட மாநாடு இன்று காலை 8.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் எஸ்.சிவச்சந்திரன், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், கலாநிதி நொயல் நடேசன், ஏ.சந்திரஹாசன், கலாநிதி என்.நரேந்திரன், பேராசிரியர் எம்.சின்னத்தம்பி, டெரின்கொன்ஸ்டன்ரைன், பொறியியலாளர் எம்.இராமதாஸன், பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் விசேட உரைகளை ஆற்றவுள்ளனர்.

நான்கு அமர்வுகளாக நடைபெறும் இந்த உயர்மட்ட மாநாடு பிற்பகல் 4.30 மணிக்கு நிறைவடையும். (ஓ-1)

# பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் 200 பேரின் விவரம் பார்வைக்கு

## யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் பட்டியல்

யாழ்ப்பாணம், ஜன. 12

வன்னிப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்ட வேளை இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் 200இற்கும் மேற்பட்டவர்களின் விவரப்பட்டியல் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முதல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர், நவம்பர் ஆகிய காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டவர்களின் விவரங்களே பூஸா தடுப்பு முகாமிலிருந்து யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இணைப்பதிகாரி த.கனகராஜ் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வன்னிப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த போது பல்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 500இற்கு மேற்பட்டோரின் விவரங்கள் கடந்த இரண்டு மாதங்களிற்கு முன்னர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அந்த விவரங்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இது தவிர மேலும், 200இற்கும் மேற்பட்டோரின் விவரங்கள் நேற்று எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அந்த விவரப்பட்டியலும் தற்போது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-9-224)

## திஸநாயகத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கடவுச் சீட்டையும் தடுத்து வைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதியரசர்கள் லேக்கம்வாசம், ரஞ்சித் சில்வா ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்தப் பிணை அனுமதியை நேற்று வழங்கியது.

பிணை விண்ணப்பத்தை திஸநாயகத்தின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அனில் சில்வா தாக்கல் செய்து வாதிட்டார். அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விஜித மணல்கொட, திஸநாயகத்தைப் பிணையில் செல்ல அனுமதிப்பதை சட்ட மா அதிபர் ஆட்சேபிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

அதையடுத்து மேற்படி பிணை அனுமதியை நீதிமன்றம் வழங்கியது.

ஊடகவியலாளர் திஸநாயகம் 2008 மார்ச் 7 ஆம் திகதி கொழும்பில் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் அரசுத் தரப்பு வழக்குத் தாக்கல் செய்தது.

இன அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் விதத்தில் 'நோர்த் ஈஸ்டன்' சஞ்சிகையில் கட்டுரை எழுதினார், புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரித்தார் என்பன போன்ற குற்றச்'சாட்டுகளின் பேரில் அவருக்கு 2009 ஓகஸ்ட் 31 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது.

அத்தீர்ப்புக்கு எதிராகத் திஸநாயகம் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மேன்முறையீடு நிலுவையில் இருக்க அவரை நீதிமன்றம் இப்போது பிணையில் வெளியே வர அனுமதித்திருக்கின்றது. (அ-சி)


## முகவர் தேவை

பூபதி பாண் விற்பனை செய்வதற்கு யாழ். குடாநாடு முழுவதும் முகவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 0215757777


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ப. பிரசன்னாவின் அன்புத்தாயார்

**அமரர் பரராஜசிங்கம் பஞ்சவர்ணம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம். அத்துடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
பாலசிங்கம் பிரபாத்
(வர்த்தகர், பரம்ஸ் கடை)

மலர்வு
15.04.1973

உதிர்வு
13.12.2009

அன்னாரின் இறப்புச் செய்தி கேட்டு உடன் வந்து, உடனிருந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஏனைய வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பிய நெஞ்சங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை இடம்பெறும் 31 ஆம் நாள் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஸ்ரீமகால்'
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர சபை, யாழ்ப்பாணம்.

# உள் விவகாரங்களில் தலையிடும் இராஜதந்திரிகளை நாடு கடத்த வேண்டும் என்கிறார் பிரதமர் ரத்னசிறி

## தமிழ்க் கூட்டமைப்பின் முடிவுக்கும் அத்தகைய தலையீடே காரணமாம்

உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளை நாடு கடத்த வேண்டுமென பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கிரிந்திவெல பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளை வெளியேற்றுமாறு பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவிடம் கோரியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்ததன் பின்னணியில் சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் செயற்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் தாம் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளை நாடு கடத்த வேண்டியது அவசியமானதென அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## பயங்கர வாதத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதம் ஒருபுறமிருக்க பொருளாதாரப் பிரச்சினையாலும் நாடு சீரழிந்துகொண்டிருந்தது. விவசாயிகள் தமது உற்பத்திகளை விற்க முடியாது நஞ்சு அருந்தி உயிரை விட்டனர்.

நான் பதவியேற்றதும் இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் இல்லாதொழித்தேன். சர்வதேச நாடுகளின் அழுத்தத்திற்கு அடிபணியாது பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டினேன். இது தொடர்பில் பல நாடுகள் எனக்குக்கடுமையான நிபந்தனைகளை விதித்தன. அவை அனைத்தையும் நான் தூக்கி வீசிவிட்டேன்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்த முயற்சி செய்து தோற்றுப் போனவர்கள் இப்போது ஒன்றிணைந்து எனக்கு எதிராக செயற்படுகின்றனர்.

இன்று நாம் முற்றாக சுதந்திரமடைந்த நாட்டில் வாழுகின்றோம். முழுமையான சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றோம். மாற்றமுடியாத ஒன்றிணைந்த ஒரு சமூகமாக எம்நாட்டு மக்கள் இப்போது இருக்கின்றனர்.

புலிகளை முற்றாக ஒழித்து நாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க எமது இளைஞர்கள் கடும் தியாகத் தைச் செய்தனர் என்பதை எம்மால் மறுக்க முடியாது.

எம்முன் உள்ள இப்போதைய பிரச்சினை அபிவிருத்தியே

பயங்கரவாதத்தை ஒழித்ததன் பிறகு இப்போது எம்முன்பாக உள்ள பிரச்சினை அபிவிருத்திதான். நாம் இப்போது பல அபிவிருத்திட்டங்களை நிறைவு செய்துள்ளோம். சில திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நாட்டு மக்கள் அனைவரும் இந்நாட்டில்தான் வாழவேண்டும். அவர்களுக்கு இங்கு வாழ இடமில்லை என்று எவராலும் கூறமுடியாது.

எமது நாட்டு இளைஞர்கள் வெளிநாடுகளுக்குத் தொழில்வாய்ப்புத் தேடிச் செல்லும் நிலை மாறி வெளிநாட்டு இளைஞர்கள் எமது நாட்டுக்குத் தொழில் தேடிவரும் நிலை வரும்.

இந்த நாட்டில் ஊழல், மோசடிகளை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டும். ஜனவரி 27 ஆம் திகதிக்குப் பின் நான் ஊழல், மோசடிகளை முற்றாக ஒழித்துக்கட்ட என்னை அர்ப்பணிப்பேன்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்திற்கு அளிக்கும் வாக்குகள் இந்நாட்டின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வாக்குகளாகும்.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்ற சக்திகள் இன்னும் உள்ளன. இன்னொரு ஈழப் போராட்டத்திற்கு வழி அமைக்க அந்த சக்திகள் முயற்சி செய்துகொண்டிருக்கின்றன.

அவ்வாறான தேச விரோத சக்திகளைத் தோற்கடிப்பதற்கு இந்நாட்டு மக்கள் தயாராக வேண்டும். வடக்கு மக்'கள் அவர்களது தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொள்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் அங்கு விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் - என்றார். (அ-சி)


100 KVA Generator

100 KVA க்கு மேற்பட்ட ஜெனரேட்டர் வாடகைக்குத் தேவை.

விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

தொ. பே : 021 567 7602
021 222 9731



Opportunities

Exist for talented individuals in a "fast growing" IT company in Colombo, Jaffna or Vawunia Region

Marketing/Product Executive's (Male/Female)

The candidate should be able to work under pressure, in terms of achieving the given targets, Ability to communicate and correspond in Sinhala, Tamil & English will be an added advantage, Professional qualifications in Sales and Marketing will be an added advantage, Salary Rs. 18,000/- + +.

Accounts Clerk (Male/Female)

- A young person who posses a part qualification in ICA/CIMA or Full qualified in AAT.
- Previous experience in book keeping/Audit in a computerized environment and exposure to QB accounts application will be a definite advantage.

Technician (Male)

- The suitable candidates should have 1 year experience in PC maintenance and trouble shooting. A diploma in Computer Hardware will be an added advantage.

• School leavers are also encouraged to apply

Forward your CV with contact details within 7 days to the Manager Administration

MICRO PC SYSTEMS இல37, 37ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை
Fax: 4510686 E-mail: micropc@dialogsl.net



மங்களம் பொங்கிடும் தைத் திருநாளில்.......
மனதிற்குப் பிடித்ததொன்றை தெரிவு செய்வதற்காக
MUSIC WORLD வழங்கும் MEGA OFFER

ஜனவரி 10 முதல் ஜனவரி 15 வரை

Intel 1.6 Ghz ATOM Processor, Intel 1.6 Ghz ATOM Mother Board, 160 Gb SATA Hard Disk, 1 Gb DDR II 800 RAM, ATX Casing, AOC 16" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS — 37,500/=

Intel 2.60 Ghz Dual Core Processor, Asus G31 Mother Board, 250 Gb SATA Hard Disk, 1 Gb DDR II 800 RAM, ATX Casing, AOC 16" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS — 45,000/=

Intel 2.60 Ghz Dual Core Processor, Asus G31/Gigabyte G31Mother Board, 320 Gb SATA Hard Disk, 1 Gb DDR II 800 RAM, ATX Casing, LG / Prolink 19" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS — 48,000/=

Intel 2.60 Ghz Dual Core Processor, Asus 41 / Intel 41 Mother Board, 320 Gb SATA Hard Disk, 2 Gb DDR II 800 RAM, ATX Casing, Viewsonic 19" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS — 55,000/=

VISA
Credit Cards & Debit Cards are acceptable

Processors: Intel 1.8 Ghz Celeron 4,800/=; Intel 2.6 Ghz Dual Core 8,300/=
LCD Monitors: AOC 16" 12,000/=; Viewsonic 19" 17,000/=
RAM DDR I: 512 Mb 400 2,600/=; 1 Gb 400 4,500/=
RAM DDR II: 512 Mb 1,300/=; 1 Gb 800 2,900/=
RAM DDR III: 1 Gb 1333 3,500/=
ADSL Routers: Tp Link 1 port 3,750/=; Tp Link 2 port 3,900/=; Tp Link 4 port 5,900/=
Hard Disks: 40 Gb SATA 2,300/=; 160 Gb SATA 4,750/=
Mother Boards: 478 Motherboard 5,900/=; LGA E-Sonic G 31 5,250/=
Printers: Epson T 10 4,750/=; Samsung Laser 12,900/=
Pen Drives: Transcend 2 Gb 1,700/=; Kingston 4 Gb 1,550/=
Broadband Routers & Network Accessories: Dlink R.Band 4 port 4,900/=; Link SYS PAP 2T 7,900/=; 8 Port Switch 1,900/=; Wireless Adapter 2,900/=
LAPTOP RAM 1 Gb 400 5,250/=; USB Capture Card 4,500/=; ATX Casing with PW Sp. 2,700/=; UPS Battery (12 V / 7A) 1,350/=; Web Camera 990/=

MUSIC WORLD & COMPUTERS
141B, Palaly Road, Post Box Junction, Thirunelvely, Jaffna.
musicworld@sltnet.lk / musiccom27@yahoo.com - 021 222 6554


## வடக்கு மகாண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'மஹிந்தவின் சிந்தனை - தொலை நோக்கு' என்ற தலைப்பில் புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்பும் எண்ணத்துடன் தமது புதிய தேர்தல் விஞ்ஞாபனத்தை அவர் வெளியிட்டார்.

தேசத்திற்கு வளமானதொரு எதிர்காலம் என்ற தலைப்பில் மொத்தம் 14 தலைப்புகளில் ஒவ்வொரு விடயமாக இந்த விஞ்ஞாபனத்தில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

✱ அம்பாந்தோட்டைத் துறைமுகம், கொழும் புத் துறைமுகத் தென்பகுதி, காலி சுற்றுலாத் துறைமுகம், ஒலுவில், காங்கேசன்துறை, திருகோணமலைத் துறைமுகங்களின் அபிவிருத்தி-

✱ ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையம் அமைப்பு, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் நவீன மயமாக்கல்-

✱ அரச ஊழியர்களுக்கு இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபா சம்பள உயர்வு -

✱ 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையை இயங் கவைத்தல் -

✱ வடக்கு மாகாணசபையை இயங்க வைத்தல் -

✱ நாடாளுமன்றத்துக்கான விகிதாசாரத் தேர் தல் முறையை மாற்றுதல், தேர்தல் தொகுதி முறையை மீண்டும் தோற்றுவித்தல், சிறிய அரசியல் அணிகள் மற்றும் இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துதல்,

✱ கடந்த காலத்தில் விரும்பியோ விரும் பாமலோ தவறான வழியில் இட்டுச் செல் லப்பட்டு ஆயுத கலாசாரத்துக்குள் தமது வாழ்க் கையின் இளமைக்காலத்தைப் பறிகொடுத்து விட்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும், அவர் களின் சமூக, கலாசார அடையாளங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புனர்வாழ்வுத் தராதரங்களின் அடிப்படை யில் ஒருவருட காலத்துக்குள் புனர்வாழ்வளித்து அவர்களது பெற்றோரிடம் கையளிக்கப்படுவர்.

✱ யாழ்ப்பாணம் - கண்டி ('ஏ 9') வீதி, யாழ்ப் பாணம் - புத்தளம் வீதி அதிவேகப் பாதையாக மேம்படுத்துதல்.

✱ சுதந்திரத்தின் அடையாள நகரமாக மாங் குளம் நகரத்தை அபிவிருத்தி செய்து மார்ச் மாதம் அது மக்களுக்கு உரித்தாக்கப்படும்.

✱ யாழ். பல்கலையில் பொறியியல் பீடம் புதிதாக ஆரம்பிக்கப்படும். தொழில்நுட்பக்கல் லூரிக்கான விடுதி வசதி விஸ்தரிக்கப்படும்.

✱ 2012 இல் யாழ்ப்பாணம் தெற்காசியா வில் அதிசிறந்த நகரமாக மாற்றப்படும்.

- இவை உட்படப் பல அபிவிருத்திச் செயற் பாடுகள், உத்தேசத் திட்டங்கள் பற்றிய விவரங் கள் அந்த நீண்ட தேர்தல் விஞ்ஞாபனத் திட்டத்தில் அடங்கியுள்ளன. (அ-சி)

## பேராதனைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரத்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அப்படியில்லையாயின் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு ஆயுதப்பயிற்சி கொடுத்த கருணா என்று அழைக்கப்பட்ட அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் கைது செய்யப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த மாணவி புலிகளிடம் தற்கொலை குண்டுதாரிக்கான பயிற்சி பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமை பாரிய மனித உரிமை மீறலாகும் என்றும் உதுல் பிரேமரத்தன குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் யார் தொடர்பைப் பேணியிருந்தாலும் அவர்களைக் கைது செய்யாதீர்கள். முன்னர் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுங்கள். இதன் மூலம் மீண்டுமொரு பிரிவினைவாத சக்தி உருவாவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

அப்படி இல்லையேல் மீண்டும் ஒரு ஈழப்போராட்டம் வெடிக்கும் நிலை ஏற்படும் எனவும் உதுல் பிரேமரத்தன எச்சரிக்கை விடுத்தார்.

## கைதிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 பேருக்கு எதிராக வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என சிறைத்துறைப் பேச்சாளர் கெனர்ட் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை அநுராதபுரம் சிறைச்சாலையிலும் 28 தமிழ் அரசியல் கைதிகள் உணவு விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த போதிலும் 15 பேர் இதிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய சிறைச்சாலைகளிலும் சிலர் இந்தப் போராட்டத்திலிருந்து விலகிக்கொண்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

இதேவேளை கொழும்பு மகஸின் மற்றும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைகளிலும் போராட்டம் தொடர்வதாக சிறைச்சாலைப் பேச்சாளர் கெனர்ட் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ-சி)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத் தில்)


NEC
CLOCKTOWERROAD, JAFFNA.
மாலை நேர வகுப்புக்கள்
கணக்கீடு
P.பகீரதன்
B.B.A (FM SPL)
A/L 2010& DAY
கிரயக்கணக்கீடு
Wed. 2.30 - 4.30Pm
A/L 2011
தொங்கல் கணக்கு
Teu. Thur. 4.00-5.00Pm


## தேர்தல் விளம்ப.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை 13 ஆம் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து நாளுக்கு நாள் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன எனவும் இது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களிடம் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-சி)


A/L Physics
ஓட்ட மின்னியல்
A/L 2010 & A/L 2011
ஆரம்பம்: 13.01.2010 புதன் (2.30 - 3.30 pm)
ஆசிரியர் : திரு. ம.ஸ்பெல்மஸ் (B.sc)
இடம்: NEW SCIENCE CENTER JAFFNA TOWN (BEACON)
பாடசாலை முடிந்தவுடன் கற்கக் கூடியவாறு நேரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
(93769)



கற்சுமி வெளியீடு - 2010
♥ இவ்வருடத்திற்குரிய வெளியீடுகள் வெளிவரவுள்ளன. புதிதாக வெளியீடுகளை பெறவிரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்.
♥ பெற்றோர்/தபால் மூலம் பெற விரும்புவோர் பதிவு செய்யலாம்.
♥ வழமையான உங்கள் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.
T.P - 0212227442



தொழிற்பயிற்சிகள்
✱ Mobile Phone Repairing.
✱ ஏயர் கொண்டிசனிங்.
✱ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங்
✱ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்.
✱ Motor bycycle Repairing.
சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் : 18/01/10 (கிழமை நாள்கள்)
16/01/10 (சனி, ஞாயிறு)
விவரங்களிற்கு,
JAFFNA TECHNICAL INSTITUTE
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0718561654, 0779254078.
(ஜ/563806)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கந்தையா (நெடுந்தீவு)

நெடுந்தீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிராம சபை உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான வைத்திலிங்கம் கந்தையா நேற்று(11.01.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.01.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பனங்காணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கோபாலபிள்ளை(முன்னாள் பொது முகாமையாளர், நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம், நெடுந்தீவு)
தொ.பே.: 021 3735831

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org